# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 2020

www.tnpscthervupettagam.com











SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 9
தமிழ்நாடு செய்திகள் ........ 13
இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில் துணைப் பிரிவுகள் ........ 13
தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 1939 மீதான அவசரச் சட்டம் ........ 14
மின்னணு மற்றும் வன்பொருள் உற்பத்திக் கொள்கை ........ 14
மருத்துவக் கல்லூரிகளில் 7.5% ஒதுக்கீடு ........ 15
செயற்கை நுண்ணறிவு (AI), தொடர் சங்கிலி மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த கொள்கைகள் ........ 15
அம்மா நடமாடும் நியாய விலைக் கடை விரிவாக்கம் ........ 16
தேசியச் செய்திகள் ........ 16
NFSA 2013-ன் கீழ் மாற்றுத் திறனாளிகள் ........ 16
உடான் திட்டத்தின்கீழ் புதிய 78 வழித் தடங்கள் ........ 16
NDC – ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பு ........ 17
பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா ........ 17
கட்டுமானக் கழிவுகள் குறித்த அறிக்கை ........ 18
சமஸ்கிருதத்தில் பழமையான இந்திய அறிவியல் ........ 18
இந்திய விவசாயிகள் மற்றும் ஐக்கிய அரபு அமீரக (UAE) தொழிற் துறைகளுக்கிடையேயான மின்னணு – சந்தைத் தளம் ........ 18
சுனவ்டி – அடுத்தத் தலைமுறை ஸ்டார்ட் அப் சவால் ........ 19
முதலாவது ரோ-ரோ சேவை (Roll On Roll Off – இழுவைச் சேவை) ........ 19
தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் (NREGS) பெண்களின் பங்கேற்பு ........ 20
குடிநீர் விநியோகத்திற்கான வரைவுத் தரநிலை ........ 20
AGR கட்டணப் பிரச்சினைகள் குறித்த தீர்ப்பு ........ 21
ஜம்மு காஷ்மீரின் அலுவல் மொழிகள் ........ 21
ராஷ்டிரிய கேல் புரோட்டோசஹன் புரஸ்கர் 2020 ........ 21
மெட்பாட் - மருத்துவத் தள்ளுவண்டி ........ 22
தற்செயலான மரணங்கள், தற்கொலைகள் பற்றிய அறிக்கை ........ 22
கர்மயோகி திட்டம் ........ 23
மின்சாரத்தில் பசுமைக் கால முன்னோக்குச் சந்தை ........ 24
கேள்வி நேரத்தை ரத்து செய்தல் ........ 24
நீர்த் தலைவர்கள் சவால் ........ 25
இந்தியாவில் உள்ள இளம் குழந்தைகளின் நிலை – அறிக்கை ........ 25
மாநிலங்களின் வணிகச் சீர்திருத்தங்கள் செயல்திட்டத் தரவரிசை ........ 26
"இந்திரா கடற்படை" பயிற்சியின் 11வது பதிப்பு ........ 27
பிச்சை எடுத்தலை குற்றமற்றதாக ஆக்குதல் ........ 27
ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டம் – 2020 ........ 27
உயர்நீதிமன்ற நீதிபதி நீதிமன்ற வழக்கிலிருந்து விலகல் ........ 28
இ-சஞ்சீவினியைச் செயல்படுத்துதல் ........ 28
ஐஐடி ரூர்க்கி – பேசிக் திட்டம் ........ 29
விளம்பரங்களுக்கான வரைவு வழிகாட்டுதல்கள் ........ 29

தேசிய மூங்கில் திட்ட இலச்சினை ..... 29
பாக்பட் – தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தளம் ..... 30
பலபரிமாண வறுமைக் குறியீடு மீதான ஒத்துழைப்புக் குழு ..... 30
“ரியல் மேங்கோ” மென்பொருள் ..... 31
ஜெய்ப்பூரில் உள்ள பத்திரிக்கை வாயில் ..... 31
“பசுமை நடவடிக்கையின் TOP லிருந்து TOTAL” என்ற திட்டத்தின் கீழ் பழங்கள் மற்றும் காய்கறிகள் ..... 32
5 பொதுத் துறை நிறுவனங்கள் சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவில் இணையவுள்ளன ..... 32
2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் கைரேகைப் பதிவுகள் அறிக்கை ..... 32
பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா ..... 32
ரஃபேல் போர் விமானங்களின் சேர்க்கை ..... 33
ஆத்மநிர்பர் பாரத் அரைஸ் (ARISE) – அடல் புதிய இந்தியா சவால்கள் ..... 34
காலநிலை திறன்மிகு நகரங்கள் ஆய்வுக் கட்டமைப்பு (CSCAF) 2.0 ..... 34
தென் இந்தியாவின் முதலாவது கிசான் இரயில் ..... 35
மாநில ஸ்டார்ட் அப் தரவரிசை 2019 ..... 35
5 நட்சத்திரக் கிராமங்கள் திட்டம் ..... 36
கடல்சார் துறையின் பிரச்சினைகளுக்கான SAROD – PORTS ..... 37
ஒருங்கிணைந்த சாலை விபத்துகள் தரவுதளத் திட்டம் (iRAD) ..... 37
பண்டைய இந்தியக் கலாச்சாரத்தை ஆய்வு செய்வதற்கான குழு ..... 38
விமானத் திருத்த மசோதா, 2020 ..... 38
சுவேதா கபிலா பசுக்கள் ..... 39
ஆயுர்வேதத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான (IoTR) மசோதா, 2020 ..... 39
மத்திய அமைச்சரின் ராஜினாமா ..... 39
அஜய் டிர்கி கமிட்டி ..... 40
பொதுக் கொள்முதல் ஆணை, 2017 - திருத்தம் ..... 40
இந்தியாவின் முதல் பிரத்தியேக தனியார் ஜெட் விமான நிலையம் ..... 40
ராஜேஷ் பந்த் குழு ..... 40
சிந்து நதி ஒப்பந்தத்தின் 60 ஆண்டுகள் ..... 41
டிஆர்டிஓ-வின் புதிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மையங்கள் ..... 41
வான்வெளிக் குமிழி ஒப்பந்தங்கள் ..... 41
ராபி காலப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை (MSP) ..... 42
“பயண இலக்கு வடகிழக்கு, 2020” என்ற திருவிழா ..... 42
கர் தாக் ஒளியியல் இழைத் திட்டம் ..... 42
வானூர்திப் பிரிவில் பெண் அதிகாரிகள் ..... 43
பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் ..... 43
கொள்ளை நோய்கள் (திருத்தம்) மசோதா, 2020 ..... 43
வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா, 2020 ..... 44
ஐஐஐடி (Indian Institutes of Information Technology - IIIT) சட்டங்கள் திருத்த மசோதா, 2020 ..... 45
PASSEX – இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கடற்படைப் பயிற்சி ..... 45
சின்குன் லா சுரங்கப் பாதை ..... 45
எதிர்ப்பு உரிமை குறித்த கொள்கை ..... 46
நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2020 ..... 46
“கிரிட்டக்யா” ஹேக்கத்தான் ..... 47

கோவிட் - 19 தொற்றால் இறந்த முதல் மத்திய அமைச்சர் ........ 47
அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) மசோதா - 2020 ........ 47
வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2020 ........ 48
தொழிலாளர் சட்டச் சீர்திருத்த மசோதாக்கள் ........ 48
மாற்றுத் திறனாளி விளையாட்டுகளுக்கான மையம் ........ 49
அந்த்யோதயா திவாஸ் ........ 49
மருத்துவ சாதனங்கள் பூங்கா ........ 49
தேசிய மருத்துவ ஆணையம் ........ 50
சர்வதேசச் செய்திகள் ........ 50
ஜப்பான் பிரதமரின் பதவி விலகல் ........ 50
அமைதிப் படையில் பெண்களின் பங்கேற்பு ........ 51
சராசரி ஊதியங்களின் உலகளாவியத் தரவரிசை ........ 51
பாகிஸ்தானிற்குச் சீனாவின் போர்க் கப்பல்கள் ........ 51
உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மரம் ........ 51
மனித ஆப்பிரிக்க ட்ரைபனோசோமியாசிஸ் ஒழிப்பு ........ 52
6வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றம் ........ 52
மாற்றுத் திறனாளிகளுக்காக வேண்டி சமூக நீதியை அணுகுவது குறித்த வழிகாட்டுதல்கள் ........ 52
கவ்காஸ் – 2020 ........ 53
வரலாற்றில் முதன்முறையாக இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (UAE) இடையே நேரடி விமானச் சேவை ........ 53
உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தி சொத்துக்கள் ........ 54
கத்தாரின் தொழிலாளர் விதிகளில் மாற்றம் ........ 54
ஜி-20 அயலுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பு ........ 55
SCO ஆணைய மாநாடு – இந்தியா ........ 55
சீனாவின் இராணுவ வலிமை குறித்த வருடாந்திர அறிக்கை ........ 55
பசுமைத் தூண்டலின் சிறு புத்தகம் ........ 56
5வது பிரிக்ஸ் கலாச்சாரத் துறை அமைச்சர்களின் சந்திப்பு ........ 56
ஏகே – 203 ரைபிள்களைத் தயாரித்தல் ........ 56
3வது அமெரிக்க – இந்திய உத்திசார் பங்காளர் மன்ற (USISPF) மாநாடு ........ 57
கிரீஸ் மற்றும் துருக்கி ஆகியவற்றிற்கிடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை ........ 57
முதலாவது உலக சூரிய ஒளிசக்தித் தொழில்நுட்ப மாநாடு ........ 58
வருடாந்திர இந்தோ-பசிபிக் வணிக மன்றம் ........ 58
இந்தோ-பசிபிக் கழகம் ........ 59
ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான FAO-ன் பிராந்தியக் கருத்தரங்கு ........ 59
முதல் இந்தியா-பிரான்ஸ்-ஆஸ்திரேலியா முத்தரப்பு உரையாடல் ........ 59
கொள்முதல் மற்றும் சேவைகளுக்கிடையேயான (குறுக்கு சேவை) ஒப்பந்தம் ........ 60
இஸ்ரேல் மற்றும் பக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையேயான அமைதி ஒப்பந்தம் ........ 60
ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தில் (ECOSOC) இந்தியாவின் உறுப்பினர் அந்தஸ்து ........ 61
டிஜிபூட்டி நடத்தை விதிமுறைகள் பார்வையாளர் அந்தஸ்து ........ 61
பாகிஸ்தானின் ஐந்தாவது மாகாணம் ........ 61
இந்தியாவிற்கு மீன் ஏற்றுமதிக்கான சிறப்பு அனுமதி ........ 62
அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர்க்கான இந்தியாவின் கோரிக்கை ........ 62

சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பிற்கான சாசனம் .......... 63
நேபாளத்திற்கு டீசல் – மின்சார பல் அலகு இரயில்கள் .......... 63
மாலத்தீவிற்கு முதலாவது நேரடி சரக்குப் படகுச் சேவை .......... 64
உலகின் முதலாவது வணிக ரீதியிலான ஹைட்ரஜன் விமானம் .......... 64
ஜிம்மெக்ஸ் 2020 (Jimex) .......... 65
ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆணையச் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கை .......... 65
ஆசியாவில் ஊடாடும் தொடர்பு மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்புச் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கு (CICA) .......... 66
பொருளாதாரச் செய்திகள் .......... 66
இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2019-20 .......... 66
"Eat out to help out" திட்டம் .......... 67
இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் போக்கு .......... 67
டிஜிட்டல் கொடுப்பனவு அறிக்கையில் மோசடி மற்றும் இடர் மேலாண்மை .......... 68
முன்னுரிமைத் துறைக்கு கடன் வழங்கல் விதிகளின் திருத்திய விதிமுறைகள் .......... 68
நிறுவன அடையாளம் – Vi .......... 69
கடன் மறுசீரமைப்பிற்காகக் கண்டறியப்பட்டுள்ள 26 துறைகள் .......... 69
EASE 2.0 வங்கியியல் சீர்திருத்தங்கள் குறியீடு .......... 69
11 புதிய தொழிற்துறைப் பெருவழிப் பாதைகள் .......... 70
பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகள் குறித்த விதிகள் : (CAROTAR – 2020) .......... 71
4வது உலக ஆயுர்வேத மாநாடு .......... 72
i-ATS – தானியங்கி இரயில் கண்காணிப்பு .......... 72
இந்தியாவிற்கு எதிரான வோடபோன் வழக்கு .......... 72
நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான (UCB) இணையவழிப் பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப தொலைநோக்குப் பார்வை (2020-2023) .......... 73
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் .......... 74
AUDFs01 விண்மீன் .......... 74
மிகப்பெரிய ஹைட்ரஜன் குண்டு வெடிப்பு .......... 74
சமிக்ஞை – GW19052 .......... 75
குறுங்கோள் 465824 .......... 75
எடுத்துச் செல்லக்கூடிய ஒளியியல் குழி நுண்ணுயிரி நீக்க அலகு .......... 76
சக்கர் டிகோவ் சாதனம் .......... 76
அதிவேகத் தொழில்நுட்ப செயல்முறை விளக்க வாகனம் .......... 76
மீவுளிர் விண்முகில் LSQ14 fmgன் வெடிப்பு .......... 77
இந்திய மூளை வார்ப்புருக்கள் .......... 78
வெள்ளிக் கிரகத்தில் பாஸ்பைன் வாயு .......... 78
சூரிய ஒளி சுழற்சி 25 .......... 79
உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியின் பாகங்கள் உற்பத்தி .......... 80
முதலாவது மரபணு அடிப்படையிலான கோவிட் – 19 சோதனை .......... 81
அபயாஸ் – HEAT சோதனை .......... 81
பிரித்திவி – II ஏவுகணை சோதனை .......... 82
IoT சாதனங்களுக்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நுண் செயலி .......... 82
சுற்றுச்சூழல் செய்திகள் .......... 83
சில்லேறு நதியில் பெளி மீன் (Mahseer Fish) .......... 83

1976ற்குப் பிறகு தற்பொழுது அதிகமான ஆகஸ்ட் மழைப்பொழிவு ..... 83
புஜிவாரா விளைவு ..... 83
புதிய நன்னீர் மீன் இனம் ..... 84
ஜம்மு காஷ்மீர் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் ..... 84
காசிரங்கா தேசியப் பூங்காவின் விரிவாக்கம் ..... 85
13 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதை படிவம் - மனிதக் குரங்கினம் ..... 85
ஹாய்சென் சூறாவளி (Typhoon) ..... 86
நிலச்சீரழிவுக் குறைப்பு மற்றும் பவளப் பாறைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு ..... 86
கொச்சிக்கான பல்லுயிர்ப் பெருக்கக் குறியீட்டு வரைபடம் ..... 87
இந்தியாவின் சொந்த சுற்றுச்சூழல் பெயரிடல் - BEAMS ..... 87
காலநிலை அபாய அறிக்கையைக் கட்டாயமாக்குதல் ..... 88
கடற்கரையோரத்தில் அதிக அளவிலான திமிங்கலங்கள் ..... 88
மாநிலச் செய்திகள் ..... 89
6வது அட்டவணையில் இணைக்கப் படுவதற்கான தீர்மானம் ..... 89
அஸ்ஸாமில் திறன் பல்கலைக்கழகம் ..... 89
இந்தியாவின் முதலாவது சர்வதேச மகளிர் வர்த்தக மையம் ..... 89
இராடா பிரச்சாரம் ..... 90
வடகிழக்கின் முதலாவது திருநர் மருத்துவர் ..... 90
ஆரே ஒதுக்கப்பட்ட காடுகள் ..... 90
வங்க தேசத்திலிருந்து முதலாவது உள்நாட்டு சரக்குக் கப்பல் போக்குவரத்து ..... 91
மாநிலத்தின் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாப்பதற்கான மசோதா ..... 91
ஸ்பேரோ (SPARROW) திட்டம் ..... 91
YSR சம்பூர்ணா போஷ்னா திட்டம் ..... 92
முதலாவது கஞ்சா மருத்துவத் திட்டம் ..... 92
டெங்கு எதிர்ப்புப் பிரச்சாரம் – தில்லி ..... 92
நாட்டின் முதல் ஒருங்கிணைந்த வான்வழி மருத்துவ ஊர்திச் சேவை ..... 93
இந்தியாவில் மிகப்பெரிய பன்றித் தொழுவத் திட்டம் ..... 93
YSR ஆசாராத் திட்டம் ..... 93
கரீமா (GARIMA) திட்டம் – ஒடிசா ..... 94
“எனது குடும்பம், எனது பொறுப்பு” பிரச்சாரம் ..... 94
திரிபுராவில் முதலாவது சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZ) ..... 94
சட்டப்பூர்வமாக்கப்பட்ட பாம்புப் பிடி தொழில் ..... 95
தேசியப் பொது ஆவணப் பதிவு அமைப்பு ..... 95
மறந்து போன மதம் சார்ந்த நிறுவனங்களை வரைபடமிடல் ..... 95
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 96
நீலநிறத் தகடுடன் கூடிய நினைவு இல்ல கௌரவம் ..... 96
சிபிஎஸ்சி சிறந்த ஆசிரியர்கள் விருது 2019-20 ..... 96
இந்தியாவின் முதலாவது பெண் மற்றும் பழமையான இதய நோய் நிபுணர் ..... 97
பிரணாப் முகர்ஜி மறைவு ..... 97
தேசிய ஆற்றல் தலைவர் விருது ..... 98
கேசவானந்தா பாரதி – மறைவு ..... 98
இந்திரா காந்தி அமைதிப் பரிசு ..... 99

இந்திய வானொலி வானியலின் தந்தை மறைவு ........ 100
அமெரிக்க விண்கலத்திற்குக் கல்பனா சாவ்லாவின் பெயர் ........ 100
WSIS விருது 2020 ........ 101
MGNREGA மனிதர் மறைவு ........ 101
SDGக்கான 2020 ஆண்டின் இளம் தலைவர்களின் மீதான ஐ.நா.வின் பட்டியல் ........ 102
டாக்டர் கபிலா வாத்ஸ்யாயன் காலமானார் ........ 102
72வது பிரைம்டைம் எம்மி விருதுகள் ........ 103
ஐஜி நோபல் பரிசு 2020 ........ 103
2020 ஆம் ஆண்டில் டைம்ஸின் 100 மிகவும் சக்திமிக்க மனிதர்களின் பட்டியல் ........ 104
பனிச் சிறுத்தை அங் ரிட்டா ஷெர்பா காலமானார் ........ 104
உலகக் கட்டிடக் கலை விருது ........ 105
எஸ்.பி.பி. காலமானார் ........ 105
தொற்றா நோய்களின் கட்டுப்பாடு குறித்த UNIATF விருது ........ 106
ஞானபீட விருது ........ 106
விளையாட்டுச் செய்திகள் ........ 107
அமெரிக்கா ஓபன் 2020 ........ 107
முக்கிய தினங்கள் ........ 107
தேசிய ஊட்டச்சத்து வாரம் – செப்டம்பர் 01/07 ........ 107
உலகத் தேங்காய் தினம் – செப்டம்பர் 02 ........ 108
சர்வதேச கருணை தினம் – செப்டம்பர் 05 ........ 108
ஆசிரியர் தினம் – செப்டம்பர் 05 ........ 109
நீல வான்வெளிக்கான தூய்மைக் காற்றின் சர்வதேச தினம் – செப்டம்பர் 07 ........ 109
சர்வதேச கல்வியறிவு தினம் – செப்டம்பர் 08 ........ 110
தாக்குதல்களிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 09 ........ 110
உலக தற்கொலைத் தடுப்பு தினம் – செப்டம்பர் 10 ........ 111
தெற்கு-தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐக்கிய நாடுகள் தினம் – செப்டம்பர் 12 ........ 111
இமயமலை திவாஸ் – செப்டம்பர் 09 ........ 112
உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 12 ........ 112
இந்தி திவாஸ் – செப்டம்பர் 14 ........ 113
தேசிய பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15 ........ 113
சர்வதேச மக்களாட்சி தினம் – செப்டம்பர் 15 ........ 114
ஓசோன் அடுக்குப் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 16 ........ 114
தேசிய வனத் தியாகிகள் தினம் – செப்டம்பர் 11 ........ 114
உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17 ........ 115
சர்வதேச சம ஊதிய தினம் – செப்டம்பர் 18 ........ 116
உலக நீர்க் கண்காணிப்புத் தினம் – செப்டம்பர் 18 ........ 116
உலக மூங்கில் தினம் (WBD – World Bomboo Day) – செப்டம்பர் 18 ........ 116
சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு நாள் - செப்டம்பர் 20 ........ 117
சர்வதேசக் கடற்கரை தூய்மையாக்கல் தினம் – செப்டம்பர் 19 ........ 117
சர்வதேச அமைதி தினம் – செப்டம்பர் 21 ........ 117
உலக அல்சைமர் (மறதி நோய்) நோய் தினம், செப்டம்பர் – 21 ........ 118
சுழிய உமிழ்வுகள் தினம் – செப்டம்பர் 21 ........ 118

உலக ரோஜா தினம் – செப்டம்பர் 22 .... 119
உலக மகிழுந்துப் பயன்பாடற்ற தினம் – செப்டம்பர் 22 .... 119
சர்வதேச சிவப்புப் பாண்டாக் கரடி தினம் – செப்டம்பர் 19 .... 120
காண்டாமிருக தினம் – செப்டம்பர் 22 .... 120
சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23 .... 121
உலகக் கடல்சார் போக்குவரத்து தினம் – செப்டம்பர் 24 .... 121
நாட்டு நலப் பணித் திட்ட தினம் – செப்டம்பர் 24 .... 122
உலக மருந்து தயாரிப்பாளர் தினம் - செப்டம்பர் 25 .... 122
அணு ஆயுதங்களை முற்றிலுமாக அகற்றுவதற்கான பன்னாட்டு நாள் - செப்டம்பர் 26 .... 123
உலக கருத்தடை நாள் - செப்டம்பர் 26 .... 123
சி.எஸ்.ஐ.ஆர் நிறுவப்பட்ட நாள் - செப்டம்பர் 26 .... 124
உலகச் சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26 .... 124
உலக சுற்றுலா தினம் – செப்டம்பர் 27 .... 124
உலக நதிகள் தினம் – செப்டம்பர் 27 .... 125
உலக வெறிநாய்க்கடி நோய் தினம் – செப்டம்பர் 28 .... 125
உலகளாவிய அளவிலான தகவல் அணுகலுக்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 28 .... 126
உணவு இழப்பு மற்றும் வீண் செய்தல் குறித்த விழிப்புணர்வின் சர்வதேச தினம் – செப்டம்பர் 29126
உலக இதய தினம் – செப்டம்பர் 29 .... 127
சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் – செப்டம்பர் 30 .... 127
இறை நிந்தனை தினம் – செப்டம்பர் 30 .... 127
இதரச் செய்திகள் .... 128
பள்ளிக் குழந்தைகள் மீதான யுனிசெப் அறிக்கை .... 128
உலகளாவிய முதல் 20 பால் நிறுவனம் – ரபோபாங்க்கின் வருடாந்திரப் பட்டியல் .... 128
உலகளாவிய புத்தாக்கக் குறியீடு .... 129
ரெனாட்டி சோழர் காலத்துக் கல்வெட்டு .... 129
உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2021 .... 130
உணவு முறைகளுக்காக வேண்டி தேசிய அளவிலான நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDC) மேம்படுத்துதல் அறிக்கை .... 131
பார்வைக் கண்ணோட்டத்திலிருந்து நடவடிக்கைகள் : கோவிட் – 19 தொற்றின் மத்தியில் பாலின சமநிலை குறித்த அறிக்கை .... 132
2017 – 18 ஆம் ஆண்டிற்கான NSO ஆய்வு .... 132
குழந்தை இறப்பு நிலைகள் மற்றும் போக்குகள் அறிக்கை 2020 .... 133
டிஜிட்டல் பிளவு பற்றிய NSOவின் அறிக்கை .... 134
2023 ஆம் ஆண்டிற்கான இறங்குமுகக் கணிப்பு : உலகளாவிய மாறுபக்க கொழுப்புப் பொருள் ஒழிப்பு – 2020 மீதான உலக சுகாதார நிறுவன அறிக்கை .... 135
உலகளாவிய பொருளாதார சுதந்திரக் குறியீடு 2020 .... 136
வாழும் கோள் அறிக்கை 2020 .... 136
அறிவியலில் ஒன்றிணைதல் – 2020 ஆம் ஆண்டு அறிக்கை .... 137
சூழலியல் அச்சுறுத்தல் பதிவேடு .... 138
மனித மூலதனக் குறியீடு .... 139
உலகப் பொலிவுறு நகரக் குறியீடு .... 140
நாசாவின் தலைமையில் தாழ் வெப்ப மண்டலம் குறித்த ஆய்வு .... 140
நீடித்த மீட்பு குறித்த சிறப்பு அறிக்கை .... 141

# TNPSC துளிகள்

- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான ஏ. ஆர். லட்சுமணன் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
    - தற்பொழுது இவர் நீதியரசர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களால் தலைமை தாங்கப் படும் முல்லைப் பெரியார் குழுவில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக உள்ளார்.
- இந்திய இரயில்வேயானது 2030 ஆம் ஆண்டிற்குள் 33 பில்லியன் அலகுகளை உள்ளடக்கிய தனது ஆற்றல் நுகர்வை அடைய உள்ளது.
    - இந்திய இரயில்வேயின் தற்போதைய வருடாந்திர ஆற்றல் தேவையானது ஏறத்தாழ 21 பில்லியன் அலகுகளாக உள்ளது.
- இந்தியாவானது அடுத்த ஆண்டில் நடத்தப்பட இருக்கும் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளோடுப் பொருந்திப் போகும் வகையில் 2021 ஆம் ஆண்டின் பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவின் செயின்ட் பிரான்சிஸ் உயர்நிலைப் பள்ளியானது கல்வி மாற்றத்திற்கு தனது பங்களிப்புகளிலிருந்து மாணவர்களின் சிறந்த தேர்வு முடிவுகளை வெளிக்காட்டியதில் அதன் சிறப்புமிகுச் செயல்பாட்டிற்காக 2020-21 ஆம் ஆண்டின் மைக்ரோசாப்ட் காட்சிப் பள்ளியாக (Microsoft Showcase School) மைக்ரோசாப்ட் நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி சரியான அளவுடைய ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு அளிப்பதற்காக வேண்டி 2020 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தை "போஷன் மாஹ்" அல்லது "ஊட்டச்சத்து மாதமாக" அனுசரிக்குமாறு அறிவித்துள்ளார்.
- இந்தியா மற்றும் இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் FIDE (International Chess Federation) செஸ் ஒலிம்பியாட்டின் கூட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
    - FIDE செஸ் ஒலிம்பியாட்டின் இறுதிச் சுற்றில் இந்தியா நுழைந்துள்ளது இதுவே முதன்முறையாகும்.
- ஜெர்மனியைச் சேர்ந்த பெய்ரன் முனிச் என்ற கால்பந்து அணியானது, பாரீஸ் செயிண்ட் ஜெர்மாயின் என்ற அணியினை வீழ்த்தியதன் மூலம் 6வது முறையாக 2019-20 ஆம் ஆண்டின் யுஇஎப்ஏ சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்று உள்ளது.
- அகமதாபாத் இரயில்வே மண்டலமானது அகமதாபாத் இரயில் நிலையத்தில், பயண உடைமைகள் கிருமி நாசினி மற்றும் தூய்மையாக்கல் இயந்திரத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்திய இரயில்வேயில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது இயந்திரம் இதுவாகும்.
- கூகுள் நிறுவனமானது உலகம் முழுவதும் 250 நாடுகளுக்கும் மேல் கூகுள் மீட், கூகுள் கிளாஸ்ரூம், ஜி சூட் மற்றும் அதன் இதரப் பொருட்களில் 50 புதிய அம்சங்களை வழங்கும் வகையில் "எங்கும் பள்ளி" என்ற ஒரு புதிய முன்னெடுப்பை அறிவித்து உள்ளது.
- சமீபத்தில் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது "தேக்கோ அப்னா தேஸ்" என்ற தொடரின் கீழ் "ஹைதராபாத்தின் கலாச்சாரப் பாரம்பரியம்" என்ற தலைப்பு கொண்ட 50வது இணையவழிக் கருத்தரங்கை நடத்தியது.
    - இந்தத் தொடரானது இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தளங்களை ஊக்கப் படுத்துவதையும் அது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- லாரா என்ற சூறாவளி (ஹரிக்கேன்) ஆனது அமெரிக்காவில் லூசியானாவின் கேமரானிற்கு அருகில் மிகக் கடுமையான அபாயகரமான 4ம் வகைப் புயலாகக் கரையைக் கடந்துள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தின் நாரணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி கணிதப் பட்டதாரி ஆசிரியரான கருணைதாஸ் அவர்கள் மைக்ரோசாப்ட்டின் சர்வதேச சிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - அதே போன்று நாரணாபுரம் அரசு உயர் நிலைப் பள்ளியானது மைக்ரோசாப்டினால் சிறந்த பள்ளியாக (மைக்ரோசாப்ட் கண்காட்சிப் பள்ளி) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ராமச்சந்திர குஹா அவர்கள், "கிரிக்கெட்டின் காமன்வெல்த்: மனித இனத்திற்குத் தெரிந்த மிகவும் நுட்பமான மற்றும் அதிநவீன விளையாட்டுடன் ஒரு வாழ்நாள் ரீதியிலான அன்பு நிலை" (The Commonwealth of Cricket: A Lifelong Love Affair with the Most Subtle and Sophisticated Game Known to Humankind) என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- டிஆர்டிஓ அமைப்பானது தற்போதைய மற்றும் எதிர்காலப் பாதுகாப்பு மற்றும் போர்ச் சூழல் தேவைகளுக்கு வேண்டி தனது 52 ஆய்வகங்களைச் சீரமைப்பதற்காக V. ராமகோபால் ராவ் என்பவரது தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.
    - இதற்கு முன்பு ஒரு குழுவானது 2008 ஆம் ஆண்டில் P ராமாராவ் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது.
- விகே யாதவ் என்பவர் இரயில்வே வாரியத்தின் முதலாவது தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - இரயில்வேயின் வரலாற்றில் இந்தப் பதவியை வகிக்கும் முதலாவது நபர் இவராவார்.
- உஷா பதே என்பவருக்கு விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகமையின் பொது இயக்குநர் என்ற கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
    - இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதலாவது பெண் மற்றும் மூன்றாவது ஐஏஎஸ் அதிகாரி இவராவார்.
- அதானி குழுமமானது மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையத்தில் 74% பங்கை வாங்கியுள்ளது.
    - இது தற்பொழுது GMR குழுமத்திற்கு (Grandhi Mallikarjuna Rao groups) பின்பு இந்தியாவில் இரண்டாவது மிகப்பெரிய தனியார் செயல்பாட்டு நிறுவனமாக உருவெடுத்துள்ளது. GMR குழுமமானது தில்லி மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்களை நிர்வகித்து வருகின்றது.
- முதன்முறையாக, உத்தரகண்ட்டின் டேராடூனில் உள்ள ஏகலைவா மாதிரி வசிப்பிடப் பள்ளியான கால்சி என்ற பள்ளியின் துணை முதல்வரான சுதா பெய்னுளி அவர்கள் 2020 ஆம் ஆண்டின் தேசிய ஆசிரியர் விருத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இஷா மற்றும் ஆகாஷ் அம்பானி ஆகியோர் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் இந்த ஆண்டிற்கான மிகவும் செல்வாக்குள்ள இளம் தலைவர்களின் "40ன் கீழ் 40" என்ற பட்டியலின் கீழ் பார்ச்சூன் பத்திரிக்கையினால் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- எமிரட்ஸ் என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் மற்றும் ஆனந்த பஜார் பதிப்புக் குழுமத்தின் துணைத் தலைவரான அவீக் சர்க்கார் அவர்கள் இந்தியப் பத்திரிக்கை அறக்கட்டளை அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தற்போதைய போப் பிரான்சிஸ் அவர்கள் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் "நாம் கனவு காண்போம்" என்ற புத்தகத்தை வெளியிடவுள்ளார்.


- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 07 ஆம் தேதியானது உலக மன்னித்தல் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- கூன்மீத் சிங் சௌகான் என்பவர் மாற்றம் பெறும் இந்தியாவைப் பற்றிப் பேசும் வகையில் 'இன்வெர்டோனாமிக்ஸ்' ('Invertonomics') என்ற ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.
- இரத்தினக் கற்கள் மற்றும் அணிகலன் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆணையமானது இலகுரக வைரங்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி தனது முதலாவது காணொலி வாயிலான வாங்குதல் மற்றும் விற்பது குறித்த ஒரு சந்திப்பைத் தொடங்கி வைத்து உள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது தில்லியில் 140 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரயில் பாதைகளின் ஓரமாக இருக்கும் 48,000 சேரிக் குடிசைகளை அகற்ற அறிவுறுத்தியுள்ளது.
- மகிந்திரா குழுமத்தைச் சேர்ந்த ராஜன் வதேரா என்பவர் இந்தியத் தானியங்கி வாகன உற்பத்தியாளர்கள் (Indian Automobile Manufacturers) சமூகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- யுனிசெப் அமைப்பானது கொரானா வைரஸ் நோய்த் தடுப்பு மருந்தின் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்கு முழுமையாக தலைமை வகிக்கும் என்று கூறியுள்ளது.
    - உலகில் இதே வகையைச் சேர்ந்த மிகப்பெரிய மற்றும் துரிதமான விரைவான நடவடிக்கை இதுவாகும்.
- இந்தியா, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் காணொலி முறையில் மாநாடு ஒன்றை நடத்தின.
    - இந்த மாநாட்டின் போது இந்த நாடுகள் ஐந்தாம் தலைமுறை (5G) தொழில்நுட்பத்தில் ஒன்றிணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளன.
- ஆஸ்திரேலிய அரசானது இந்தியாவுடன் மேம்பட்ட வர்த்தக உறவுகளுக்காக முன்னாள் கிரிக்கெட் வீரரான மேத்திய ஹைடன் மற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அரசியல் தலைவரான லிசா சிங் ஆகியோரை வர்த்தகத் தூதுவர்களாக நியமித்துள்ளது.
- முன்னணி டென்னிஸ் விளையாட்டு வீரரான நோவாக் ஜோகோவிக், டென்னிஸ் பந்தைக் கொண்டு களத்தில் உள்ள பெண் நடுவரைத் தற்செயலாக தாக்கியதைத் தொடர்ந்து அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியிலிருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப் பட்டார்.
- வருவாய் சீர்திருத்தங்களின் ஒரு முக்கியப் பகுதியாக கிராம வருவாய் அலுவலர் பதவிகள் தெலுங்கானா மாநில அரசால் நீக்கப் பட்டுள்ளன.
    - இவர்கள், அனைத்து முக்கிய நிலப் பதிவுகளையும் பதிவு செய்யும் கடைமட்ட நிலை அதிகாரிகள் ஆவர்.
- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனமானது உலகின் மிகவும் மதிப்பு மிக்க நிறுவனங்களின் பட்டியலைக் கொண்ட முதல் 40 இடம் கொண்ட பட்டியலுக்குள் நுழைந்துள்ளது.
    - ஒரு நாளுக்குள்ளான சந்தை மூலதனத்தில் 200 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பைப் பெற்று முன்னிலை வகிக்கும் முதலாவது` இந்திய நிறுவனம் இதுவாகும்.
- யுனிசெப் இந்தியா என்ற அமைப்பானது "அனைத்துக் குழந்தைகளுக்காகவும் வேண்டி" (For Every Child) என்ற குழந்தை மீதான உரிமைகள் பிரச்சாரத்திற்காக ஆயுஷ்மான் குரானா என்பவரைத் தனது நட்சத்திரத் தூதுவராக நியமித்துள்ளது.

- முதுபெரும் நடிகரான பரேஷ் ராவல் என்பவர் தேசிய நாடகப் பள்ளியின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளரான யோஷிஹைடு சுகா என்பவர் அந்த நாட்டின் பதவி விலகிய பிரதமரான ஷின்சோ அபே அவர்களுக்குப் பதிலாக அந்நாட்டின் அடுத்த பிரதமராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- ஹரிவன்ஷ் அவர்கள் மாநிலங்களவையின் 12வது துணைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - இவர் இந்தப் பதவியை 2018 ஆம் ஆண்டு முதல் வகித்து வருகின்றார்.
- சைலஜா ஆசிரியர் என்று வெகுவாக அழைக்கப்படும் கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சரான K.K. சைலஜா ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள பிராஸ்பெக்ட் என்ற பத்திரிக்கையினால் கோவிட்-19 நோய்த் தொற்றுக் காலத்தில் உலகின் முதல் 50 சிந்தனையாளர்களின் வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- "ஆசாதி : சுதந்திரம், பாசிசம், கற்பனை" (Azadi: Freedom. Fascism. Fiction) என்ற தலைப்பு கொண்ட ஒரு புதிய புத்தகமானது அருந்ததி ராய் அவர்களால் எழுதப் பட்டதாகும்.
    - இந்தப் புனைவுக் கதை புத்தகமானது உலகில் அதிகரித்து வரும் சர்வாதிகாரப் போக்கில் சுதந்திரத்தின் பொருளை எடுத்துக் காண்பிக்கும் கட்டுரைகளின் ஒரு தொகுப்பாகும்.
- டாடா குழுமமானது லார்சன் மற்றும் டூப்ரோ என்ற நிறுவனத்தை வீழ்த்தி இந்தியாவின் புதிய பாராளுமன்றத்தைக் கட்டமைக்கும் ஒப்பந்தத்தில் வெற்றி பெற்றுள்ளது.
    - இந்தப் புதிய பாராளுமன்ற வளாகமானது மத்தியக் கட்டிட (விஸ்டா) மறுகட்டமைப்பின் ஒரு பகுதியாக ஒப்பந்தம் விடப்பட்டு, இறுதி செய்யப் பட்ட முதலாவது திட்டங்களில் ஒன்றாகும்.
- எண்ணெய் வயல்களில் இருந்து எண்ணெய் எடுக்கப்பட்டதிற்கான பணம் செலுத்தப் படாததின் காரணமாக, இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கழகமானது சமீபத்தில் சூடான் எண்ணெய் வயல்களிலிருந்து வெளியேறியது.
- 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதி இந்தியாவின் பிற துணை இராணுவப் படைகளுக்கு இணையாக இரயில்வே பாதுகாப்புப் படைக்கு ஆயுதப்படை அந்தஸ்தை வழங்கியதை நினைவு கூறும் வகையில் இரயில்வே பாதுகாப்பு படை எழுச்சி நாளானது செப்டம்பர் 20 அன்று கொண்டாடப் படுகிறது.
- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரான அனில் தாஸ்மனா அவர்கள் தேசியத் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- தேசியப் பாதுகாப்பு குறித்த பிரிக்ஸ் உயர்மட்டப் பிரதிநிதிகளின் 10வது சந்திப்பானது ரஷ்யாவின் தலைமையில் காணொலி வாயிலாக நடத்தப்பட்டது.
- அமெரிக்காவானது தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி டிக்டாக், வீசாட் ஆகிய சீன நாட்டுச் செயலிகளைத் தடை செய்துள்ளது.
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் டைட்டன் நிறுவனம் ஆகிய இரண்டும் "டைட்டன் பே" எனப்படும் கடிகாரங்களின் மூலம் வழங்கப்படும் ஒரு நேரடித் தொடர்பற்ற வழங்கீட்டுச் சேவையைத் தொடங்குவதற்காக இணைந்துள்ளன.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுத் துறைக் கழகமானது, 50,000 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக கோர்சேரா (CoursEra) என்ற ஆன்லைன் கற்றல் தளத்துடன் இணைந்துள்ளது.

- குஜராத்தின் சூரத்தைச் சேர்ந்த குஷி சந்தாலியா என்ற 17 வயது நிரம்பிய ஒரு சிறுமி ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் துன்சா சூழலியல் பாதுகாப்பினால் இந்தியாவிற்கான ஒரு பிராந்தியத் தூதுவராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது ஆக்ராவில் கட்டப்பட்டு வரும் முகலாயப் பேரரசிற்கு என்று அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு அருங்காட்சியகத்தின் பெயரை மாற்றுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது சத்ரபதி சிவாஜி மகாராஜரின் பெயர் கொண்டு சூட்டப்பட இருக்கின்றது.
- இந்தியாவின் மிகப்பெரிய திரைப்பட நகரமானது உத்தரப் பிரதேசத்தின் கௌதம் புத்தா நகரில் (நொய்டா) அமைக்கப்பட உள்ளது.
- இந்திய வரலாற்றாய்வாளர் மற்றும் ஆசிரியரான ரோமிலா தாப்பர் அவர்கள் "கருத்து வேறுபாடுகளின் மீதான குரல்கள்" என்ற ஒரு புதிய புத்தகத்தை எழுதி உள்ளார்.
- விமான லெப்டினன்ட் சிவாங்கி சிங் என்பவர் ரஃபேல் போர் விமானத்தை இயக்க இருக்கும் இந்தியாவின் முதல் பெண் போர் விமானி ஆவார்.
- உலக செய்தி வெளியீட்டாளர்கள் சங்கத்தின் வருடாந்திரப் பத்திரிகைச் சுதந்திர விருதான 'தி கோல்டன் பென் ஆஃப் ஃப்ரீடம்' (The Golden Pen of Freedom) என்பது கொலம்பியப் பத்திரிகையாளரான ஜினெத் பெடோயா லிமாவுக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- எல் ஆதிமூலம் என்பவர் இந்திய நாளிதழ் சமூகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
  - இது நாட்டில் நாளிதழ்கள், பத்திரிக்கைகள் மற்றும் வார (அ) மாத இதழ் வெளியீட்டாளர்களின் ஒரு தலைமை அமைப்பாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில் துணைப் பிரிவுகள்




- தங்களது சமூகத்திற்குள்ளேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்களை அளிப்பதற்காக மாநிலங்களே பட்டியலிடப்பட்ட வகுப்பினர், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைத் துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- இது பட்டியலிடப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 18% இடஒதுக்கீட்டிற்கு உள்ளேயே 3% இடஒதுக்கீட்டை அளிக்க வழிவகை செய்யும் தமிழ்நாடு அருந்ததியர்கள் சட்டம், 2009 என்ற சட்டமானது தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும் என்பதைக் குறிக்கும்.
- இந்த அமர்வானது இந்திய உச்சநீதிமன்றத்தின் 2004 ஆம் ஆண்டுத் தீர்ப்பான E.V. சின்னய்யா எதிர் ஆந்திரப் பிரதேச மாநிலம் என்பதிலிருந்து வேறுபட்டு கருத்து கூறியுள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசானது பட்டியலிடப்பட்ட வகுப்பினர் பிரிவில் உள்ள 74 பிரிவினர் கொண்ட பட்டியலில் 7 வகுப்பினரை ஒன்றிணைத்து அச்சமூகத்திற்கு சிறப்பு இடஒதுக்கீட்டை அறிமுகப் படுத்தியது.
- இந்த உள் இடஒதுக்கீடானது நீதியரசர் ஜனார்த்தனன் தலைமையிலான ஆணையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 1939 மீதான அவசரச் சட்டம்

- தமிழ்நாடு மாநில ஆளுநரான பன்வாரி லால் புரோகித் அவர்கள் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939 (2வது திருத்தம்) என்ற சட்டத்தின் மீதான அவசரச் சட்டம், 2020 என்ற ஒரு சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்று காரணமான பொது முடக்கம் மற்றும் சமூக இடைவெளி விதிகளின் விதிமீறல்களை "கூட்டுக் குற்றமாக" ஆக்கியுள்ளது.
- இது இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் நபர்களுக்கு எதிரான வன்முறை சார்ந்த செயல்பாடுகளைத் தடை செய்கின்றது.
- இந்த அவசரச் சட்டமானது வணிக அமைப்புகள் மற்றும் இதர பொது இடங்களுக்காக வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளை மீறுபவர்களுக்கு அபராதமாக ரூ.5,000 விதிக்க வழிவகை செய்கின்றது.
- பொது இடங்களில் முகக் கவசம் அணியாதவர்களுக்கு ரூ.200 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.
- பொது இடங்களில் எச்சில் உமிழ்பவர்கள் மற்றும் சமூக இடைவெளியை மீறுபவர்களுக்கு ரூ.500 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.
- தனிமைப்படுத்தல் விதிகளை மீறுபவர்களுக்கு ரூ.500 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.

## மின்னணு மற்றும் வன்பொருள் உற்பத்திக் கொள்கை

- தமிழ்நாடு மாநில அரசானது மின்னணு மற்றும் வன்பொருள் உற்பத்திக் கொள்கையை (Electronics and Hardware Manufacturing Policy) வெளியிட்டுள்ளது.
- இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கம் 2025 ஆம் ஆண்டில் மின்னணுத் தொழிற்துறையின் உற்பத்தியை 100 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கச் செய்வதே ஆகும்.
- தமிழ்நாடு மாநிலமானது இந்தக் கொள்கையின் செயல்பாட்டுக்குப் பின்னர் நாட்டின் ஒட்டு மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 25% பங்களிப்பை அளிக்க உள்ளது.

- இந்தக் கொள்கையானது 2019 ஆம் ஆண்டின் தேசிய மின்னணுக் கொள்கையுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது.
- இந்தக் கொள்கையானது பின்வரும் 3 பிரிவுகளின் கீழ் மாவட்டங்களை அடையாளம் கண்டுள்ளது.

| பிரிவு | தொகை | மானியம் |
|---|---|---|
| A | Rs 200 crores - Rs 500 crores | 15% |
| | Above Rs 500 crores | 18% |
| B | Rs 200 crores - Rs 500 crores | 20% |
| | Above Rs 500 crores | 24% |
| C | Rs 200 crores - Rs 500 crores | 25% |
| | Above Rs 500 crores | 30% |

## மருத்துவக் கல்லூரிகளில் 7.5% ஒதுக்கீடு

- மாநில மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் மொத்த இடங்களில் 7.5% இடங்களை அரசுப் பள்ளிகளில் இருந்து பயின்று வரும் மாணவர்களுக்கு ஒதுக்கும் மசோதாவை தமிழக மாநில சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இந்த இடங்கள் 2020 ஆண்டின் நீட் தேர்வில் பங்கேற்கும் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களின் பிரிவில் அவர்களுக்கான தேர்ச்சி மதிப்பெண்களுக்கேற்ப தகுதி பெறுபவர்களுக்கு ஒதுக்கப்படும்.
- இந்தப் புதிய ஒதுக்கீடு மாநிலத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவ இடங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகுக்கிறது.

## செயற்கை நுண்ணறிவு (AI), தொடர் சங்கிலி மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த கொள்கைகள்

- நாட்டில் தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் அறநெறி சார்ந்த செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI), தொடர் சங்கிலி மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த கொள்கைகளை வெளியிடும் முதலாவது மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்து உள்ளது.
- இந்தக் கொள்கையானது 2020 ஆம் ஆண்டிற்கான கனெக்ட் என்ற மாநாட்டின் 19வது பதிப்பின் நிறைவு விழாவின் போது தமிழ்நாடு மாநில முதலமைச்சரால் வெளியிடப் பட்டது.
- இந்தக் கொள்கையானது AI-ஐ அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளின் பரிணாமத்திற்கான 6 பரிணாம டிஏஎம்-டிஇஎப் (TAM-DEF) என்ற கட்டமைப்பைப் பரிந்துரைக்கின்றது.
- வெளிப்படைத் தன்மை & தணிக்கை, பொறுப்புடைமை, சட்டப்பூர்வ பிரச்சினைகள், தவறான பயன்பாட்டிற்கு எதிரான பாதுகாப்பு, டிஜிட்டல் பகுப்பு & தரவுப் பற்றாக்குறை, அறநெறி கொண்டது, நியாயமானது & பங்களிப்பு கொண்டது போன்ற கட்டமைப்பின் கூறுகளானது மேற்கூறிய பரிணாமமானது ஜனநாயக விழுமியங்களைச் சீரமைப்பதை உறுதி செய்கின்றது.

### அம்மா நடமாடும் நியாய விலைக் கடை விரிவாக்கம்




- ❖ தமிழ்நாடு மாநில அரசானது மாநிலம் முழுவதும் அம்மா நடமாடும் நியாய விலைக் கடைத் திட்டத்தை விரிவாக்கம் செய்துள்ளது.
- ❖ தற்பொழுது, நீலகிரி, நாமக்கல், சேலம் மற்றும் இதர தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் இது போன்ற நியாய விலைக் கடைகள் (48 கடைகள்) மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.
- ❖ இந்த திட்டமானது 2014 ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வரான ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ❖ தற்பொழுது, தமிழ்நாடு மாநில அரசானது மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்களில் மேலும் 3501 நடமாடும் நியாய விலைக் கடைகளைத் திறந்ததன் மூலம் இந்தத் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்துள்ளது.

## தேசியச் செய்திகள்


### NFSA 2013-ன் கீழ் மாற்றுத் திறனாளிகள்

- ❖ மத்திய அரசானது அனைத்து மாற்றுத் திறனாளிகளும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA - National Food Security Act), 2013 என்ற சட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் என்று மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.
- ❖ ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் பயன்கள் NFSA சட்டம் அல்லது மாநிலங்களின் பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் கீழ் உள்ளடங்காதவர்களுக்கு வழங்கப் படுகின்றது.
- ❖ தற்பொழுது குடும்ப அட்டை இல்லாத மாற்றுத் திறனாளிகள் ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் பயன்களைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

### உடான் திட்டத்தின்கீழ் புதிய 78 வழித் தடங்கள்

- ❖ மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது பிராந்திய இணைப்புத் திட்டத்தின் 4வது சுற்றின் கீழ் 78 புதிய வழித் தடங்களுக்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- ❖ இதுவரை 766 புதிய வழித் தடங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளன.

- UDAN திட்டத்தின் 4வது சுற்றானது வட கிழக்குப் பகுதிகள், தீவுகள் மற்றும் மலைப் பிரதேசங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது.
- UDAN திட்டமானது 2016 ஆம் ஆண்டு மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.




## NDC – ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பு

- நிதி ஆயோக்கானது நாடு தழுவிய நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDC - Nationally Determined Contributions) ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பின் (TIA - Transport Initiative for Asia) "இந்தியக் கூறு" (India Component) வெளியிட்டுள்ளது.
- இது இந்தியா, வியட்நாம் மற்றும் சீனாவில் சுடர்க்கரி நீக்கல் முறையிலான போக்குவரத்திற்கான (decarbonize transport) ஒரு விரிவான அணுகுமுறையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிராந்திய முன்னெடுப்பாகும்.
- ஒவ்வொரு பங்காளர் நாடுகளிலும், NDC-TIA ஆனது பாரீஸ் ஒப்பந்தத்தின் NDC-ன் இலக்குகளை அடைய அதன் துறைசார் பங்களிப்புகளை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- NDC-TIA ஆனது 4 ஆண்டு கால அளவில் ஒரு செயல்திட்டத்தைக் கொண்டுள்ளது.

## பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா

- 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனாவின் (PMJDY - Pradhan Mantri Jan Dhan Yojna) 6வது ஆண்டாவது தற்பொழுது அனுசரிக்கப் பட்டது.
- PMJDY-ன் நோக்கம் வங்கியல் சேமிப்பு வைப்புக் கணக்குகள், பணம் அனுப்புதல் (தாய் நாட்டிற்கு), கடன், காப்பீடு, எளிய முறையில் ஒய்வூதியம் வழங்குதல் போன்ற நிதியியல் சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதாகும்.
- PMJDY-ன் முழக்கம், "மேரா காட்டா - பாக்யா விதாத்தா" என்பதாகும்.
- பின்னர் இது "ஒவ்வொரு குடும்பம்" என்ற நிலையிலிருந்து "வங்கிச் சேவை பெறாத அனைத்துப் பதின்மர்" என்ற நிலையின் மீது கவனம் செலுத்துகின்றது.

- இது மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் கீழ் நிதியியல் சேவைத் துறையினால் செயல்படுத்தப் படுகின்றது.
- கைபேசிச் செயலியான ஜன் தன் தர்ஷக் என்ற ஒரு செயலியானது வங்கிக் கிளைகள், ஏடிஎம்கள் போன்ற வங்கிச் சேவை இடங்களைக் காண்பிப்பதற்கான குடிமக்களை மையமாகக் கொண்ட ஒரு தளத்தை அளிப்பதற்காகத் தொடங்கப் பட்டு உள்ளது.

## கட்டுமானக் கழிவுகள் குறித்த அறிக்கை

- சமீபத்தில் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையமானது கட்டுமானக் கழிவுகள் குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அதன்படி, இந்தியா அதன் இடிபாடுகள் மற்றும் கட்டுமானக் கழிவுகளில் 1% அளவினை மட்டுமே மறுசுழற்சி செய்கின்றது.
- இந்தியா ஒவ்வொரு ஆண்டும் 150 மில்லியன் டன்கள் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை உற்பத்தி செய்கின்றது.
- எனினும், அதன் அதிகாரப்பூர்வ மறுசுழற்சித் திறனானது 1% மட்டுமேயாகும். அதாவது ஒரு நாளைக்கு 6500 டன்களாகும்.
- 2017 ஆம் ஆண்டிற்குள்ளாக ஏறத்தாழ 53 நகரங்களில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளிலிருந்து பொருட்களை மீட்டெடுப்பதற்காக வேண்டி மறுசுழற்சி வசதிகள் ஏற்படுத்தப் பட்டன.
- ஆனால், 2020 ஆம் ஆண்டு வரையில் 13 நகரங்கள் மட்டுமே இதனை நடைமுறையில் ஏற்படுத்தியுள்ளன.

## சமஸ்கிருதத்தில் பழமையான இந்திய அறிவியல்

- ஐஐடி-இந்தூர் கல்வி நிறுவனமானது தனது மாணவர்களுக்கு சமஸ்கிருதத்தில் செவ்வியல் அறிவியல்சார் பாடங்களைக் கற்பிப்பதற்காக தன்னளவில் முதலாவது இதே வகையைச் சேர்ந்த பாடப்பிரிவு ஒன்றை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது ஆயிரம் ஆண்டுகள் பழமையான பாஸ்கராச்சார்யாவின் ஆய்வுக் கட்டுரையான "லீலாவதி" என்பதுடன் தொடங்குகின்றது.
- ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தப் பாடப்பிரிவிற்காக இதில் உலகம் முழுவதிலும் இருந்து ஏறத்தாழ 750ற்கும் மேற்பட்ட நபர்கள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.
- இதன் முதல் பதிப்பானது காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2 ஆம் தேதியன்று முடிவடையும்.

## இந்திய விவசாயிகள் மற்றும் ஐக்கிய அரபு அமீரக (UAE) தொழிற் துறைகளுக்கிடையேயான மின்னணு – சந்தைத் தளம்

- ஐக்கிய அரபு அமீரகமானது "AGRIOTA" எனப்படும் ஒரு புதிய தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் வேளாண் பொருள் வர்த்தகத் தளத்தை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவைச் சேர்ந்த ஊரக விவசாயிகள் மற்றும் வளைகுடா உணவுத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கிடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட உள்ளது.
- இந்த மின்னணு-சந்தைத் தளமானது இந்திய விவசாயிகள் இடைத்தரகர்களை அணுகாமல் நேரடியாக ஐக்கிய அரபு அமீரக உணவுத் தொழிற்சாலைகளை அணுக அனுமதிக்கின்றது.

- இது விநியோகச் சங்கிலியை ஒருங்கிணைக்கின்றது.
- இது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தொடர்பு கண்டறிதல் மூலம் ஏற்படுத்தப்படும் மதிப்பை உறுதி செய்யவுள்ளது.
- இந்தத் தளமானது UAE நாட்டின் (United Arab Emirates) உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை மேம்படுத்த உதவ உள்ளது.

## சுனவ்டி – அடுத்தத் தலைமுறை ஸ்டார்ட் அப் சவால்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது “சுனவ்டி” என்ற அடுத்தத் தலைமுறை ஸ்டார்ட் அப் சவால் போட்டியைத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள இரண்டாம் நிலை நகரங்களின் மீது சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் மென்பொருள் சாதனங்கள் மற்றும் ஸ்டார்ட் அப்களை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு இந்தியா முழுவதும் உள்ள இந்தியாவின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா மையங்களின் மூலம் அரசிடமிருந்து பல்வேறு உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன.

## முதலாவது ரோ-ரோ சேவை (Roll On Roll Off – இழுவைச் சேவை)

- பெங்களூருவில் நெலமங்கலாவிலிருந்து பலே (சோலாப்பூருக்கு அருகில்) வரையில் தென்மேற்கு இரயில்வேயின் முதலாவது ரோ-ரோ சேவையானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்திய இரயில்வேயில் தனியாரால் நிர்வகிக்கப்படும் ரோ-ரோ இரயில் சேவை இது மட்டுமே ஆகும்.
- “ரோல் ஆன் ரோல் ஆப்” என்பது திறந்தவெளி இரயில் பெட்டிகளில் பல்வேறு பொருட்களுடன் சாலை வாகனங்களை எடுத்துச் செல்லுதல் என்பதைக் குறிக்கின்றது.
- ரோரோ சேவையானது சாலை மற்றும் இரயில் போக்குவரத்தின் சிறந்த அம்சங்களின் ஒரு கூட்டாகும்.
- ரோ-ரோ இரயில் சேவைகளானது முதன்முறையாக 1999 ஆம் ஆண்டில் கொங்கன் இரயில்வேயில் தொடங்கப் பட்டுள்ளது.



## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் (NREGS) பெண்களின் பங்கேற்பு

- NREGS (National Rural Employment Guarantee Scheme) தளத்தின் படி, 2013-14 ஆம் ஆண்டிலிருந்து NREGS-ல் பெண்களின் பங்கேற்பு குறைவாக உள்ளது.
- இது 52.46% ஆகக் குறைந்துள்ளது.
- இத்தரவின்படி, NREGS திட்டத்தின் கீழ் 13.34 கோடி பயனாளிகள் உள்ளனர்.
- இதில் 6.58 கோடி பெண்கள் உள்ளனர்.
- இதில் பெண்கள் பங்கேற்பின் தேசிய சராசரியானது 2.24% ஆகக் குறைந்துள்ளது.
- மாநிலங்களிடையே ஆந்திரப் பிரதேச மாநிலமானது இதில் அதிகபட்சமாக 3.58% சரிவைக் கண்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் இத்திட்டத்தில் பெண்களின் பங்கேற்பானது 2019 ஆம் ஆண்டில் 60.5% ஆக இருந்தது.
- இது தற்பொழுது 56.47% ஆகக் குறைந்துள்ளது.
- இதற்கு அடுத்து மேற்கு வங்காளம், தெலுங்கானா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மிகுந்த சரிவைக் கண்டுள்ளன.
- கேரள மாநிலமானது 91.38% என்ற அளவுடன் அதிகபட்ச பெண்கள் பங்கேற்பைக் கொண்டுள்ளது.
- இதற்கு அடுத்து, புதுச்சேரி, தமிழ்நாடு, கோவா, இராஜஸ்தான் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை அதிகபட்ச பெண்கள் பங்கேற்பைக் கொண்டுள்ளன.
- ஜம்மு-காஷ்மீரானது குறைந்தபட்ச பெண்கள் பங்கேற்பைக் கொண்டுள்ளது.
- அங்கு இது 30.72% ஆக உள்ளது.
- இதற்கு அடுத்து உத்தரப் பிரதேசம், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் குறைந்தபட்ச அளவிலான பெண்கள் பங்கேற்பைக் கொண்டுள்ளன.

## குடிநீர் விநியோகத்திற்கான வரைவுத் தரநிலை

- இந்தியத் தரநிர்ணய அமைப்பானது (BIS - Bureau of Indian Standards) குழாய்க் குடிநீர் விநியோகத்திற்கான வரைவுத் தரநிலையைத் தயாரித்துள்ளது.
- இது "குடிநீர் விநியோகத் தரநிர்ணய மேலாண்மை அமைப்பு – குழாய்க் குடிநீர் விநியோகச் சேவைகளுக்கான தேவைகள்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த வரைவானது BIS பொதுக் குடிநீர் விநியோகச் சேவைகள் பிரிவுக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த வரைவானது 2024 ஆம் ஆண்டு வாக்கில் ஊரகக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான மற்றும் போதுமான அளவிலான குடிநீரை அளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது குடிநீரில் துகள் பொருட்களின் வரம்பிற்கான தரநிர்ணய நிலையை வழங்குகின்றது.
- இது ஆர்செனிக், நீரின் பிஎச் அல்லது கார அளவு, அதில் கரைந்துள்ள உப்புகள், நிறம், வாசனை, கலங்கல் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## AGR கட்டணப் பிரச்சினைகள் குறித்த தீர்ப்பு

- இந்தத் தீர்ப்பானது நீதிபதி அருண் மிஸ்ரா அவர்களின் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வினால் வழங்கப்பட்டுள்ளது.
- தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அவர்களது AGR (adjusted gross revenue) கட்டணங்களை 10 ஆண்டு காலகட்டத்திற்குள் மத்திய அரசிற்குச் செலுத்த வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

### *AGR கட்டணங்கள்*

- AGR என்பது சரிபார்க்கப் பட்ட மொத்த வருவாய் என்பதைக் குறிக்கிறது.
- இது பயன்பாடு மற்றும் உரிமம் குறித்து மத்திய தொலைத்தொடர்புத் துறையினால் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் ஒரு கட்டணமாகும்.
- இது உரிமக் கட்டணங்கள், அலைக் கற்றை பயன்பாட்டுக் கட்டணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.
- இது முறையே 3% - 5% மற்றும் 8% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## ஜம்மு காஷ்மீரின் அலுவல் மொழிகள்

- மத்திய அமைச்சரவையானது ஜம்மு காஷ்மீர் மொழி மசோதா – 2020 என்ற மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது உருது, இந்தி, டோக்ரி, ஆங்கிலம் மற்றும் காஷ்மீரி ஆகிய 5 மொழிகளை அந்த ஒன்றியப் பிரதேசத்தின் அலுவல் மொழியாக ஆக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அங்கு சரத்து 370 நீக்கப்படுவதற்கு முன்பு, உருது மற்றும் ஆங்கிலம் ஆகியவை அம்மாநிலத்தின் அலுவல் மொழியாக இருந்தன.
- தற்பொழுது இந்தி, டோக்ரி மற்றும் காஷ்மீரி ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

## ராஷ்டிரிய கேல் புரோட்டோசஹன் புரஸ்கர் 2020


- புனேயில் உள்ள இராணுவ விளையாட்டு மையத்திற்கு (ASI - Army Sports Institute) 2020 ஆம் ஆண்டின் ராஷ்டிரிய கேல் புரோட்டோசஹன் புரஸ்கர் என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ASI ஆனது 2001 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று இந்திய இராணுவத்தின் ஒலிம்பிக்ஸ் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப் பட்டது.
- இது ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நோக்கத்துடன் வில்வித்தை, தடகளம், குத்துச் சண்டை, நீரில் மூழ்குதல், தற்காப்பு, பளு தூக்குதல் மற்றும் மல்யுத்தம் போன்ற தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 7 பிரிவுகளில் இராணுவத்தில் உள்ள திறமை வாய்ந்த வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மெட்பாட் - மருத்துவத் தள்ளுவண்டி

- கோவிட்-19 நோயாளிகளுக்கு உணவு மற்றும் மருந்துகளை வழங்க உதவும் வகையில் இந்திய இரயில்வேயானது 'மெட்போட்' என்ற ஒரு தொலைதூரக் கட்டுப்பாட்டு மருத்துவத் தள்ளுவண்டியை உருவாக்கியுள்ளது.
- இது இந்திய இரயில்வேயின் டீசல் ரெயில் என்ஜின் தொழிற்சாலையின் மத்திய மருத்துவமனையில் தனது சேவையை வழங்கி வருகிறது.
- கொரோனா நெருக்கடியின் போது, மக்களுக்குப் போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதை மட்டும் அல்லாமல், இந்திய இரயில்வேயானது கோவிட் - 19 நோயாளிகளுக்கும் வேண்டிய அளவில் பல்வேறு வசதிகளையும் வழங்கியுள்ளது.

## தற்செயலான மரணங்கள், தற்கொலைகள் பற்றிய அறிக்கை

- இந்த அறிக்கையை தேசியக் குற்றப் பதிவு ஆவணங்கள் காப்பகமானது (National Crime Records Bureau) வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களிலிருந்து கடந்த ஆண்டு நாடு முழுவதும் தற்கொலை வழக்குகள் மற்றும் தற்செயலான இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.




### *தற்கொலைகள்*

- இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் தினமும் சராசரியாக 381 பேர் தற்கொலை செய்து கொண்டதாக அறியப் படுகிறது.
- நாட்டில் தற்கொலைகள் 1,34,516 என்ற எண்ணிக்கையிலிருந்து 1,39,123 ஆக உயர்ந்துள்ளது.
- பண்ணைத் தொழில் சார்ந்தோரின் தற்கொலைகள் கடந்த நான்கு ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்துள்ளது.
- பெரும்பாலான அளவில் வேலையில்லாதவர்களின் தற்கொலைகள் கேரளாவில் 14% ஆகவும், அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (10.8%), தமிழ்நாடு (9.8%), கர்நாடகா (9.2%) மற்றும் ஒடிசா (6.1%) ஆகிய மாநிலங்களும் உள்ளன.
- வணிக நடவடிக்கைகளில் இருப்பவர்களின் பெரும்பாலான அளவிலான தற்கொலைகள் மகாராஷ்டிராவிலும், அதைத் தொடர்ந்து தமிழ்நாடு, கர்நாடகா, மேற்கு வங்கம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் நிகழ்கிறது.


- அகில இந்தியச் சராசரியுடன் ஒப்பிடும் போது நகரங்களில் தற்கொலை விகிதமானது (13.9%) அதிகமாக உள்ளது.
- மக்கள் திரள்/குடும்ப ரீதியிலான தற்கொலைகள் பெரும்பாலானவை தமிழ்நாடு (16), ஆந்திரா (14), கேரளா (11), பஞ்சாப் (9) மற்றும் ராஜஸ்தான் (7) ஆகிய மாநிலங்களில் பதிவாகியுள்ளன.

### *தற்செயலான இறப்புகள்*

- நாட்டில் தற்செயலான இறப்புகளானது 2.3% அதிகரித்துள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிக இறப்புகள் (70,329) பதிவாகியுள்ளன. இது மொத்தத்தில் ஆறில் ஒரு பங்காகும்.
- இதன் முக்கிய காரணம் 'போக்குவரத்து காரணமான விபத்துக்கள்' (43.9%) ஆகும்.
- மின்னல் காரணமாக அதிக இறப்புகள் (400) பீகார் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் (334) மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பதிவாகியுள்ளன (321).

## கர்மயோகி திட்டம்

- குடிமைப் பணிகள் திறன் மேம்பாட்டுத் திட்டமான கர்மயோகி என்ற திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தனிப்பட்ட குடிமைப் பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் நிறுவன அமைப்புகளின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய இந்தியாவின் நோக்கத்திற்கு ஏற்ப சரியான அணுகுமுறை, திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றைக் கொண்டிருக்கும் எதிர்காலத் குடிமைப் பணியாளர்களை உருவாக்க இத்திட்டமானது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- கர்மயோகி திட்டத்தின் முக்கிய நோக்கமானது எதிர்கால இந்திய குடிமைப் பணியாளர்களைப் படைப்பாற்றலுடனும், புத்தாக்கச் சிந்தனைகளுடனும், தொழிற்பண்பட்டவராக, முற்போக்காக, ஆக்கப்பூர்வமாக, கற்பனை வளமுடன், வெளிப்படையாக, செயல்திறன் மிக்க, ஆற்றல் மிக்க மற்றும் தொழில்நுட்பத்தை இயக்கக் கூடியவர்களாக மாற்றுவதன் மூலம் அவர்களைத் தயார்படுத்துவதாகும்.



## மின்சாரத்தில் பசுமைக் கால முன்னோக்குச் சந்தை




- மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் துறை அமைச்சர் மின்சாரத்திற்கான ஒரு பசுமைக் கால முன்னோக்குச் சந்தையை (GTAM - Green Term Ahead Market) தொடங்கி வைத்துள்ளார்.
- இது மின்சாரத்தில் ஒரு இந்திய அளவிலான GTAM ஆகும்.
- GTAM தளத்தின் அறிமுகமானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளமிக்க மாநிலங்கள் மீதான சுமையைக் குறைக்க இருக்கின்றது.
- GTAM-ன் சிறப்பு அம்சமானது ஆற்றலை வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களின் தெளிவான அடையாளத்துடன் இருதரப்புப் பரிவர்த்தனைகளையும் உள்ளடக்கி உள்ளது.

## கேள்வி நேரத்தை ரத்து செய்தல்

- மத்திய அரசானது மழைக்காலக் கூட்டத் தொடருக்கான கேள்வி நேரத்தை ரத்து செய்யவும் பூஜ்ய நேரத்தைக் குறைக்கவும் முடிவு செய்துள்ளது.
- முந்தைய காலங்களிலும் கேள்வி நேரமானது ரத்து செய்யப்பட்டுள்ளது.
- எனினும் இது தேசிய அவசர நிலைக் காலத்தின் போது ரத்து செய்யப்படுகிறது.
- மேலும் மத்திய சபையில் இரு அவையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே இந்தியக் குடியரசுத் தலைவர் உரையாற்றும் போதும் கேள்வி நேரம் இருக்காது.
- தற்போதைய கேள்வி நேர ரத்தானது ஒரு சாதாரணமான அமர்வின் போது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### *கேள்வி நேரம்*

- இது நாடாளுமன்ற விதிகளின் படி நடத்தப்படுகின்றது.
- நாடாளுமன்ற அமர்வின் முதல் 1 மணி நேரம் கேள்வி நேரத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளது.
- ஆனால் 2014 ஆம் ஆண்டில் மாநிலங்களவையில் கேள்வி நேரமானது 11 மணியிலிருந்து 12 மணிக்கு மாற்றப்பட்டது.
- சுதந்திரத்திற்கு முன்பு, 1893 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் முதல் கேள்வியானது கேட்கப் பட்டது.

### *கேள்விகளின் வகைகள்*

- நட்சத்திரக் குறியிடப்பட்ட கேள்வி : இந்த கேள்விகள் குரல்வழிப் பதிலை எதிர்நோக்குகின்றன. எனவே இதில் துணைக் கேள்விகளும் இடம் பெறும்.

- நட்சத்திரக் குறி அல்லாத கேள்விகள் : இந்தக் கேள்விகள் எழுத்து மூலமான பதிலை எதிர்நோக்குகின்றன. எனவே இதில் துணைக் கேள்விகள் இடம் பெறாது.
- சிறு குறிப்புக் கேள்விகள் : இது 10 நாட்களுக்குள் ஒரு அறிவிக்கையின் மூலம் கேட்கப் படும் கேள்வியாகும்.
- இதற்கு குரல் வழியாகப் பதிலளிக்கப் படுகின்றது.

## நீர்த் தலைவர்கள் சவால்

- நீர்த் தலைவர்கள் சவாலானது மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தச் சவாலின் முக்கிய நோக்கம் மக்களுக்கு நீர்ப் பாதுகாப்பு மற்றும் அதன் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- நீர்ப் பாதுகாப்பின் பதிவுகள் அவர்களின் வெற்றிகரமான செயல்பாடுகள் குறித்து பகிர்ந்து கொள்வதற்காக வரவேற்கப் படவுள்ளன.
- இது 300 சொற்களுடன் எழுத்து மூலமாகவும் 1 முதல் 5 நிமிடங்கள் வரையிலான காணொலி மூலமாகவும் மேற்கொள்ளப் படுகின்றது.
- இதில் 10 பதிவுகள் விருதுக்காக வரவேற்கப் படுகின்றன.




## இந்தியாவில் உள்ள இளம் குழந்தைகளின் நிலை – அறிக்கை

- இந்தியாவில் உள்ள இளம் குழந்தைகளின் நிலை என்ற ஓர் அறிக்கையானது "மொபைல் கிரேச்செஸ்" என்ற ஓர் அரசு சாரா நிறுவனத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இளம் குழந்தைகளின் முன்னேற்றக் குறியீடு மற்றும் இளம் குழந்தைகள் சூழலமைப்புக் குறியீடு ஆகியவை இந்த அறிக்கையின் பகுதிகளாகும்.

The index score was computed using indicators such as poverty rate, immunisation coverage, female literacy, sex ratio and percentage of households with protected water supply. India's average score was **0.585**

**Best-performing States**

| State | Index score (2015-16) |
|---|---|
| Kerala | 0.858 |
| Goa | 0.817 |
| Tripura | 0.761 |
| Tamil Nadu | 0.731 |
| Mizoram | 0.719 |

**Worst-performing States**


| State | Index score (2015-16) |
|---|---|
| Bihar | 0.452 |
| Uttar Pradesh | 0.46 |
| Jharkhand | 0.5 |
| Madhya Pradesh | 0.526 |
| Chhattisgarh | 0.555 |

### *இளம் குழந்தைகளின் முன்னேற்றக் குறியீடு*

- கேரளா, கோவா, திரிபுரா, தமிழ்நாடு மற்றும் மிசோரம் ஆகியவை குழந்தைகள் நலனில் முன்னணியில் உள்ள 5 மாநிலங்களாகும்.
- அசாம், மேகாலயா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை தேசிய சராசரியை விட குறைவான மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

### *இளம் குழந்தைகளின் சூழலியல் குறியீடு*

- கேரளா, கோவா, சிக்கிம், பஞ்சாப் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.
- சராசரியை விட குறைவான மதிப்பெண்களுடன் இருக்கும் 8 மாநிலங்கள் இதில் மிக மோசமான செயல்பாட்டைக் கொண்டுள்ளன.




## மாநிலங்களின் வணிகச் சீர்திருத்தங்கள் செயல்திட்டத் தரவரிசை

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது மாநிலங்களின் வணிகச் சீர்திருத்தங்கள் செயல்திட்டத் தரவரிசையின் 4வது பதிப்பைத் தொடங்கி வைத்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது 2019 ஆம் ஆண்டில் தொழில் தொடங்குவதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில் 1 இடம் முன்னேறி, 14வது இடத்தைப் பிடித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 15வது இடத்தில் இருந்தது.
- இதில் ஆந்திரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து உத்தரப் பிரதேசம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தத் திட்டமானது டிபிஐஐடி- உலக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது.

**QUICK PROGRESS FOR UP**

State Business Reform Action Plan (BRAP) ranking comparison

| State/UT | Rank 2019 | Rank 2018 | Change (+/-) |
|---|---|---|---|
| Andhra Pradesh | 1 | 1 | 0 |
| Uttar Pradesh | 2 | 12 | 10 |
| Telangana | 3 | 2 | -1 |
| Madhya Pradesh | 4 | 7 | 3 |
| Jharkhand | 5 | 4 | -1 |
| Chhattisgarh | 6 | 6 | 0 |
| Himachal Pradesh | 7 | 16 | 9 |
| Rajasthan | 8 | 9 | 1 |

## "இந்திரா கடற்படை" பயிற்சியின் 11வது பதிப்பு

- இந்தியக் கடற்படை மற்றும் ரஷ்யக் கடற்படை ஆகியவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இருதரப்பு கடற்படைப் பயிற்சியான "இந்திரா கடற்படைப் பயிற்சியின்" 4வது பதிப்பைத் தொடங்கியுள்ளன.
- இந்த இருதரப்புப் பயிற்சியானது வங்காள விரிகுடாவில் நடத்தப்படவுள்ளது.
- இந்த ஆண்டு இந்தப் பயிற்சியானது கோவிட் – 19 நோய்த் தொற்றினால் விதிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடுகளின் காரணமாக, "கடலில் மட்டும், மற்ற எவ்வித தொடர்புகளும் அற்ற முறையில்" நடத்தப்பட இருக்கின்றது.
- இது இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய கடற்படைகளுக்கு இடையே நீண்ட கால உத்திசார் உறவை ஒருங்கிணைப்பதற்காக வேண்டி 2003 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

## பிச்சை எடுத்தலை குற்றமற்றதாக ஆக்குதல்

- மத்திய இரயில்வே துறை அமைச்சகமானது இரயில்கள் மற்றும் இரயில்வே நிலையங்களில் பிச்சை எடுத்தலை குற்றமற்றதாக மாற்றுவதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- இது இரயில்வே சட்டம், 1989 என்ற சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் மேற்கூறியவற்றைக் குற்றமற்றதாக மாற்றுதல் அல்லது அபராதங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான ஒரு நடவடிக்கையின் பகுதியாகும்.
- மேலும் இது புகைப்பிடித்தலைக் கண்டவுடன் அதே இடத்தில் புகைப்பிடிப்பவர் மீது அபராதம் விதிக்க வழிவகை செய்கின்றது.

## ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டம் – 2020

- ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற திட்டத்தின் கீழ் கோவா மாநிலமானது ஜார்க்கண்ட் மாநிலத்துடன் இணைந்துள்ளது.
- பொது முடக்கத்தின் காரணமாக இந்தத் திட்டத்தின் தீவிரமானது குறைந்துள்ளது. எனவே தற்பொழுது காணொலி வாயிலான நிகழ்வுகள் மீது கவனம் செலுத்தப் படுகின்றது.
- இதற்கு முன்பு கோவாவின் பனாஜியில் நடத்தப்பட்ட லோகோ உட்சவம் ஆனது சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

- இந்தத் திட்டமானது 2015 ஆம் ஆண்டில் சர்தார் வல்லபாய் படேலின் நினைவு தினத்தின் போது இந்தியப் பிரதமரால் அறிவிக்கப்பட்டது.

## உயர்நீதிமன்ற நீதிபதி நீதிமன்ற வழக்கிலிருந்து விலகல்

**INSTANCE OF RECUSAL OF SC JUDGES**

**March 8, 2016:** Justice J Chelameswar recused from a case pertaining to Bangalore blasts accused Abdul Nazir Maudany

**March 9, 2016:** Justice AR Dave's bench said it was unable to hear activist Teesta's anticipatory bail plea and referred it to CJI for listing it before another bench

**March 10, 2016:** Justice VG Gowda recused from hearing CBI's plea challenging May 2010 Allahabad HC verdict dropping criminal conspiracy charge against BJP leaders LK Advani in Babri Masjid case

**April 28, 2011:** Justices DK Jain and HL Dattu recused from hearing then Sikkim HC Chief Justice PD Dinakaran's petition seeking a stay on Rajya Sabha-appointed inquiry panel against him

**March 2, 2012:** Bench of justices HL Dattu and CK Prasad chose not to hear a petition challenging validity of the USD 8.5 million Cairn Energy-Vedanta deal.

- பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில உயர்நீதிமன்றத்தின் நீதிபதியான சுவிர் சேகல் என்பவர் பல்வந்த் சிங் முல்தானி என்பவர் காணாமல் போனதாகவும் மற்றும் அவர் கொலை செய்யப் பட்டதாகவும் கூறப்படும் வழக்கில் பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் டிஜிபியான சுதேத் சிங் சைனி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட முன் ஜாமீன் மனு வழக்கு மீதான விசாரணையிலிருந்து விலகியுள்ளார்.
- இந்த வழக்கிலிருந்துத் தன்னை விடுவித்துக் கொண்ட அந்த நீதிபதி, இந்த வழக்கை மீண்டும் பட்டியலிடுவதற்கு அம்மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இந்த விவகாரத்தை அனுப்பியுள்ளார்.
- வழக்கிலிருந்து விலகுதல் எனப்படும் நீதித்துறைத் தகுதியிழப்பானது வழக்கை விசாரித்தல் அல்லது நிர்வாக அதிகாரியாக கருத்து வேற்றுமையின் காரணமாக சட்ட நடைமுறைகள் போன்ற அலுவல்பூர்வ நடவடிக்கைகளில் பங்கேற்பதிலிருந்து விலகிக் கொள்வதைக் குறிக்கின்றது.
- நீதிபதிகள் வழக்கிலிருந்து விலகுவதற்கு எந்தவொரு வரையறையும் தற்பொழுது வரை விதிக்கப்படவில்லை.

## இ-சஞ்சீவினியைச் செயல்படுத்துதல்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் "இ-சஞ்சீவினி" மற்றும் "இ-சஞ்சீவினிஓபிடி" தளங்கள் குறித்து மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றுடனான ஒரு ஆய்வுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- இ-சஞ்சீவினி மற்றும் இ-சஞ்சீவினிஓபிடி ஆகியவற்றினால் வழங்கப்படும் தொலைதூர மருத்துவ ஆலோசனையானது 23 மாநிலங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. மற்ற மாநிலங்கள் இதைச் செயல்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.
- இதனை அமல்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இதைச் செயல்படுத்துவதில் ஆந்திரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் மாநில அளவிலான ஆலோசனை வழங்குதலில் நாகப்பட்டினம் முதலிடத்தில் உள்ளது.
- இது இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விரிவான தொலைதூர மருத்துவத் தீர்வாகும்.

- இந்த இ-சஞ்சீவினி தளமானது மருத்துவர்-மருத்துவர் (இ-சஞ்சீவினி) மற்றும் நோயாளி-மருத்துவர் (இ-சஞ்சீவினிஒபிடி) தொலைதூர மருத்துவ ஆலோசனை எனப்படும் 2 வகையான தொலைதூர மருத்துவச் சேவைகளை வழங்குகின்றது.
- இது ஊரகப் பகுதிகள் மற்றும் தொலைதூரச் சமூகங்களில் இருக்கும் டிஜிட்டல் பிளவை இணைப்பதன் மூலம் அனைவருக்கும் சமமான சுகாதாரச் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஐஐடி ரூர்க்கி – பேசிக் திட்டம்

- ஐஐடி ரூர்க்கியானது பேசிக் (BASIIC - Building Accessible Safe Inclusive Indian Cities) என்ற ஒரு முன்னெடுப்பின் மேம்பாட்டிற்காக தேசிய நகர்ப்புற விவகாரங்கள் துறை மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது நாடு தழுவிய அளவிலான மாதிரிக் கொள்கைகளின் பகுதிகளில் பணியாற்றுவதையும் பேசிக்கின் (அனைவரும் அணுகக் கூடிய பாதுகாப்பான அனைவரையும் உள்ளடக்கக் கூடிய இந்திய நகரங்களைக் கட்டமைத்தல்) மேம்பாட்டைக் கொண்டிருப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த 2 நிறுவனங்களும் இதில் இந்திய நகரங்களை மிகவும் அணுகக் கூடிய மற்றும் வாழ்வதற்குப் பாதுகாப்பாக மாற்றும் வகையில் அனைத்து வித தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கவுள்ளன.

## விளம்பரங்களுக்கான வரைவு வழிகாட்டுதல்கள்

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகமானது விளம்பரங்களுக்கான ஒரு விரிவான வரைவு வழிகாட்டுதல்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த நெறிமுறையானது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 என்ற சட்டத்தின் கீழ் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இது நியாயமற்ற வர்த்தகத்தை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது எந்தவொரு தவறான விளம்பரத்திற்கும் தயாரிப்பாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் விளம்பர நிறுவனங்கள் ஆகியோரைப் பொறுப்பு கொண்டவர்களாக ஆக்குகின்றது.

## தேசிய மூங்கில் திட்ட இலச்சினை

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் 9 மாநிலங்களில் 22 மூங்கில் உற்பத்தித் தொகுப்புகளையும் தேசிய மூங்கில் திட்ட இலச்சினையையும் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த மூங்கில் தொகுப்புகளானது மத்தியப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா, ஒடிசா, அசாம், நாகாலாந்து, திரிபுரா, உத்தரகாண்ட் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட உள்ளது.
- இந்த இலச்சினையின் வடிவமைப்பாளர் தெலுங்கானாவைச் சேர்ந்த சாய்ராம் கௌடி எடிகி ஆவார்.
- இது 2006-07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் ஒரு திட்டமாகும்.




## பாக்பட் – தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தளம்

- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI – Archaelogical survey of India) 2018 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்ட பாக்பட் தளம் மற்றும் அதன் மிச்சங்களைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தளமாக அறிவித்துள்ளது.
- இந்தத் தளமானது கி.மு. 2000 ஆண்டைச் சேர்ந்த போர் புரியும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இங்கு இருந்ததற்கான ஆதாரத்தைக் கொண்டுள்ளது.
- 3 ரதங்கள், பூட்டப்பட்ட சவப்பெட்டிகள், பாதுகாப்புக் கலசங்கள், வாள் மற்றும் தலைக் கவசங்கள் ஆகியவை இந்தத் தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில முக்கியப் பொருட்களாகும்.
- ASI ஆனது இதனை "கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்த பண்டைய ஹரப்பா நாகரிகத்தின் ஒரு மிகப்பெரிய இடுகாடு" என்று குறிப்பிடுகின்றது.
- ASI-ன் அறிவிக்கையானது பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் துறை தளங்கள் & மிச்சங்கள் சட்டம், 1958 என்ற சட்டத்தின் விதிகளின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.

## பலபரிமாண வறுமைக் குறியீடு மீதான ஒத்துழைப்புக் குழு

- நிதி ஆயோக்கானது சன்யுக்தா சமாதர் என்பவரது தலைமையில் பலபரிமாண வறுமைக் குறியீடு மீதான ஒத்துழைப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது,.
- நிதி ஆயோக்கானது சீர்த்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக உலகளாவிய MPI-ன் (Multidimensional Poverty Index) கண்காணிப்புச் செயல்முறையை வழங்கும் பொறுப்பைக் கொண்ட ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- உலகளாவிய MPI என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட 29 உலகளாவியப் பிரிவுகளில் நாட்டின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட முடிவின் ஒரு பகுதியாகும்.
- உலகளாவிய MPI என்பது 107 வளரும் நாடுகளை உள்ளடக்கிய பலபரிமாண வறுமையின் ஒரு சர்வதேச நடவடிக்கையாகும்.
- உலகளாவிய MPI 2020-ன் படி, மொத்தமுள்ள 107 நாடுகளில் இந்தியா 62வது இடத்தில் உள்ளது.
- இது முதன்முறையாக 2010 ஆம் ஆண்டில் ஆக்ஸ்போர்டு வறுமை & மனித மேம்பாட்டு முன்னெடுப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றினால் மேம்படுத்தப்பட்டது.




## "ரியல் மேங்கோ" மென்பொருள்

- ❖ நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்ட ஒரு சோதனையில் இரயில்வே பாதுகாப்புப் படையானது "ரியல் மேங்கோ" என்ற மென்பொருளின் பயன்பாட்டைக் கண்டறிந்து உள்ளது.
- ❖ இது ஐஆர்சிடிசி இணைய தளத்தில் தட்கல் முறையிலான பயணச் சீட்டுகளைப் பதிவு செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட ஒரு மோசமான சட்டவிரோத மென்பொருளாகும்.
- ❖ இந்த சட்டவிரோத மற்றும் பொதுவாகத் தடை செய்யப்பட்ட மென்பொருளானது இந்திய இரயில் பயண அனுமதிப் பதிவை உயர் வேகம் கொண்டதாக மாற்றுகின்றது.

## ஜெய்ப்பூரில் உள்ள பத்திரிக்கை வாயில்

- ❖ இந்தியப் பிரதமர் இராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள பத்திரிக்கை வாயிலைக் காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்.
- ❖ பத்திரிக்கை வாயிலானது இராஜஸ்தான் மாநிலத்தின் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் கட்டிடக் கலை பாணியைப் பிரதிபலிக்கும் ஒரு நினைவகமாகும்.
- ❖ இந்தப் பத்திரிக்கை வாயிலானது ஜெய்ப்பூரில் உள்ள ஜவஹர்லால் நேரு மார்க்கில் பத்திரிக்கை நாளிதழ் குழுமத்தினால் கட்டப்பட்டுள்ளது.
- ❖ மேலும் இவர் சம்வாத் உபநிடதம் மற்றும் அக்சார் யாத்திரை ஆகிய 2 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.
- ❖ இந்தப் புத்தகங்கள் இராஜஸ்தான் பத்திரிக்கை குழுமத்தின் தலைமையாசிரியர் மற்றும் பத்திரிக்கை நாளிதழ் குழுமத்தின் தலைவரான குலாப் கோத்தாரி அவர்களால் எழுதப் பட்டது.



## “பசுமை நடவடிக்கையின் TOP லிருந்து TOTAL” என்ற திட்டத்தின் கீழ் பழங்கள் மற்றும் காய்கறிகள்

- ஜம்மு காஷ்மீரில் உள்ள அனைத்துப் பழங்கள் மற்றும் காய்கறிகளும் “பசுமை நடவடிக்கையின் TOPலிருந்து TOTAL” என்ற திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட உள்ளன.
- இந்த நடவடிக்கையானது பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பயிரிடும் விவசாயிகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கிலிருந்து (TOP - Tomato, Onion and Potato) அடுத்த 6 மாதக் காலத்திற்கு அனைத்துப் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.
- மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகமானது இந்தத் திட்டத்தின் கீழ் போக்குவரத்துச் செலவினத்திற்கான 50% தொகையை மானியமாக அளிக்க உள்ளது.
- பசுமை நடவடிக்கையானது வெண்மைப் புரட்சி என்பதின் வரிசையில் 2018-19 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- இது மின்னணு முறையிலான தேசிய வேளாண் சந்தைத் தளத்தின் மூலம் விவசாயிகளை நுகர்வோருடன் இணைப்பதன் மூலம் TOP வகை காய்கறிகளைச் சந்தைப்படுத்துவதின் மீது கவனம் செலுத்துகின்றது.

## 5 பொதுத் துறை நிறுவனங்கள் சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவில் இணையவுள்ளன

- மத்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகமானது நீடித்த காலநிலை நடவடிக்கைக்காக, 5 பொதுத் துறை நிறுவனங்கள் சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவில் இணையவுள்ளதாக அறிவித்துள்ளது.
- அந்த 5 பொதுத் துறை நிறுவனங்கள் பின்வருமாறு :
  - இந்திய எண்ணெய்க் கழகம்
  - எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம்
  - பாரத் பெட்ரோலிய நிறுவனம்
  - இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம்
  - கெயில் இந்தியா நிறுவனம்

## 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் கைரேகைப் பதிவுகள் அறிக்கை

- “இந்தியாவில் கைரேகைப் பதிவுகள் - 2019” என்ற அறிக்கையானது மத்திய கைரேகை முகமையின் வருடாந்திர வெளியீட்டின் 23வது பதிப்பாகும்.
- இது தேசியக் குற்ற ஆவணங்கள் முகமையின் கீழ் செயல்படுகின்றது.
- இதில் 2019 ஆம் ஆண்டில் 69,636 ஆய்வுத் துண்டுகளைக் கண்டுபிடித்ததன் மூலம் குஜராத் மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதற்கு அடுத்து 11,524 நிகழ்வுகளுடன் தமிழ்நாடு 2வது இடத்திலும் 8,517 நிகழ்வுகளுடன் தில்லி 3வது இடத்திலும் உள்ளன.

## பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா

- பிரதமர் டிஜிட்டல் முறையில் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா மற்றும் இ-கோபாலா செயலி ஆகியவற்றை அறிமுகப்படுத்தி வைத்தார்.

- ❖ பீகாரில் சீதாமாரியில் மீன் அடைகாக்கும் வங்கி, கிஷன்கஞ்சில் நீர்வாழ்வு நோய்கள் பரிந்துரை ஆய்வகம் (Aquatic Disease Referral) ஆகியவற்றை நிறுவுவதையும் அவர் அறிவித்தார்.

### *நோக்கங்கள்*


- ❖ இந்தியாவில் மீன்வளத்தின் நிலையான வளர்ச்சி.
- ❖ 2024-25 ஆண்டு வாக்கில் மீன் உற்பத்தியை 70 லட்சம் டன்னாக உயர்த்துதல்.
- ❖ மீன்வளத் துறையில் மீன்பிடித்தலுக்குப் பிந்தைய இழப்புகளை 10% ஆகக் குறைத்தல்

### *இ-கோபாலா செயலி*

- ❖ இது மீன்வளர்ப்போரின் நேரடி பயன்பாட்டிற்கான இன மேம்பாட்டுச் சந்தை மற்றும் தகவல் தளம் போன்றவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ இது மீன் வளர்ப்போர் கால்நடைகளை டிஜிட்டல் முறையில் நிர்வகிக்க உதவும்.
- ❖ இந்தச் செயலியின் மூலம் அவர்கள் நோய் இல்லாத ஜெர்ம் பிளாசத்தை (germplasm – முளைமக் கூழ்) வாங்கலாம் மற்றும் விற்கலாம்.
- ❖ மேலும், கால்நடைகளுக்கான முதலுதவி, செயற்கைக் கருவூட்டல் மற்றும் தடுப்பூசி ஆகியவற்றிற்கான தரமான இனப்பெருக்கச் சேவைகள் கிடைக்குமா என்பதையும் இவர்கள் அறியலாம்.

## ரஃபேல் போர் விமானங்களின் சேர்க்கை

- ❖ இந்திய விமானப்படை செப்டம்பர் 10, 2020 அன்று அம்பாலாவின் விமானப்படை நிலையத்தில் ரஃபேல் விமானத்தை முறையாகச் சேர்த்துள்ளது.
- ❖ இந்திய விமானப் படையைச் சேர்ந்த முதல் ஐந்து ரஃபேல் விமானங்களானது 2020 ஜூலை 27 அன்று பிரான்சிலிருந்து அம்பாலாவின் விமானப் படை நிலையத்திற்கு வந்தது.
- ❖ இது தற்போது முதல் 'தங்க அம்புகள்' என்றும் அழைக்கப்படும் 17 ஸ்குட்ரான் என்ற போர்க்கப்பலின் ஒரு பகுதியாகும்.




### *மற்ற தகவல்கள்*

- ❖ இராணுவ ரீதியாக, ரஃபேல் என்றால் "நெருப்பின் வெடிப்பு" (burst of fire) என்று பொருள்.
- ❖ இது டஸ்ஸால்ட் நிறுவனத்தால் ஆம்னிரோல் (omni role - பல பணிகள் செய்யக் கூடியது) விமானம் என்றும் அழைக்கப் படுகிறது.

- இந்த 4.5 தலைமுறை ஜெட் விமானமானது, ஒலியின் வேகத்தை விட (1.8 மாக் அளவு) இருமடங்காக அதிக வேகத்துடன் செல்லக் கூடியது.
- இது SCALP உடன் வருகிறது, SCALP என்பது 300 கி.மீ.க்கு மேல் வரம்பைக் கொண்ட ஒரு விண்-தரை வகை ஏவுகணை ஆகும்.
- இதை 70 கி.மீ வரம்பிற்குள், பதுங்கு குழி வகை போன்ற ஒரு கடினப்படுத்தப்பட்ட வகை இலக்குகளுக்கு எதிராக பயன்படுத்தலாம்.

## ஆத்மநிர்பர் பாரத் அரைஸ் (ARISE) – அடல் புதிய இந்தியா சவால்கள்


- இந்தத் திட்டமானது இந்திய எம்எஸ்எம்இ மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஏற்படுத்த முயலுகின்றது.
- இந்த முன்னெப்பானது எம்எஸ்எம்இ (சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை) துறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான புத்தாக்கங்களை அடையாளம் கண்டு, ஊக்கப்படுத்த உதவவுள்ளது.
- இந்தத் திட்டமானது பின்வரும் 4 அமைச்சகங்கள் மற்றும் இஸ்ரோவினால் செயல்படுத்தப்படவுள்ளது. அவையாவன:
  - மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம்
  - மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகம்
  - மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்
  - மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம்

## காலநிலை திறன்மிகு நகரங்கள் ஆய்வுக் கட்டமைப்பு (CSCAF) 2.0

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது காலநிலை திறன்மிகு நகரங்கள் மற்றும் ஆய்வுக் கட்டமைப்பு 2.0 மற்றும் “மக்கள் சவால்களுக்கான தெருக்கள்” ஆகியவற்றைத் தொடங்கியுள்ளது.
- இது முதலீடுகளுடன் சேர்த்து நகரங்களின் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மற்றும் செயல்படுத்தும் அதே வேளையில் காலநிலையை எதிர்த்துப் போராடும் நகரங்களுக்கான ஒரு தெளிவான செயல்திட்டத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CSCAF (Climate Smart Cities Assessment Framework) முன்னெடுப்பானது இந்தியாவில் நகரத் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்காக காலநிலை தாங்கு அணுகுமுறையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் செயல்திட்டமானது 5 பிரிவுகளிடையே 28 குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது.
  - ஆற்றல் மற்றும் பசுமைக் கட்டிடங்கள்
  - நகரத் திட்டமிடல், பசுமை உள்ளடக்கம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம்
  - போக்குவரத்து மற்றும் காற்றின் தரம்
  - நீர் மேலாண்மை
  - கழிவுகள் மேலாண்மை
- மக்கள் சவால்களுக்கான தெருக்கள் என்பது நமது நகரங்களை நடப்பதற்கு உகந்ததாக மற்றும் நடப்பவர்களுக்கு (நடைபாதையில்) உகந்த வகையில் மாற்றுவதற்கான ஓர் எதிர்வினையாகும்.

- ❖ இது விரைவான, புத்தாக்கத் தன்மையுள்ள மற்றும் குறைந்த செலவு கொண்ட நடவடிக்கைகளின் மூலம் நடப்பதற்கு உகந்த மற்றும் வலுவான தெருக்களை உருவாக்குவதற்காக வேண்டி நகரங்களை தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## தென் இந்தியாவின் முதலாவது கிசான் இரயில்




- ❖ இந்தியாவின் 2வது மற்றும் தென் இந்தியாவின் முதலாவது கிசான் இரயிலானது அனந்தப்பூர் மற்றும் புது தில்லி ஆகியவற்றிற்கிடையேத் தொடங்கி வைக்கப் பட்டது.
- ❖ இந்த இரயிலானது வேளாண் விளைபொருட்களை ஆந்திரப் பிரதேசத்தின் அனந்தப்பூரிலிருந்து புது தில்லியில் உள்ள ஆதர்ஷ் நகர் இரயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்கின்றது.
- ❖ முதலாவது கிசான் இரயில் சேவையானது ஆகஸ்ட் 07 அன்று மகாராஷ்டிராவில் உள்ள தேவ்வாலி மற்றும் பீகாரில் உள்ள தனப்பூர் ஆகியவற்றிற்கிடையே ஒரு வாராந்திர சேவையாகத் தொடங்கப்பட்டது. பின்னர் இது வாரத்திற்கு இருமுறை மேற்கொள்ளப்படும் சேவையாக மாற்றப்பட்டது.

## மாநில ஸ்டார்ட் அப் தரவரிசை 2019

- ❖ குஜராத் மாநிலம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் ஆகியவை மாநில ஸ்டார்ட் அப் தரவரிசை – 2019ல் சிறப்பான செயல்பாடு கொண்டவைகளாக பெயரிடப் பட்டுள்ளன.
- ❖ கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் வணிகம் மற்றும் நிதியை ஈர்ப்பதற்காக வலுவான புத்தாக்கத் தொழில்முனைவுத் திறனில் முன்னிலையில் செயல்படும் மாநிலங்களாக உள்ளன.
- ❖ ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், மிசோரம், தமிழ்நாடு, அசாம், தில்லி, மத்தியப் பிரதேசம், சிக்கிம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை நாட்டில் வளர்ந்து வரும் ஸ்டார்ட் அப் சூழலமைப்பைக் கொண்ட மாநிலங்களாக உள்ளன.

- தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது இந்தத் தரவரிசையைத் தயாரித்துள்ளது.




## 5 நட்சத்திரக் கிராமங்கள் திட்டம்

- அஞ்சல் துறையானது (மத்தியத் தகவல் தொடர்புத் துறை அமைச்சகம்) 5 நட்சத்திரக் கிராமங்கள் எனப்படும் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது குறிப்பாக உட்புறக் கிராமங்களில் அஞ்சல் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் முதன்மையான அஞ்சலகத் திட்டங்களின் மீது அனைவருக்குமான நாடு தழுவிய உள்ளடக்கத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது சோதனை அடிப்படையில் மகாராஷ்டிராவில் செயல்படுத்தப் படுகின்றது.

**Criteria**

| | |
|---|---|
| 100% Coverage of all households in One of the Postal Schemes | One Star Village |
| Two of the Postal Schemes | Two Star Village |
| Three of the Postal Schemes | Three Star Village |
| Four of the Postal Schemes | Four Star Village |
| All Five Postal Schemes | Five Star Village |

***உள்ளடக்கியுள்ள திட்டங்கள்***

- சேமிப்பு வங்கிக் கணக்கு, சிறு சேமிப்புக் கணக்கு, என்எஸ்சி/கேவிபி சான்றிதழ்கள்.
- சுகன்யா சம்ரிதி கணக்கு/பிபிஎப் கணக்குகள்.
- நிதியளிப்பு வழங்கப்பட்ட அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்குடன் இணைக்கப் பட்ட இந்திய அஞ்சலகப் பணவழங்கீட்டு வங்கிக் கணக்குகள்.
- அஞ்சல் ஆயுள் காப்பீட்டுக் கொள்கை / ஊரக அஞ்சலக ஆயுள் காப்பீட்டுக் கொள்கை மற்றும்
- பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா கணக்கு / பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா கணக்கு.

❖ ஒரு திட்டமானது 1 நட்சத்திரத் தரக் குறியீட்டிற்குச் சமமாகும்.

❖ எனவே, ஒரு கிராமமானது மேற்கண்ட பட்டியலிலிருந்து 4 திட்டங்களுக்காக தேசிய அளவிலான உள்ளடக்கத்தை அடைந்தால், அந்தக் கிராமமானது 4 நட்சத்திரக் தரக் குறியீடு மற்றும் அதற்கு மேற்பட்ட தரக் குறியீட்டைப் பெறும்.

## கடல்சார் துறையின் பிரச்சினைகளுக்கான SAROD – PORTS

❖ மத்திய அமைச்சரான மன்சுக் மண்டாவியா அவர்கள் "SAROD - துறைமுகங்கள்" (துறைமுகங்கள் – பிரச்சினைகளின் சுமூகமான தீர்விற்கான சமூகம்/Society for Affordable Redressal of Disputes-Ports) எனப் பெயரிடப்பட்ட, பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு குறைதீர் நடைமுறையைத் தொடங்கி வைத்துள்ளார்.

❖ இது கடல்சார் துறையில் மத்தியஸ்தத்தின் மூலம் பிரச்சினைகளின் தீர்விற்கு ஆலோசனை வழங்கி உதவ உள்ளது.

❖ இது தனியார் துறைமுகங்கள், களங்கள், முனையங்கள் மற்றும் சிறு துறைமுகங்கள் உள்ளிட்ட முக்கியமான துறைமுக அறக்கட்டளைகள், சிறிய அளவிலான துறைமுகங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது

❖ இது நெடுஞ்சாலைத் துறையில் NHAI/என்எச்ஏ என்ற அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட SAROD – சாலைகள் என்ற அமைப்பைப் போன்றே உள்ளது.

❖ இது நியாயமான முறையில் பிரச்சினைகளுக்குக் குறித்த காலத்திற்குள் சுமூகமான தீர்வினைக் கண்டறிவதற்காக சமுதாயப் பதிவுகள் சட்டம், 1860 என்ற சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த சாலை விபத்துகள் தரவுதளத் திட்டம் (iRAD)

❖ மத்திய அரசானது நாடு முழுவதும் ஒருங்கிணைந்த சாலை விபத்துகள் தரவு தளத் திட்டத்தினை (iRAD) செயல்படுத்துகின்றது. அது தொடர்பான செயலியானது நிகழ்விடத்திலேயே விபத்து குறித்த தகவலைச் சேகரிக்க வழிவகை செய்கின்றது.

❖ ஆரம்பத்தில் இந்தத் திட்டமானது மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப் படவுள்ளது.

❖ இந்தச் செயலியானது காவல் துறை, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் தங்களது கைபேசிகளைப் பயன்படுத்தி நிகழ்விடத்திலேயே விபத்து குறித்த தகவலைச் சேகரிக்க வழிவகை செய்கின்றது.

- இந்தத் தரவுகளானது பின்னாளில் சாலைக் கட்டமைப்பு மற்றும் விபத்து குறித்த தரவைப் பதிவு செய்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தீர்வு நடவடிக்கைகள் மற்றும் சாலை விபத்துகளுக்கான காரணங்களைக் கண்டறிதல் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

## பண்டைய இந்தியக் கலாச்சாரத்தை ஆய்வு செய்வதற்கான குழு

- மத்திய அரசானது உலகின் மற்ற கலாச்சாரங்களுடன் தொடர்புடைய மற்றும் தற்போதைய காலத்திலிருந்து 12,000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்தியக் கலாச்சாரத்தின் பரிணாமம் மற்றும் உருவாக்கம் குறித்து ஒரு விரிவான ஓர் ஆய்வை நடத்துவதற்காக வல்லுநர் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- 16 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவானது புதுதில்லியில் உள்ள இந்தியத் தொல்லியல் சமூகத்தின் தலைவரான கே என் தீக்சித் மற்றும் இந்தியத் தொல்லியல் துறை ஆய்வின் முன்னாள் இணை பொது இயக்குநர் மற்றும் இதர பல உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## விமானத் திருத்த மசோதா, 2020

- மக்களவையானது விமானச் சட்டம், 1934 என்ற ஒரு சட்டத்தைத் திருத்தக் கோரும் விமான (திருத்த) மசோதா, 2020 என்ற மசோதா ஒன்றை நிறைவேற்றி உள்ளது.
- இந்தச் சட்டமானது உள்நாட்டு விமானங்களின் உற்பத்தி உரிமை, பயன்பாடு, செயல்பாடு, விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதையும் விமான நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதை ஒழுங்குபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது பின்வரும் ஒழுங்குமுறை நிறுவனங்களுக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரத்தை அளிக்கவுள்ளது.
    - உள்நாட்டு விமானப் போக்குவரத்தின் பொது இயக்குநரகம் (DGCA - Directorate General of Civil Aviation)
    - சிவில் விமானப் பாதுகாப்பு முகமை (BCAS - Bureau of Civil Aviation Security)
    - விமான விபத்துகள் விசாரணை முகமை (AAIB - Aircraft Accident Investigation Bureau)
- DGCA ஆனது இந்த மசோதாவின் கீழ் விமானப் போக்குவரத்து தொடர்பாக மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைச் செயல்பாடுகளை மேற்கொள்ளும்.
- BCAS ஆனது உள்நாட்டு விமானப் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குமுறை மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.
- AAIB ஆனது விமான விபத்துகள் மற்றும் அது தொடர்பான நிகழ்வுகள் குறித்து விசாரணை மேற்கொள்கின்றது.
- இந்த ஒழுங்குமுறை ஆணையங்களுக்கான சட்டப்பூர்வ அங்கீகாரமானது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது படி இந்தியாவின் விமானப் போக்குவரத்து பாதுகாப்புத் தரவரிசையை மேம்படுத்த இருக்கின்றது.
- இந்தச் சட்டமானது மத்திய அரசின் கடற்படை, இராணுவம், விமானப் படையைச் சேர்ந்த விமானங்களுக்கு விலக்கு அளித்துள்ளது.

## சுவேதா கபிலா பசுக்கள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி ஆணையம், தேசிய விலங்கு மரபணு வள அமைப்பானது சுவேதா கபிலா பசுக்களை கோவாவின் இனமாக (Goan breed) அறிவித்துள்ளது.
- இந்தப் பசுக்கள் கோவாவில் வால்போய், சாகேரி மற்றும் இதர பகுதிகளில் காணப் படுகின்றது.
- இந்தப் பசுக்கள் அதன் ஏ2 வளப் பாலின் ஊட்டச்சத்து மதிப்பிற்காக நன்கு அறியப் படுகின்றது.

## ஆயுர்வேதத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான (IoTR) மசோதா, 2020

- நாடாளுமன்றமானது ஆயுர்வேதத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான (IoTR - Institute of Teaching and Research) மசோதா, 2020 என்ற ஒரு மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது ஆயுர்வேதத்தில் IoTR-ஐ ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இந்த மசோதாவானது IoTR-ஐ தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மையமாக அறிவிக்கவும் பரிந்துரைக்கின்றது.
- இந்த நிறுவனங்களுக்கான நிதியானது மத்திய அரசிடமிருந்துப் பெறப்படவுள்ளது.
- இந்த மசோதாவானது குஜராத்தின் ஜாம்நகரில் அமைந்துள்ள 3 ஆயுர்வேத நிறுவனங்களை ஒன்றாக இணைக்க பரிந்துரைத்துள்ளது.
- அந்த 3 நிறுவனங்கள் பின்வருமாறு:
    - ஆயுர்வேதத்தில் முதுகலை கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி மையம்.
    - ஸ்ரீகுலாப் குன்வெர்பா ஆயுர்வேத மகாவித்யாலயா.
    - இந்திய ஆயுர்வேத மருந்து அறிவியல் நிறுவனம்.

## மத்திய அமைச்சரின் ராஜினாமா

- ஹர்சிம்ரத் கவுர் பாதல் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்ட 3 வேளாண் மசோதாக்களை எதிர்த்து மத்திய அமைச்சரவையில் இருந்து விலகினார்.
- முன்மொழியப்பட்ட இதில் மசோதாக்கள் பஞ்சாபில் விவசாயத் துறையை அழிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

*மூன்று மசோதாக்கள்:*

- அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) மசோதா,
- விவசாயிகள் உற்பத்தி வணிக மற்றும் வர்த்தக மசோதா (ஊக்குவிப்பு மற்றும் வசதி) மற்றும்
- விலை உறுதி மற்றும் வேளாண் சேவைகள் மசோதா மீதான விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) ஒப்பந்தம்.

- அவர் 2014 ஆம் ஆண்டில் மத்திய உணவு பதப்படுத்துதல் அமைச்சராக படாவி ஏற்றார். மேலும் 2019 ஆம் ஆண்டு தொடங்கிய அரசாங்கத்தின் இரண்டாவது பதவிக் காலத்திலும் அதே பதவியைத் தக்க வைத்துக் கொண்டார்.

## அஜய் டிர்கி கமிட்டி

- வேளாண் துறையில் நிலக் குத்தகையை முறைப்படுத்த வேண்டி ஒரு வரைபடத்தைத் தயாரித்திட அஜய் டிர்கி தலைமையில் ஓர் உயர் மட்டக் குழுவை மத்திய அரசானது அமைத்துள்ளது.
- இந்தச் சீர்திருத்தமானது நலத்திட்ட நலன்களைப் பெறாத நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் உரிமைகளை வகுத்துக் கூறும்.
- முன்மொழியப் பட்டுள்ள இந்த நிலக் குத்தகை கட்டமைப்பானது நில உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும்.

## பொதுக் கொள்முதல் ஆணை, 2017 - திருத்தம்

- இந்திய அரசானது சமீபத்தில் 2017 ஆம் ஆண்டின் பொதுக் கொள்முதல் ஆணையைத் திருத்தியுள்ளது.
- சீன முதலீட்டைக் குறைக்க இந்தத் திருத்தம் செய்யப் பட்டுள்ளது.
- இந்தத் திருத்தம் இப்போது துறைகள் மற்றும் அது சார்ந்த அமைச்சகங்களுக்கு வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 என்ற உள்ளூர் வழங்குநர்களுக்கு அதிக உள்ளூர் உள்ளடக்கத் தேவையை (local content requirement) அறிவிக்க உதவுகிறது.
- முன்னதாக வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 உள்ளூர் வழங்குநர்களின் பங்கு முறையே 50% மற்றும் 20% என நிர்ணயிக்கப் பட்டிருந்தது.
- வகுப்பு 1 உள்ளூர் வழங்குநர் என்பவர் தனது பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றைக் கொள்முதல் மேற்கொள்வதற்கு உள்ளூர் உள்ளடக்க அளவினை 50% என்ற அளவை விட அதிகமாகவோ அல்லது சமமாகவோ கொண்டு இருக்கும் ஒரு வழங்குநர் ஆவார்.
- இப்போது இந்தத் திருத்தத்தின் மூலம் உள்ளூர் உள்ளடக்கத் தேவையை 50% க்கும் அதிகமாக அமைச்சகம் அறிவிக்க முடியும்.

## இந்தியாவின் முதல் பிரத்தியேக தனியார் ஜெட் விமான நிலையம்


- இந்தியாவின் முதல் பிரத்தியேக தனியார் ஜெட் விமான நிலையம் டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- தனியார் ஜெட் விமானங்களின் விமான நடவடிக்கைகளை இந்தப் பிரத்தியேக நிலையமானது கையாளும்.
- புதிய மற்றும் பிரத்தியேக தனியார் ஜெட் விமான நிலையம் வணிக ரீதியான விமானங்களின் சீரான இயக்கத்திற்கு உதவும்.

## ராஜேஷ் பந்த் குழு

- தேசிய இணையப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் லெப்டினென்ட் ஜெனரல் ராஜேஷ் பந்த் (ஓய்வு) அவர்களின் கீழ் மத்திய அரசு ஒரு நிபுணர்களின் குழுவை அமைத்துள்ளது.
- இது சீன நிறுவனமான ஷென்ஹுவா டேட்டா என்ற நிறுவனத்தினால் கண்காணிக்கப்படும் முக்கிய அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட இந்திய நாட்டினரைப் பற்றிய அறிக்கைகளை ஆய்வு செய்யவுள்ளது.

## சிந்து நதி ஒப்பந்தத்தின் 60 ஆண்டுகள்

- இந்த ஆண்டின் செப்டம்பர் 19 ஆம் தேதியானது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான சிந்து நதி ஒப்பந்தத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.
- இது 1960 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட, உலக வங்கியினால் நடுநிலை செய்யப்பட்ட, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒரு நதி நீர் விநியோக ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் பின்வரும் அம்சங்கள் செயல்படுத்தப் படுகின்றன.
    - இந்தியாவின் “கிழக்கில்” பாயும் 3 நதிகளான பியாஸ், ராவி, சட்லஜ் ஆகியவற்றின் நீரானது இந்தியாவிற்குத் தரப்படுகின்றது.
    - இந்தியாவின் “மேற்கில்” பாயும் 3 நதிகளான சிந்து, செனாப், ஜீலம் ஆகியவற்றின் நீரானது பாகிஸ்தானிற்குத் தரப்படுகின்றது.




## டிஆர்டிஓ-வின் புதிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மையங்கள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது (DRDO - Defence Research and Development Organisation) எதிர்கால இராணுவப் பயன்பாடுகள் குறித்து ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக 8 மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மையங்களை அமைக்கின்றது.
- இந்த மையங்கள் இராணுவப் பயன்பாடுகளுக்காக முக்கியமான பகுதிகளில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு வேண்டி கல்வி மையங்களுக்கு உதவ இருக்கின்றது.
- தற்பொழுது DRDO நாடு முழுவதும் 50 ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.
- இவை விண் பயணம் பற்றிய அறிவியல், ஆயுதங்கள், போர் வாகனங்கள், பொறியியல் அமைப்புகள், ஏவுகணைகள், மேம்படுத்தப்பட்ட கணினி அறிவியல் மற்றும் கப்பல் அமைப்புகள் போன்ற துறைகளை உள்ளடக்கிய வளர்ந்து வரும் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் பங்கெடுக்கும்.

## வான்வெளிக் குமிழி ஒப்பந்தங்கள்

- இந்தியாவானது அமெரிக்கா, கனடா, பிரான்சு, ஜெர்மனி, ஐக்கிய இராஜ்ஜியம், மாலத் தீவுகள் ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், ஆப்கானிஸ்தான் மற்றும் பக்ரைன் போன்ற 10 நாடுகளுடன் வான்வெளிக் குமிழி ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது.

- இது இந்தியா மற்றும் இதர நாடுகளுக்கிடையேயான ஒரு இருதரப்பு ஒப்பந்தமாகும்.
- வான்வெளிக் குமிழி என்பது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக தடை செய்யப் பட்டுள்ள வழக்கமான சர்வதேச விமான சேவைகளின் போது தங்களது தேசிய விமானங்கள் மற்ற நாடுகளுக்கும் மற்ற நாடுகளின் விமானங்கள் தங்களது நாட்டிற்கும் பறக்க அனுமதிக்கும்
- ஆனால் வந்தே பாரத் திட்டத்தில் இந்தியப் பயணிகள் விமானங்கள் மட்டுமே செயல்பட அனுமதிக்கப் பட்டன.

## ராபி காலப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை (MSP)

- இந்திய அரசானது ராபி காலப் பயிர்களின் மீதான MSP விலையை அதிகரித்து உள்ளது.
- கோதுமையின் மீதான MSP (Minimum Support Price) ஆனது 1 குவிண்டாலுக்கு ரூ.50 என்ற அளவில் அதிகரிக்கப் பட்டுள்ளது.
- கொண்டைக் கடலை, கடுகு, குங்குமப்பூ, பருப்பு ஆகியவை இதர பயிர்களாகும்.
- MSP ஆனது வேளாண் விலைகள் ஆணையத்தினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

## "பயண இலக்கு வடகிழக்கு, 2020" என்ற திருவிழா

- 4 நாட்கள் கால அளவுள்ள இந்த நிகழ்வானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று உள்துறை அமைச்சரால் முறையாகத் தொடங்கி வைக்கப்பட விருக்கிறது.
- மத்திய அமைச்சரான ஜித்தேந்திர சிங் அவர்கள் "பயண இலக்கு வடகிழக்கு, 2020" (வளர்ந்து வரும் மகிழ்ச்சிக்குரியப் பயண இலக்குகள்) என்ற திருவிழாவிற்கான சின்னம் மற்றும் பாடலை வெளியிட்டுள்ளார்.
- இந்தத் திருவிழாவானது வடகிழக்கின் வளமிக்க ஆராயப்படாத திறன்கள் குறித்து நாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் தெரிந்து கொள்ள உதவ இருக்கின்றது.
- இந்தத் திருவிழாவானது 2018 ஆம் ஆண்டில் சண்டிகரிலும் 2019 ஆம் ஆண்டில் இந்திய நுழைவு வாயிலிலும் (புது தில்லி) தொடங்கப் பட்டது.

## கர் தாக் ஒளியியல் இழைத் திட்டம்

- பிரதமர் பீகாரில் 9 நெடுஞ்சாலைத் திட்டங்கள் மற்றும் ஒளியியல் இழை இணையச் சேவைகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- ஒளியியல் இழைச் சேவைகளானது "கர் தாக் ஒளியியல் இழை" என்ற திட்டத்தின் கீழ் வழங்கப் பட்டு வருகின்றது.
- இந்தத் திட்டமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது பீகாரில் 45,945 கிராமங்களை இணைக்கவுள்ளது.
- இது பீகாரின் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களுக்கு டிஜிட்டல் புரட்சியை ஏற்படுத்த வழிவகை செய்கின்றது.

## வானூர்திப் பிரிவில் பெண் அதிகாரிகள்

- ❖ இந்தியப் பாதுகாப்புத் துறை வரலாற்றில் முதன்முறையாக 2 பெண் அதிகாரிகள் இந்தியக் கடற்படையின் வானூர்திப் பிரிவில் பார்வையாளர்களாக இணைவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- ❖ போர்க் கப்பல்களை இயக்கும் முதல் பெண் போர்படை வீரர்கள் இவர்களாவர்.
- ❖ துணைத் தளபதி (லெப்டினன்ட்) ரித்தி சிங் மற்றும் துணைத் தளபதி குமுதினி தியாகி ஆகியோர் அந்த வானூர்திப் பிரிவில் இணையவிருக்கும் 2 அதிகாரிகள் ஆவர்.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம்

- ❖ சமீபத்தில் 8 மாநிலங்களவை உறுப்பினர்கள் அவையில் மோசமான முறையில் செயல்பட்டதற்காக அவை நடவடிக்கைகளில் பங்கேற்கத் தடை செய்யப் பட்டு உள்ளனர்.
- ❖ மாநிலங்களவையின் தலைவர் அந்த அவையின் விதிகள் புத்தகத்தின் விதி எண் 255 என்பதின் கீழ் தனது பார்வையில் எந்தவொரு உறுப்பினர் தவறாக நடந்து கொள்கிறாரோ அவரை அவை நடவடிக்கையிலிருந்து உடனடியாக வெளியேற்றும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.
- ❖ அந்த அவையானது அந்த அமர்வின் மீதமுள்ள காலத்திற்கு முழுவதும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவை நடவடிக்கையில் அந்த உறுப்பினர் பங்கேற்பதிலிருந்துத் தடை செய்வதற்கான தீர்மானத்தை (motion) ஏற்றுக் கொள்ளும்.
- ❖ சபாநாயகரைப் போல் மாநிலங்களவையின் தலைவர் அவையின் உறுப்பினரைத் தடை செய்வதற்கான எந்தவொரு அதிகாரத்தையும் கொண்டிருக்க வில்லை.
- ❖ மாநிலங்களவையானது மற்றொரு தீர்மானத்தின் மூலம் அந்தத் தடையை நீக்கலாம்.


## கொள்ளை நோய்கள் (திருத்தம்) மசோதா, 2020

- ❖ 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று இந்திய நாடாளுமன்றமானது சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கொள்ளை நோய்கள் (திருத்தம்) மசோதா, 2020 என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இந்த மசோதாவானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று மாநிலங்களவையினால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

### *சிறப்பம்சங்கள்*

- ❖ இந்த மசோதாவானது கொள்ளை நோய்களை எதிர்த்துப் போராடும் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் இது போன்ற நோய்களின் பரவலைத் தடுப்பதற்காக மத்திய அரசின் அதிகாரங்களை விரிவு செய்வதற்காகவும் கொள்ளை நோய்கள் சட்டம், 1897 என்ற சட்டத்தைத் திருத்துகின்றது.
- ❖ நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கப்பட்ட தொற்று நோய்கள் (திருத்தம்) அவசரச் சட்டத்தை நீக்குகின்றது.
- ❖ இந்தச் சட்டமானது சுகாதார நலப் பணியாளர்களின் வாழ்விற்கு இழப்பு ஏற்படுத்துதல், தீங்கு விளைவித்தல், அபாயகரமான முறையில் நடந்து கொள்தல், புண்படுத்துதல் ஆகியவற்றை நடவடிக்கை எடுக்கத் தக்க மற்றும் பிணையில் வெளிவர முடியாததான ஒரு குற்றமாக ஆக்குகின்றது.
- ❖ மேலும் இந்த மசோதாவானது 3 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையையும் ரூ.50,000 முதல் ரூ.2,00,000 வரையிலான அபராதம் விதிக்கப்

படுவதற்கான அம்சத்தையும் கொண்டுள்ளது.




## வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா, 2020

- வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா, 2020 ஆனது ஜுன் 26 அன்று அறிவிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்கு மாற்றாக இந்திய நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது வங்கியியல் ஒழுங்கு முறைச் சட்டம், 1949 என்ற சட்டத்தின் மீதான திருத்தங்களைப் பரிந்துரைக்கின்றது.
- இந்தப் புதிய மசோதாவானது கூட்டுறவு வங்கிகளை இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI - Reserve Bank of India) கண்காணிப்பின் கீழ் கொண்டு வருகின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- வங்கியியல் நிறுவனங்களுக்குப் பொருந்தும் அனைத்து விதிகளும் கூட்டுறவு வங்கிகளுக்கும் பொருந்த இருக்கின்றது.
- இது எந்தவொரு வங்கியியல் செயல்பாடுகளையும் பாதிக்காத வண்ணம் பொது மக்களின் நலம், வங்கியியல் முறை, வங்கியில் கணக்கு வைத்துள்ளவர்கள் மற்றும் வங்கியியல் நிறுவனங்களின் சரியான மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக வேண்டி ஒரு திட்டத்தை மேம்படுத்த மத்திய வங்கிக்கு உதவ இருக்கின்றது.
- இந்தத் திருத்தங்கள் பங்கு மூலதனம், முன்னுரிமைப் பத்திரங்கள், பாதுகாப்பற்ற கடன் பத்திரங்களைக் கொண்டு பொது வெளியீடுகள் மற்றும் தனியார் அமைப்புகளின் மூலம் நிதியைத் திரட்டவும் கூட்டுறவு வங்கிகளை அனுமதிக்க இருக்கின்றது.

### *விதிவிலக்குகள்*

- இது மாநிலச் சட்டங்களின் கீழ் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மாநிலப் பதிவாளர்களின் தற்போதைய அதிகாரங்களைப் பாதிக்காது.
- தனது முதன்மையான நோக்கம் மற்றும் முதன்மையான வணிகம் என்பது "வேளாண் மேம்பாட்டிற்கு நீண்ட கால நிதியுதவியை அளிப்பதாகக் கொண்டுள்ள மற்றும் "வங்கி", "வங்கியாளர்", "வங்கியியல்" என்ற சொற்கூற்றைப் பயன்படுத்தாத முதன்மை வேளாண் கடன் வழங்கல் சமூகம் அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது பொருந்தாது.

## ஐஐஐடி (Indian Institutes of Information Technology - IIIT) சட்டங்கள் திருத்த மசோதா, 2020


- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று இந்திய நாடாளுமன்றமானது இந்தியத் தகவல் தொழில்நுட்ப மையங்கள் சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2020 என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்தத் திருத்தமானது 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் முதன்மைச் சட்டங்களைத் திருத்த உள்ளது.
- இது பொது-தனியார் பங்களிப்பின் மூலம் இயங்கும் ஐஐஐடி போபால், ஐஐஐடி அகர்தலா, ஐஐஐடி சூரத், ஐஐஐடி பாகல்பூர் மற்றும் ஐஐஐடி ராய்ச்சூர் என்ற 5 கல்வி நிறுவனங்களை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக அறிவிக்கக் கோருகின்றது.
- இந்த கல்வி நிறுவனங்கள் ஏற்கெனவே சமுதாயப் பதிவுகள், சட்டம் 1860 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன.
- இதன் மூலம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த களவில் நிறுவனங்களாக அறிவிக்கப் பட்டுள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையானது 25 ஆக உயர இருக்கின்றது.

## PASSEX – இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படையானது கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் ராயல் ஆஸ்திரேலியக் கடற்படையுடன் ஒரு தொடர் பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- இந்தக் கடற்படைப் பயிற்சியில் ஆஸ்திரேலிய கடற்படையைச் சேர்ந்த எச்எம்ஏஎஸ் ஹோபார்ட் மற்றும் இந்தியக் கடற்படைக் கப்பல்களான சஹ்யாத்ரி மற்றும் கர்முக் ஆகியவை பங்கு பெறவுள்ளன.
- இந்தத் தொடர் பயிற்சியானது இரு நாடுகளிலும் இணைந்து செயலாற்றும் தன்மையை மேம்படுத்துதல், புரிந்துணர்வை மேம்படுத்தல், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குப் பிறகு இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியக் கடற்படையால் நடத்தப்படும் 4வது பயிற்சி இதுவாகும்.

## சின்குன் லா சுரங்கப் பாதை

- தேசிய நெடுஞ்சாலைகள் & கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகமானது உலகின் மிகவும் நீளமான உயரம் கொண்ட சின்குன் லா சுரங்கப் பாதை என்று கருதப்படும் ஒரு திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.
- சிங்கோ லா கணவாயின் கீழ் உள்ள 13.5 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தச் சுரங்கப் பாதையானது சிங்கோ லா மற்றும் படும் (Padum) ஆகியவை வழியாக மணாலி மற்றும் நிமுவிற்கு இடையே அனைத்து வானிலைகளிலும் பயன்படும் சாலை இணைப்பை வழங்குகின்றது.
- இந்தச் சுரங்கப் பாதையானது இமாச்சலப் பிரதேசம் மற்றும் லேஹ் ஆகியவற்றிற்கு இடையே அனைத்து வானிலைகளிலும் பயன்படும் சாலை இணைப்பை வழங்க இருக்கின்றது.
- இந்தச் சுரங்கப் பாதை கட்டமைப்பின் மூலம், ஜம்மு காஷ்மீரில் உள்ள ஜான்ஸ்கர் பள்ளத்தாக்கின் ஏறத்தாழ 15 கிராமங்கள் குளிர் காலத்தின் போது நிகழும் கடுமையான பனிப்பொழிவின் காரணமாக ஏற்படும் தனிமைப்படுத்துதலிலிருந்து விடுபட இருக்கின்றது.




## எதிர்ப்பு உரிமை குறித்த கொள்கை

- இந்திய உச்ச நீதிமன்றமானது எதிர்ப்பு உரிமை மற்றும் சாத்தியமான தடைகள் ஆகியவை "நாடு தழுவிய கொள்கை" கிடையாது என்றும் அவை சூழ்நிலையைப் பொறுத்து பல்வேறு நிலைகளில் வேறுபாடும் என்றும் கூறியுள்ளது.
- நீதியரசர் எஸ்கே கவுல், அனிருத்தா போஸ், கிருஷ்ணா முராரி ஆகியோரைக் கொண்ட அமர்வானது டிசம்பரில் நடைபெற்ற சிஏஏ-விற்கு எதிரான போராட்டங்கள் குறித்த மனுக்களை விசாரிக்கும் போது இவ்வாறு கூறியுள்ளது.
- இந்த அமர்வு, எதிர்ப்பு உரிமையானது ஒன்று கூடும் உரிமை போன்ற இதர பொது உரிமைகளுக்கு எதிராக சமநிலையுடன் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

## நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2020

- இந்த மசோதாவானது நிறுவனங்கள் சட்டம், 2013 என்ற சட்டத்தைத் திருத்தக் கோருகின்றது.
- இது தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் மீதான சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது சில பிரிவுகளைச் சேர்ந்த பொது நிறுவனங்களின் அயல்நாட்டு அதிகார வரம்புகளில் சில பிரிவுகளைச் சேர்ந்த பங்குகளைப் பட்டியலிடுவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்குகின்றது.
- இந்த மசோதாவானது ரூ.50 இலட்சம் வரை சிஎஸ்ஆர் பொறுப்புடைமை (சமூக நிறுவனப் பொறுப்புடைமை) உள்ள நிறுவனங்களுக்கு சிஎஸ்ஆர் குழுக்களை அமைப்பதிலிருந்து ஒரு ஆண்டுக்கு விலக்கு அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது குற்றங்களில் 3 மாற்றங்களைச் செய்துள்ளது.
    - சில குற்றங்களுக்கான தண்டனையை நீக்கியுள்ளது.
    - சில குற்றங்களுக்கான சிறைத் தண்டனையை நீக்கியுள்ளது.
    - சில குற்றங்களில் செலுத்தப்பட வேண்டிய அபராதத் தொகையைக் குறைத்து உள்ளது.
- மேலும் இது, அறநெறியில் தொழில் தொடங்குதல் மற்றும் நேர்மையான முறையில் தொழில் தொடங்குதலை ஊக்குவிக்கும் பல்வேறு குற்றங்களைக் குற்றமற்றதாக ஆக்கியுள்ளது.

## “கிரிட்டக்யா” ஹேக்கத்தான்

- “KRITAGYA” (கிரிட்டாக்யா) ஹேக்கத்தான் ஆனது தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சி ஆணையத்தினால் திட்டமிடப் பட்டு உள்ளது.
- இது பெண்களுக்கு உகந்த கூறுகளுடன் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் வேளாண் நடைமுறையை மேம்படுத்துவதற்கான சாத்தியமான தொழில்நுட்பத் தீர்வுகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## கோவிட் - 19 தொற்றால் இறந்த முதல் மத்திய அமைச்சர்

- கோவிட் - 19 தொற்று உறுதியான நிலையில் மத்திய இரயில்வே இணை அமைச்சரும் கர்நாடக பாஜக நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் அங்காடி (65) அவர்கள் காலமானார்.
- கொரோனா தீநுண்மியால் இறந்த முதல் மத்திய அமைச்சர் இவராவார்.
- இவர் பெலகாவி தொகுதியில் நான்கு முறை நாடாளுமன்ற உறுப்பினரானவர் ஆவார்.
- கன்னியாகுமரியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி., எச். வசந்த குமார் அவர்கள் கோவிட் - 19 தொற்றால் இறந்த முதல் நாடாளுமன்ற உறுப்பினராவார்.
- எனவே, 50 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் இடைத்தேர்தலைக் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி காணவிருக்கிறது.
- முன்னதாக, 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இத்தொகுதி இடைத்தேர்தலைக் கண்டது.
- இந்தத் தேர்தல் முன்னாள் முதல்வர் கே.காமராஜர் அவர்களின் அரசியல் வருகையைக் குறித்தது.

## அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) மசோதா - 2020

- அத்தியாவசிய பொருட்கள் (திருத்தம்) மசோதா, 2020 என்ற மசோதாவை செப்டம்பர் 15 அன்று நாடாளுமன்றம் நிறைவேற்றியது.
- இந்த மசோதாவானது 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றுகின்றது
- இது அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 என்ற சட்டத்தில் திருத்தம் செய்கிறது.
- அத்தியாவசியப் பொருட்கள் சட்டமானது (1955) பல்வேறு வகையான பொருட்களின் வர்த்தகத்தில் மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டைச் செயல்படுத்த மத்திய அரசை அனுமதித்தன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப் பட்டது.

### *மசோதாவின் அம்சங்கள்*

- தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், சமையல் எண்ணெய்கள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பொருட்களை அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலிலிருந்து நீக்குகிறது.

- தனியார் முதலீட்டாளர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான ஒழுங்குமுறை தலையீடுகளின் மீதான அச்சங்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போர், பஞ்சம், அசாதாரண விலை உயர்வு மற்றும் இயற்கைப் பேரழிவு போன்ற சூழ்நிலைகளில் விவசாய உணவுப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நுகர்வோரின் நலன்கள் பாதுகாக்கப் படுகின்றன என்பதை உறுதி செய்கிறது.

## வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2020

- வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 2010 என்ற சட்டத்தைத் திருத்த, செப்டம்பர் 23 அன்று பாராளுமன்றத்தால் வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) மசோதா 2020 நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா அச்சட்டத்தின் நிதி நடைமுறைகளைச் சீராக்க வேண்டி, அதன் விதிகளைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெளிநாட்டுப் பங்களிப்பைப் பயன்படுத்துவதில் இணக்க முறையை வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *மசோதாவின் அம்சங்கள்*

- இது 'அரசு ஊழியர்கள்' எந்தவொரு வெளிநாட்டு நிதியையும் பெறுவதைத் தடை செய்ய முற்படுகிறது.
- இது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டு நிதியின் பயன்பாட்டை தற்போதுள்ள 50 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க முன்மொழிகிறது.
- இது எந்தவொருச் சங்கத்திற்கும் / நபருக்கும் வெளிநாட்டுப் பங்களிப்பு சேர்வதைத் தடை செய்ய முயல்கிறது.
- வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற தகுதியான அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அல்லது சங்கங்களின் அனைத்து அலுவலர்கள், இயக்குநர்கள் மற்றும் பிற முக்கியச் செயற்பாட்டாளர்களுக்கு ஆதார் அட்டையைக் கட்டாய அடையாள ஆவணமாக மாற்ற இது முன்மொழிகிறது.

## தொழிலாளர் சட்டச் சீர்திருத்த மசோதாக்கள்

- தொழிலாளர் சட்டம் தொடர்பான பின்வரும் மூன்று மசோதாக்களைத் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
    - தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் குறித்த விதிமுறை,
    - தொழில்துறை உறவுகள் விதிமுறை, மற்றும்
    - சமூகப் பாதுகாப்பு விதிமுறை.
- இது தொழிற்சங்கங்கள், தொழில்துறை அமைப்புகளில் வேலைவாய்ப்பு நிலைமைகள் அல்லது தொழில்துறை முரண்களை விசாரணை செய்தல் மற்றும் அவற்றைத் தீர்த்து வைத்தல் தொடர்பான சட்டங்களைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மூன்று மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதன் மூலம், 29 மத்திய தொழிலாளர் சட்டங்கள் நான்கு பரந்த குறியீடுகளாக குறியிடப் பட்டுள்ளன (ஊதியங்கள் குறித்த முதல் குறியீடு கடந்த ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது).


- இது வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குகிறது மற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்குமான ஒரு சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது.

## மாற்றுத் திறனாளி விளையாட்டுகளுக்கான மையம்

- மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் மாற்றுத் திறனாளி விளையாட்டுகளுக்கான மையத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டது.
- மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் மாற்றுத் திறனாளி விளையாட்டுக்களுக்கான மையம் அமைப்பதற்கு 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்த மையமானது சமூகப் பதிவுகள் சட்டம், 1860 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.

## அந்த்யோதயா திவாஸ்

- தீன் தயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனாவின் நிறுவன தினமானது (செப்டம்பர் 25) "அந்தியோதயா திவாஸ்" ஆக அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது "கௌசல் சே கல் பதலேங்" (Kaushal Se Kal Badlenge) என்ற கருத்துருவின் கீழ் அனுசரிக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது 15 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தேவையான திறன் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதன் மீது கவனம் செலுத்துகின்றது.




## மருத்துவ சாதனங்கள் பூங்கா

- மத்திய அரசானது ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 4 மருத்துவச் சாதனப் பூங்காக்களை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நாட்டின் முதலாவது மருத்துவப் பூங்காவானது கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள தாணக் கல்லில் அமைக்கப்படவுள்ளது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு தன்னாட்சி மையமான சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் & கேரள மாநிலத் தொழிற்சாலை மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.


## தேசிய மருத்துவ ஆணையம்

- மத்திய அரசானது இந்திய மருத்துவக் கழகத்தை கலைத்து விட்டு அதே நேரத்தில் 4 இதர தன்னாட்சி வாரியங்களுடன் சேர்த்து தேசிய மருத்துவ ஆணையத்தை (NMC - National Medical Commission) அமைத்துள்ளது.
- அந்த 4 தன்னாட்சி வாரியங்கள் பின்வருமாறு:
    - இளங்கலை மருத்துவக் கல்வி வாரியம்
    - முதுகலை மருத்துவக் கல்வி வாரியம்
    - மருத்துவ ஆய்வு மற்றும் தர நிர்ணய ஆணையம்
    - அறவியல் மற்றும் மருத்துவப் பதிவுகள் வாரியம்
- இந்த வாரியங்கள் NMC அமைப்பின் தினசரி செயல்பாடுகளில் உதவுவதற்காக வேண்டி அமைக்கப் படுகின்றது.
- NMC சட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.
- NMC ஆனது 1 தலைவர், 10 பதவி வழி உறுப்பினர்கள் மற்றும் 22 பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- சுரேஷ் சந்திர சர்மா அவர்கள் இதன் முதலாவது தலைவராக அடுத்த 3 ஆண்டுகளுக்குப் பணியாற்றவுள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## ஜப்பான் பிரதமரின் பதவி விலகல்

- ஜப்பான் பிரதமரான ஷின்சோ அபே தனது உடல் நிலையின் காரணமாகத் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.
- ஜப்பானில் நீண்ட காலமாக பிரதமராக (2006-2021) பணியற்றியவர் இவராவார்.



## அமைதிப் படையில் பெண்களின் பங்கேற்பு

- அமைதிப் படையில் அதிக அளவிலான பெண்களின் பங்கேற்பிற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தில் இந்தியா இணைந்துள்ளது.
- இந்தத் தீர்மானமானது இந்தோனேசியாவினால் சமர்ப்பிக்கப்பட்டு, இந்தியாவினால் வழிமொழியப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் அமைதிப் படை நடவடிக்கைகளில் 5வது மிகப்பெரிய படை பங்களிப்பாளர் நாடு இந்தியாவாகும்.
- இந்தத் தீர்மானமானது ஒருமித்த கருத்து அடிப்படையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு தரவின் படி, ஐக்கிய நாடுகள் அமைதிப் படையினரில் வெறும் 6% நபர்களே பெண்கள் ஆவர்.
- மொத்தமாக ஐக்கிய நாடுகளில் 86,687 படைவீரர்கள் உள்ளனர். இதில் 5,243 பேர் பெண்கள் ஆவர்.

## சராசரி ஊதியங்களின் உலகளாவியத் தரவரிசை

- சராசரி ஊதியங்களின் உலகளாவியத் தரவரிசையானது Picodi.com என்ற இணையத் தளத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்தியா மொத்த சராசரி மாதாந்திர ஊதியத்துடன் 106 நாடுகளுக்கு மத்தியில் 72வது இடத்தில் உள்ளது.
- இதன் பகுப்பாய்வுக் குழுவானது உலகம் முழுவதும் உள்ள நாடுகளின் வருவாயை ஆராய்ந்து, சராசரி ஊதியங்களின் உலகளாவியத் தரவரிசையைத் தயாரித்துள்ளது.
- இந்தத் தரவரிசையில் சுவிட்சர்லாந்து முதலிடத்திலும் லக்ஸம்பர்க் மற்றும் அமெரிக்கா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- 166 ஆசிய நாடுகளிடையே இந்தியா 10வது இடத்தில் உள்ளது.
- இதில் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் ஹாங்காங் ஆகியவை முன்னிலையில் உள்ளன.

## பாகிஸ்தானிற்குச் சீனாவின் போர்க் கப்பல்கள்

- சீனாவானது 4 மேம்படுத்தப்பட்ட கடற்படை போர்க் கப்பல்களில் முதலாவதை பாகிஸ்தானிற்கு வேண்டித் துவக்கி வைத்துள்ளது.
- இந்த முதலாவதுக் கப்பலானது ‘வகை – 054’ வகுப்பு போர்க் கப்பலாகும்.
- இது சமீபத்திய மேற்பரப்பு, மேற்பரப்பின் அடியில் உள்ள பரப்பு, வான்வெளி எதிர்ப்பு ஆயுதங்கள், போர் மேலாண்மை அமைப்பு மற்றும் உணர்விகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மரம்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சிஎஸ்ஐஆர்-சிஎம்இஆர்ஐ நிறுவனமானது மேற்கு வங்கத்தின் துர்காபூரில் உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மரத்தை உருவாக்கியுள்ளது.
- இந்த மரமானது வருடாந்திர அளவில் 12,000 முதல் 14,000 அலகுகள் வரையில் தூய்மையான மற்றும் பசுமை ஆற்றலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

- சூரிய ஒளி மரமானது 10 டன்கள் முதல் 12 டன்கள் வரையிலான அளவிற்குக் கார்பன் உமிழ்வுகளைக் குறைக்கும் திறன் கொண்டது.



## மனித ஆப்பிரிக்க ட்ரைபனோசோமியாசிஸ் ஒழிப்பு

- சமீபத்தில் மனித ஆப்பிரிக்க ட்ரைபனோசோமியாசிஸ் என்பதனை ஒழித்த ஆப்பிரிக்காவின் முதலாவது நாடு டோகோ ஆகும்.
- கினியா வளைகுடாவில் அமைந்துள்ள ஒரு ஆப்பிரிக்கா நாடு டோகோ ஆகும். இது கடந்த 10 ஆண்டுகளில் இந்த நோய் குறித்த எந்தவொரு அறிகுறியையும் வெளிப்படுத்தவில்லை.
- உறக்க நோய் அல்லது மனித ஆப்பிரிக்க ட்ரைபனோசோமியாசிஸ் என்பது ஒரு வகை கொடிய ஈயினால் பரவும் ஒட்டுண்ணிகளால் ஏற்படுகின்றது. இது ஆப்பிரிக்காவில் துணை சகாராப் பகுதிகளில் 36 நாடுகளில் மட்டுமே காணப் படுகின்றது.

## 6வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றம்

- 6வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றமான "இராணுவம் - 2020" ஆனது ரஷ்யாவின் மாஸ்கோவில் நடத்தப்பட்டது.
- இது ரஷ்யப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இது சர்வதேச காங்கிரஸ் மற்றும் கண்காட்சி நிறுவனத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- முதன்முறையாக, 23 பீரங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் இந்நிகழ்வில் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டன.

## மாற்றுத் திறனாளிகளுக்காக வேண்டி சமூக நீதியை அணுகுவது குறித்த வழிகாட்டுதல்கள்

- உலகம் முழுவதும் உள்ள மாற்றுத் திறனாளிகள் நீதி அமைப்புகளை எளிதில் அணுகும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பானது மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக நீதியை அணுகுவது குறித்த தனது முதலாவது வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்களானது 10 கொள்கைத் தொகுப்புகளையும் அதைச் செயல்படுத்துதலுக்கான 54 நிலைகளையும் கொண்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் ஒப்பந்தமானது 21 ஆம் நூற்றாண்டில் மனித உரிமைகளின் முதலாவது மிக முக்கியக் கூறாக 2007 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- மாற்றுத் திறனாளி என்பவர் நீண்ட காலமாக உடல் ரீதியாக, மன ரீதியாக, அறிவு சார்ந்த அல்லது உணர்திறன் குறைபாடுகளைக் கொண்டவர்களாவர்.
- ஐக்கிய நாடுகளால் பராமரிக்கப்படும் புள்ளியியலின் படி, இந்தியாவில் அனைத்து வயதுக் குழுவைச் சேர்ந்தவர்களில் 2.4% ஆண்களும் 2% பெண்களும் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.
- இதை ஒப்பிடுகையில், அமெரிக்காவில் உள்ள மாற்றுத் திறனாளிகளில் 12.9% பெண்களும் 12.7% ஆண்களும் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.

## கவ்காஸ் – 2020

- இந்தியாவானது ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் “கவ்காஸ் – 2020” என்ற பல்தரப்பு இராணுவப் பயிற்சியின் பங்கேற்பிலிருந்து விலகியுள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்று மற்றும் தொடர் பிரச்சினைகள் ஆகியவற்றின் காரணமாக இந்த ஆண்டு கவ்காஸ் – 2020 பயிற்சிக்கு இந்தியா தனது படைப் பிரிவை அனுப்புவதில்லை என்று முடிவு செய்துள்ளது.
- சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய 2 நாடுகளும் இந்தப் பன்னாட்டுப் பயிற்சியின் ஒரு பகுதியாக உள்ளன.


## வரலாற்றில் முதன்முறையாக இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (UAE) இடையே நேரடி விமானச் சேவை

- மத்தியக் கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக, இஸ்ரேல் மற்றும் UAEற்கு இடையிலான முதலாவது வணிக ரீதியிலான நேரடி விமானமானது அபுதாபியில் தரையிறங்கியது.
- அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இந்த இரு நாடுகளும் முழு அளவிலான ராஜாங்க ரீதியிலான உறவுகளைத் தொடங்கியுள்ளதாக ஆகஸ்ட் 13 ஆம் தேதி அன்று இந்த இரு நாடுகளும் அறிவித்தன.
- எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு இஸ்ரேலுடன் ராஜாங்க ரீதியிலான உறவுகளை மேற்கொண்ட மூன்றாவது அரபு நாடு UAE ஆகும்.



## உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தி சொத்துக்கள்

- மெர்கோம் கேப்பிட்டல் என்ற நிறுவனமானது செயல்பட்டு வரும் திட்டங்கள், கட்டமைக்கப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் ஒப்பந்தப் புள்ளி வழங்கப் பட்டத் திட்டங்கள் என்ற அடிப்படையில் அதானி பசுமை ஆற்றல் உற்பத்தி நிறுவனத்தை (AGEL - Adani Green Energy Ltd) உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தி சொத்துக்கள் கொண்டுள்ள நிறுவனமாக தரவரிசைப் படுத்தியுள்ளது.
- AGEL நிறுவனத்தின் கட்டமைக்கப்பட்டு வரும் மற்றும் ஒப்பந்தப் புள்ளி பெற்றுள்ள திறனானது 10.1 ஜிகாவாட் ஆக உள்ளது. அதன் செயல்படும் திறனானது ஏறத்தாழ 3 ஜிகாவாட் ஆக உள்ளது.
- அதானி குழுமத்தின் ஒட்டு மொத்தத் திறன் 12.32 ஜிகாவாட் ஆக உள்ளது. இது 2019 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அமைக்கப் பட்டுள்ள மொத்தத் திறனை விட அதிகமாகும்.
- அதானி நிறுவனம் தனது முதலாவது சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தை 2015 ஆம் ஆண்டில் தொடங்கியது.




## கத்தாரின் தொழிலாளர் விதிகளில் மாற்றம்

- தொழிலாளர்கள் தற்போதைய பணியிலிருந்து மாறுவதற்கு முன்பு தற்போதைய முதலாளியிடமிருந்து அவர்கள் கட்டாயம் அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு விதியை கத்தார் நீக்கியுள்ளது.
- இது கபாலா முறை அல்லது தடையில்லாச் சான்றிதழ் முறை என்றறியப் படுகின்றது. இது இடம்பெயர்வுத் தொழிலாளர்கள் பணி மாறுவதற்கு முன்பு தங்களது முதலாளியிடம் அனுமதி பெற வழிவகை செய்கின்றது.
- கபாலா முறை என்பது வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை நடத்துவது குறித்து விதிகளை வகுக்கும் ஒரு முறையாகும்.
- கபாலா என்பது அரபி மொழியில் "உத்தரவாதம் அளித்தல்" அல்லது "அவர்களைப் பாதுகாத்தல்" என்பதைக் குறிக்கும்.
- மேலும், இது குறைந்தபட்ச ஊதியத்தை 25% ஆக, அதாவது $274 அல்லது 1000 கத்தாரி ரியால்களாக அதிகரித்துள்ளது.
- கத்தார் நாடானது 2022 ஆம் ஆண்டு பிபா உலகக் கோப்பையை நடத்துகின்றது (FIFA World Cup). அதற்கான கட்டுமானப் பணிகளுக்காக வேண்டி இது மிகப்பெரிய அளவில் அயல்நாட்டுப் பணியாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ளது.
- இந்த விதிமுறை வளைகுடா ஒத்துழைப்பு ஆணைய உறுப்பு நாடுகளான பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அரபு நாடுகளான ஜோர்டான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப் படுகின்றது.

## ஜி-20 அயலுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பு

- சமீபத்தில் சவுதி அரேபியாவானது நோய்த் தொற்றின் போது எல்லை தாண்டிய போக்குவரத்து இயக்கத்தின் மீது கவனம் செலுத்தும் ஜி-20 அயலுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டை நடத்தியது.
- இந்தச் சந்திப்பின் போது இந்தியாவானது மக்களின் ஒருங்கிணைந்த எல்லை தாண்டிய போக்குவரத்து இயக்கம் மீதான ஜி-20 கொள்கைகளின் மேம்பாட்டைப் பரிந்துரைத்தது.
- பரிந்துரைக்கப்பட்ட அந்த கொள்கைகள் பின்வரும் 3 கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவையாவன:
    - தனிமைப்படுத்துதல் நடைமுறைகளைத் தரப்படுத்துதல்.
    - பரிசோதனை நடைமுறைகளைத் தரப்படுத்துதல் மற்றும் உலக அளவில் பரிசோதனை முடிவுகளை ஏற்றுக் கொள்ளுதல்.
    - இயக்கம் மற்றும் போக்குவரத்து நடைமுறைகளைத் தரப்படுத்துதல்.

## SCO ஆணைய மாநாடு – இந்தியா

- 2020 ஆம் ஆண்டு நவம்பர் 30 அன்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organization) தலைவர்களின் ஆணைய மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது.
- இதில் இந்தியா 2005 ஆம் ஆண்டு முதல் பார்வையாளர் நாடாக இருந்து வந்தது.
- இதில் பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியா 2017 ஆம் ஆண்டில் உறுப்பினரானது.
- இந்தியாவானது மத்திய ஆசியப் பகுதியில் தனது வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக SCOவுடன் தனது ஒத்துழைப்பை விரிவுபடுத்த முடிவு செய்துள்ளது.
- இது இந்தியாவின் மத்திய ஆசிய இணைப்புக் கொள்கையின் மூலம் எட்டப்பட உள்ளது.

## சீனாவின் இராணுவ வலிமை குறித்த வருடாந்திர அறிக்கை

- சமீபத்தில் அமெரிக்காவானது சீனாவின் இராணுவ வலிமை குறித்த ஒரு வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, சீனக் கடற்படையானது உலகின் மிகப்பெரிய ஒரு கடற்படையாக விளங்குகின்றது.
- சீனாவின் ஒட்டு மொத்தப் போர்ப் படையானது ஏறத்தாழ 350 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகின்றது.
- இதில் 130 மிக முக்கிய நிலப்பரப்பு படைச் சாதனங்களும் உள்ளடங்கியுள்ளன.
- அதே வேளையில் அமெரிக்கக் கடற்படையிடம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 293 கப்பல்கள் இருந்தன.

### *இதர அம்சங்கள்*

- சீனாவின் மேற்குப் பிராந்தியக் கட்டுப்பாட்டகமானது இந்தியாவை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் சீனாவினால் இதற்கென்று அதிகாரப் பூர்வமாக ஒதுக்கப்படும் நிதி 174.4 பில்லியன் அமெரிக்க டாலராகும்.
- அதே வேலையில் இந்தியா 61.7 பில்லியன் அமெரிக்க டாலரை ஒதுக்குகின்றது.
- 2049 ஆம் ஆண்டுக்குள் உலகத் தரம் வாய்ந்த இராணுவத்தை உருவாக்குவதை சீனா நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சீனாவானது உலகத் தரம் வாய்ந்த இராணுவம் என்பதை அமெரிக்காவை விட மிகச் சிறப்பு வாய்ந்த இராணுவம் என்று வரையறுக்கிறது.
- சீனாவானது கடந்த 2 ஆண்டுகளில் ஸ்ட்ரைட் என்ற பயிற்சியில் ஆயுதப் படைகளின் பங்கேற்பை அதிகரித்துள்ளது.
- சீனாவானது தனது 8 யுவான் வகுப்பைச் சேர்ந்த டீசல்-மின்சார நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் இதர ஆயுதங்கள், இதர கட்டமைக்கப்பட்ட கடற்படை சாதனங்கள் ஆகியவற்றைப் பாகிஸ்தானிற்கு வழங்க இருக்கின்றது.

## பசுமைத் தூண்டலின் சிறு புத்தகம்

- "பசுமைத் தூண்டலின் சிறு புத்தகம்" என்ற ஒரு புதிய பதிப்பானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் (UNEP - United Nations Environment Programme) வெளியிடப் பட்டுள்ளது.
- புதிதாகத் வெளியிடப் பட்டுள்ள இந்தப் புத்தகமானது உலகம் முழுவதும் உள்ள ஏறத்தாழ 200 மில்லியன் மாணவர்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த பழக்கங்கள் மற்றும் பசுமையான வாழ்க்கை முறை போன்றவற்றை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நடத்தை அறிவியல் மற்றும் தூண்டல் குறித்த UNEP-ன் முதலாவது கோட்பாடாகும்.




## 5வது பிரிக்ஸ் கலாச்சாரத் துறை அமைச்சர்களின் சந்திப்பு

- 5வது பிரிக்ஸ் கலாச்சாரத் துறை அமைச்சர்களின் சந்திப்பானது ரஷ்யாவின் தலைமையில் காணொலி வாயிலாக நடத்தப்பட்டது.
- இந்தச் சந்திப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சாரத் துறை அமைச்சர்கள் பங்கு பெற்றனர்.
- புது தில்லியில் உள்ள தேசிய நவீனக் கலைக் கூடமானது 2021 ஆம் ஆண்டில் கலை அருங்காட்சியகங்கள் மற்றும் கலைக் கூடங்களின் பிரிக்ஸ் கூட்டிணைவு என்பதின் கீழ் "பிராந்தியங்களுக்கிடையிலான பிணைப்பு & கலாச்சாரக் கூட்டு விளைவுகளைக் கற்பனை செய்தல்" என்ற தலைப்பு கொண்ட ஒரு பிரிக்ஸ் கூட்டு கண்காட்சியை நடத்தவுள்ளது.

## ஏகே – 203 ரைபிள்களைத் தயாரித்தல்

- இந்திய மற்றும் ரஷ்ய நாட்டுத் தலைவர்கள் ஏகே – 203 ரைபிள் (துப்பாக்கி) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் படி, ரைபிள்கள் இரஷ்யாவின் உதவியுடன் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் கீழ் இந்தியாவில் உற்பத்தி செய்யப் படவுள்ளன.


- இந்த ரைபிள்கள் ஏகே – 47 ரைபிள்களின் மேம்படுத்தப்பட்ட பதிப்பு மற்றும் சமீபத்திய பதிப்புகளில் ஒன்றாகும்.
- ஏகே – 203 ஆனது இன்சாஸ் என்ற வகைக்கு மாற்றாக விளங்கும்.
- இன்சாஸ் என்பது இந்திய சிறு ஆயுத அமைப்பின் தாக்குதல் வகை ரைபிள் துப்பாக்கி (5.56 x 45மிமீ) என்பதைக் குறிக்கின்றது.

## 3வது அமெரிக்க – இந்திய உத்திசார் பங்காளர் மன்ற (USISPF) மாநாடு

- இது "அமெரிக்க-இந்தியப் பயணத்தின் புதிய சவால்கள்" என்ற கருத்துருவுடன் 5 நாட்கள் நடத்தப்படும் ஒரு மாநாடாகும்.
- USISPF (US India Strategic Partnership Forum) என்பது ஓர் இலாப நோக்கற்ற அமைப்பு ஆகும்.
- இது இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கிடையே நட்பை ஏற்படுத்துவதற்காகப் பணியாற்றுகின்றது. இது 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- USISPF ஆனது கொள்கைக் கருத்தாக்கத்தின் மூலம் இந்த 2 நாடுகளுக்கிடையே வலுவான மற்றும் மாறி வரும் உறவை உருவாக்கும் ஒரு முக்கியமான பணியில் ஈடுபட்டு வருகின்றது.

## கிரீஸ் மற்றும் துருக்கி ஆகியவற்றிற்கிடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை

- துருக்கியானது மத்தியத் தரைக் கடலின் இயற்கை வளங்கள் குறித்து கிரீஸ் நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இது இந்த 2 நாடுகளுக்கிடையே நீண்ட காலமாக நீடித்து வரும் கிழக்கு மத்தியத் தரைக்கடலில் உள்ள இயற்கை வளங்களின் நியாயமான பகிர்விற்கு வழிவகுக்கும்.
- துருக்கி மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் கிழக்கு மத்தியத் தரைக்கடலில் 2 நாடுகளுடனும் ஒன்றிப் பொருந்தும் வகையில் கடல்சார் உரிமைகளைக் கொண்டு உள்ளன.
- இந்தக் கடல்சார் பிரச்சினையானது பிராந்திய நீர், கண்டத் திட்டு மற்றும் ஏஜியன் கடலில் அவர்களது பகுதி உள்ளிட்ட கடல்சார் வரம்பு எல்லைகள் தொடர்பானதாகும்.



## முதலாவது உலக சூரிய ஒளிசக்தித் தொழில்நுட்ப மாநாடு

- சர்வதேச சூரிய ஒளிசக்திக் கூட்டிணைவானது (ISA - International Solar Alliance) முதலாவது உலக சூரிய ஒளிசக்தித் தொழில்நுட்ப மாநாட்டை நடத்தியது.
- இந்த மாநாடானது குறைந்த விலையிலான நீடித்த பசுமை ஆற்றல் குறித்த பொருளின் மீது கவனம் செலுத்தியது.
- இந்த மாநாடானது 8 முன்னெடுப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களைத் தொடங்கி வைத்துள்ளது.
- ISA ஆனது கடக ரேகை மற்றும் மகர ரேகை ஆகிய 2 வெப்ப மண்டலங்களுக்கு இடையே அமைந்த 121 சூரிய ஒளி பெறும் நாடுகளைக் கொண்டுள்ளது.




## வருடாந்திர இந்தோ-பசிபிக் வணிக மன்றம்

- மூன்றாவது வருடாந்திர இந்தோ-பசிபிக் வணிக மன்றத்தின் சந்திப்பானது வியட்நாமின் ஹனோயில் நடத்தப்பட உள்ளது.
- இந்த மன்றமானது அமெரிக்க-ஆசியான் வணிக ஆணையம், வியட்நாம் வணிக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பு, அமெரிக்க வணிகக் கூட்டமைப்பு மற்றும் வியட்நாம் அரசு ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்படுகின்றது.
- இந்த மன்றமானது சுதந்திரமான, வளமான மற்றும் வலுவான பகுதியைக் கொண்ட நாடுகளுடன் தடையற்ற மற்றும் திறந்தவெளி இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## இந்தோ-பசிபிக் கழகம்

- ஜெர்மனி நாடானது இந்தோ-பசிபிக் கழகத்தில் இணைந்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட சீனாவிடமிருந்து வர்த்தக வழிகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது பிரான்சிற்குப் பிறகு இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்காக முறையாக ஓர் உத்தியை ஏற்றுக் கொண்ட இரண்டாவது ஐரோப்பிய நாடாக ஜெர்மனியை ஆக்கியுள்ளது.
- இது அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகியவற்றினால் அமைக்கப் பட்டுள்ளது.

## ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான FAO-ன் பிராந்தியக் கருத்தரங்கு

- ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO - Food and Agriculture Organization) பிராந்தியக் கருத்தரங்கின் 35வது அமர்வானது பூடானின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டது.
- ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான 36வது பிராந்தியக் கருத்தரங்கை வங்க தேசமானது 2022 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- தற்பொழுது முதன்முறையாக 1973 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் இணைந்த ஒரு நாடாக இந்தக் கருத்தரங்கை பூடான் நடத்தவுள்ளது.
- பிராந்தியக் கருத்தரங்கானது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகின்றது.
- முதலாவது பிராந்தியக் கருத்தரங்கானது 1953 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள பெங்களூருவில் நடத்தப்பட்டது.




## முதல் இந்தியா-பிரான்ஸ்-ஆஸ்திரேலியா முத்தரப்பு உரையாடல்

- முதல் இந்தியா-பிரான்ஸ்-ஆஸ்திரேலியா முத்தரப்பு உரையாடலானது இணைய வழியில் நடைபெற்றது.
- இந்த உரையாடலானது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது.

- சீன ஆக்கிரமிப்பின் பின்னணியில் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் பொருளாதார, புவி-மூலோபாயச் சவால்கள் மற்றும் ஒத்துழைப்புக் குறித்து மூவரும் விவாதித்தனர்.

## கொள்முதல் மற்றும் சேவைகளுக்கிடையேயான (குறுக்கு சேவை) ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இரு நாடுகளின் ஆயுதப் படைகளும் சேவைகள் மற்றும் விநியோகத்தில் மிக நெருக்கமாக ஒத்துழைக்கும் வகையில் செயல்படுவதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தச் சேவைகள் மற்றும் விநியோகங்கள் ஆனது உணவு, நீர், போக்குவரத்து, விமானத்தில் சரக்கேற்றல், பெட்ரோலியம், உடை, தகவல் தொடர்பு மற்றும் மருத்துவச் சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது விநியோகங்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்தத்தின் பரஸ்பர அம்சம் மற்றும் கொள்முதல் மற்றும் சேவைகளுக்கிடையேயான ஒப்பந்தம் எனப் படுகின்றது.
- இது 10 ஆண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். இந்த இரண்டு நாடுகள் இதை முடிவுக்குக் கொண்டு வந்தால் தவிர, அடுத்த பத்து ஆண்டுக் காலத்திற்கு இது நீட்டிக்கப் படும்.
- இந்தியா இதே போன்ற ஒப்பந்தங்களை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்சு, ஓமன் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் கொண்டுள்ளது.
- இது சிறந்த கடல்சார் ஒத்துழைப்பை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இது பரஸ்பரப் பயன்களுக்கான கடல்சார் வசதிகளைப் பகிர்ந்து கொள்வதற்காக வேண்டி இந்த 2 நாடுகளும் இந்தியா-ஜப்பான் கடற்பயிற்சியை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## இஸ்ரேல் மற்றும் பக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையேயான அமைதி ஒப்பந்தம்

- அமெரிக்காவினால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் முழுமையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திட வேண்டி இஸ்ரேல் மற்றும் பக்ரைன் ஆகிய 2 நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இதன் மூலம் இஸ்ரேலுடன் ராஜ்ஜிய உறவுகளை ஏற்படுத்துவதற்காக ஒப்புக் கொண்டுள்ள ஐக்கிய அரபு அமீரகத்துடன் பக்ரைனும் சேர்ந்துள்ளது.
- அரபு உலகத்தில் உள்ள பெரும்பாலான நாடுகள் இஸ்ரேல்-பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கிடையே நிலவும் பிரச்சினையின் காரணமாக இஸ்ரேலுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வந்தன.



- எனினும், பக்ரைன் ஆனது இஸ்ரேலின் உரிமையை 2018 ஆம் ஆண்டு மே அன்று அங்கீகரித்தது.
- 1979 ஆம் ஆண்டில் எகிப்தும் 1994 ஆம் ஆண்டில் ஜோர்டானும் 2020ல் ஐக்கிய அரபு அமீரகமும் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ள 3 அரபு நாடுகள் ஆகும்.

## ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தில் (ECOSOC) இந்தியாவின் உறுப்பினர் அந்தஸ்து

- இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை ECOSOC நிறுவனத்தின் (Economic and Social Council) அமைப்பான பெண்கள் நிலை குறித்த ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- இந்த 2 நாடுகளும் 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்திற்கு, அதாவது 4 ஆண்டுகளுக்கு இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இருக்கும்.

### *ECOSOC*

- ECOSOC ஆனது சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் ஆகிய நீடித்த வளர்ச்சியின் 3 பரிமாணங்களை மேம்படுத்துவதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய அமைப்பாக விளங்குகின்றது.
- இது சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப் பட்ட இலக்குகளை அடைவதற்காக விவாதம் மற்றும் புத்தாக்கச் சிந்தனையை வலுப்படுத்துதல், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஒருமித்த கருத்தை உருவாக்குதல், ஒத்துழைப்பு முயற்சிகள் ஆகியவற்றிற்கான ஒரு மையத் தளமாக விளங்குகின்றது.

## டிஜிபூட்டி நடத்தை விதிமுறைகள் பார்வையாளர் அந்தஸ்து

- இந்தியாவானது டிஜிபூட்டி நடத்தை விதிமுறைகள் / ஜெட்டா திருத்தத்தில் ஒரு பார்வையாளர் நாடாக இணைந்துள்ளது.
- இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் செங்கடல், ஏடன் வளைகுடா, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைத் தீவு நாடுகள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள 19 நாடுகளைக் கொண்டுள்ள கடல்சார் விவகாரங்கள் குறித்த ஒரு குழுவாகும்.
- இந்தக் குழுவில் பார்வையாளர்களாக இருக்கும் ஜப்பான், நார்வே, ஐக்கிய இராஜ்ஜியம், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இந்தியா இணைந்துள்ளது.
- டிஜிபூட்டி நடத்தை விதிமுறைகள் என்பது 2008 ஆம் ஆண்டில் சர்வதேசக் கடல்சார் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிராந்தியக் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமாகும்.

## பாகிஸ்தானின் ஐந்தாவது மாகாணம்

- பாகிஸ்தான் தனது ஐந்தாவது மாகாணமாக ஆக்கிரமிக்கப்பட்ட கில்கித்-பால்டிஸ்தான் பிராந்தியத்தை ஒருங்கிணைக்கப் போகிறது.
- இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் (PoK - Pakistan-occupied Kashmir) இரண்டு பகுதிகளில் ஒன்றாகும்.
- மற்றொரு பகுதி “ஆசாத் ஜம்மு-காஷ்மீர்” ஆகும்.
- இவை இரண்டும் முந்தைய சுதேச மாநிலமான ஜம்மு-காஷ்மீர் பிரதேசத்தின் ஒரு பகுதியாகும்.

- அப்போதைய ஒரு பிரிட்டிஷ் அதிகாரியான கில்கிட் ஸ்கௌட்ஸ் என்பவரின் நடவடிக்கையால் இந்தப் பகுதி அப்போது புதிதாக உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் நாட்டிற்கு 1947 ஆம் ஆண்டு நவம்பரில் ஒப்படைக்கப்பட்டது.
- இது சீனாவிற்கு நிலவழியிலான அணுகலை வழங்குகிறது, இது ஏராளமான நன்னீர் நீர்த்தேக்கங்களையும் கொண்டுள்ளது. மேலும் சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பெருவழிப்பாதையும் இதன் வழியாகச் செல்கிறது.




## இந்தியாவிற்கு மீன் ஏற்றுமதிக்கான சிறப்பு அனுமதி

- வங்க தேச அரசானது ஹில்சா மீனை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான தனது அனுமதியினை வழங்கியுள்ளது.
- இதற்கு முன்பு 2012 ஆம் ஆண்டில் வங்க தேச அரசானது இந்தியாவிற்கு ஹில்சா மீனை ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்திருந்தது.

### *ஹில்சா மீன்*

- "இலிஷ்" மீன் எனப்படும் ஹில்சா மீன் இனமானது வங்கதேசத்தில் மட்டும் காணப்படும் ஓர் இனமாகும்.
- இந்த மீன் இனமானது பொதுவாக "மீன்களின் அரசன்" என்று அழைக்கப்படுகின்றது.
- ஹில்சா மீன் இனமானது வங்கதேசத்தின் தேசிய மீன் இனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது ஐயூசிஎன்-னின் சிவப்புப் பட்டியலில் "அச்சுறுத்தல்" நிலையில் உள்ள இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- வங்க தேசமானது உலகின் மொத்த ஹில்சா மின் உற்பத்தியில் 75% உற்பத்திக்குக் காரணமாக விளங்குகின்றது.

## அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர்க்கான இந்தியாவின் கோரிக்கை

- பாகிஸ்தான் நாட்டில் மரண தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் குல்பூஷன் ஜாதவ் நியாயமான மற்றும் தடையற்ற விசாரணையை மேற்கொள்வதை உறுதி செய்வதற்காக வேண்டி அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர் அல்லது இந்திய வழக்குரைஞர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் ஒரு கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது.

- அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர் என்பவர் உயராட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் ஐக்கிய இராஜ்ஜிய அரசிக்கு என்று நியமிக்கப்பட்ட ஒரு வழக்குரைஞர் ஆவார்.
- அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர்கள் உலகம் முழுவதும் ஏறத்தாழ அனைத்து நீதிமன்றங்களிலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.
- அரசி ஆணை பெற்ற வழக்குரைஞர் அனுபவத்தின் அடிப்படையில் அல்லாமல் தகுதியின் அடிப்படையில் சட்டம் சார் தொழில்முறையிலிருந்து நியமிக்கப் பட்டு உள்ளனர்.

## சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பிற்கான சாசனம்

- உலக சுகாதார நிறுவனமானது (WHO - World Health Organization) சுகாதாரப் பணியாளர் பாதுகாப்பு சாசனம் ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இது சுகாதாரப் பணியாளர்கள் பாதுகாப்பான பணி நிலைமைகள், பயிற்சி, ஊதியம், அவர்கள் பெறும் மதிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளதை உறுதி செய்வதற்கான ஒரு முயற்சியாகும்.
- இந்த சாசனத்தின் படி, சுகாதாரப் பணியாளர்கள், அதிகப் பெரும்பான்மையாக உள்ள நாடுகளின் மொத்த மக்கள் தொகையில் 3%ற்கும் குறைவாகவும் ஏறத்தாழ அனைத்து குறைந்த வருமானமுள்ள மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளில் 2%ற்கு குறைவாகவும் உள்ளனர்.
- ஏறத்தாழ 14% கோவிட் – 19 நோய்த் தொற்று பாதிப்புகள் சுகாதாரப் பணியாளர்களிடையேப் பரவியுள்ளதாக WHO அமைப்பில் பதிவாகியுள்ளன.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் படி, தெலுங்கானா (18%), மகாராஷ்டிரா (16%), தில்லி (14%), கர்நாடகா (13%), புதுச்சேரி (12%), பஞ்சாப் (11%) ஆகியவை இந்தியாவில் சுகாதார நலப் பணியாளர்களிடையே அதிக அளவிலான கோவிட் – 19 நோய்த் தொற்றைக் கொண்டுள்ளன.

## நேபாளத்திற்கு டீசல் – மின்சார பல் அலகு இரயில்கள்

- கொங்கன் இரயில்வேயானது ஜெய்நகர்-குர்தா அகல இரயில் பாதைக்காக வேண்டி நேபாள இரயில்வேயிற்கு 2 நவீன டீசல்-மின்சார பல் அலகு இரயில்களை வழங்கி உள்ளது.
- இது பீகாரின் ஜெய்நகர் மற்றும் தனுசா மாவட்டத்தில் உள்ள குர்தா ஆகியவற்றிற்கு இடையே செயல்படவுள்ளது.
- அந்த இமயமலை தேசத்தில் முதலாவது அகல இரயில் பாதை சேவை இதுவே ஆகும்.



## மாலத்தீவிற்கு முதலாவது நேரடி சரக்குப் படகுச் சேவை

- ❖ இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய இரண்டு நாடுகள் தங்களுக்கிடையேயான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக முதலாவது நேரடி சரக்குப் படகுச் சேவையைத் தொடங்கியுள்ளன.
- ❖ இந்தச் சரக்குப் படகுச் சேவையானது இந்தியாவில் உள்ள தூத்துக்குடி மற்றும் கொச்சின் துறைமுகங்களை மாலத்தீவில் உள்ள குல்குதுக்பூசி மற்றும் மாலித் துறைமுகங்களுடன் இணைக்கவுள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பானது இந்த 2 நாடுகளுக்கிடையேயான சரக்குப் போக்குவரத்திற்கு ஏற்படும் பயணச் செலவு மற்றும் பயண நேரம் ஆகியவற்றின் குறைப்பிற்கு உதவ இருக்கின்றது.
- ❖ இந்திய மற்றும் மாலத்தீவுத் துறைமுகங்களை இணைப்பதற்காகப் பயன்படுத்தப் படும் சரக்குப் படகுக் கப்பலான எம்சிபி லின்ஸ் (MCP Linz) ஆனது இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படுகின்றது.

## உலகின் முதலாவது வணிக ரீதியிலான ஹைட்ரஜன் விமானம்

- ❖ ஹைட்ரஜன் விமானமானது ஏர் பஸ்ஸினால் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட உள்ளது.
- ❖ இது முதலாவது வணிக ரீதியிலான ஹைட்ரஜனால் செயல்படுத்தப்படும் விமானமாகும்.
- ❖ ஏர்பஸ் ஆனது "ZEROe" என்ற குறியீட்டுப் பெயரின் கீழ், சுழிய உமிழ்வுகளுக்கான 3 கருத்தாக்கங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - ○ டர்போபான் வடிவமைப்பு (Turbofan design) – 120 முதல் 200 பயணிகள் அமரும் வகையில்
  - ○ கலப்பு இறக்கை பாக வடிவமைப்பு (Blended wing body design)– 200 பயணிகள் அமரும் வகையில்
  - ○ டர்போபிராப் வடிவமைப்பு (Turboprop design) – 200 பயணிகளுக்கு மேல் அமரும் வகையில்
- ❖ இந்த விமானங்கள் 2035 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வரும்.
- ❖ இதற்கு முன்பு, ரஷ்யத் தயாரிப்பு நிறுவனமான டுபோலேவ் ஆனது "TU-154" எனப்படும் விமானத்தின் முன்மாதிரியைக் கட்டமைத்துள்ளது.
- ❖ திரவ நைட்ரஜனில் செயல்படும் முதலாவது சோதனை விமானம் அதுவாகும்.



## ஜிம்மெக்ஸ் 2020 (Jimex)

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இருதரப்புக் கடல் பயிற்சியான "ஜிம்மெக்ஸ்" ஆனது இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப் பட்டது.
- ஜிம்மெக்ஸ் ஆனது இந்த இரு நாடுகளுக்கிடையே உயரிய நிலையில் ஒருங்கிணைந்து செயல்படும் தன்மை மற்றும் உயர்நிலை கூட்டுச் செயல்பாட்டுத் திறன்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றது.
- இந்தப் பயிற்சியானது கடல்சார் ஒத்துழைப்பின் மீது சிறப்புக் கவனம் செலுத்தும் நோக்கத்துடன் 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியின் கடைசிப் பதிப்பானது 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.




## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆணையச் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கை


- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் பிரேசில், ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத் துறை அமைச்சர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75வது அமர்வின் போது காணொலி வாயிலாக சந்தித்துப் பேசினர்.
- இவர்கள் சமகால நிகழ்வுகளை சிறந்த முறையில் பிரதிபலிப்பதற்காக ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் முக்கியமான முடிவு எடுக்கும் அமைப்புகளை சீர்த்திருத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினர்.

### *கோரிக்கைகள்*

- இந்த ஆணையத்தில் இந்தக் குறிப்பிட்ட நாடுகளுக்கு நிரந்தர இடங்கள் அளிக்கப்பட வேண்டும்.
- இந்த ஆணையத்தை முறையான, திறனுள்ள, பிரதிநிதித்துவம் உள்ளதாக மாற்றுவதற்கு வேண்டி ஐக்கிய நாடுகளுக்கு முக்கியமாகப் பங்களிக்கும் நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் ஆகியோரின் மேம்பட்ட பங்கிற்கான தெளிவான தேவை உள்ளது.
- குறைந்த அளவிலான பிரதிநிதித்துவம் தொடர்பாக முந்தைய காலத்தில் ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியைச் சரி செய்வதற்கு வேண்டி ஆப்பிரிக்காவிற்கு நிரந்தர மற்றம் நிரந்தரமற்ற பிரிவுகளில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றச் சீர்திருத்தங்களுக்காக குறிப்பிட்ட காலத்தில் எழுத்துப் பூர்வ அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்.

## ஆசியாவில் ஊடாடும் தொடர்பு மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்புச் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கு (CICA)

- சமீபத்தில் இந்தியாவின் பங்கேற்புடன் CICA அமைப்பின் (Conference on Interaction and Confidence-Building Measures in Asia) சிறப்பு அமைச்சரவைக் கருத்தரங்கானது நடத்தப் பட்டது.
- இது ஆசியாவில் அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைப்புத் தன்மை ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக செயல்படும் அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு மன்றமாகும்.
- இந்தக் கருத்தரங்கின் முக்கியக் கருத்துருவானது சிறிய மற்றும் பெரிய நாடுகளின் பாதுகாப்பு, கூட்டு முயற்சி மற்றும் பரஸ்பர பயன்பாட்டுத் தொடர்பு ஆகியவற்றின் பிரிக்க முடியாத தன்மை என்ற முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.
- CICA மாநாடானது CICA செயல்பாடுகளுக்கான விவாதங்களை நடத்துவதற்காகவும் அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காகவும் முன்னுரிமைகளை நிர்ணயிப்பதற்காகவும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகின்றது.
- வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பானது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும்.
- CICA ஆனது 27 உறுப்பு நாடுகள்; 8 பார்வையாளர் நாடுகள்; 5 பார்வையாளர் அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- CICAல் ஒரு நாடு உறுப்பினராக இணைவதற்கு, அந்த நாடு தனது நிலப்பகுதியை ஆசியாவில் கட்டாயம் பகிர்ந்திருக்க வேண்டும்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2019-20

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) தனது வருடாந்திர அறிக்கை 2019-20 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2019-20 ஆம் ஆண்டில் மொத்த வருவாயானது 28.97% என்ற அளவில் அதிகரித்துள்ளது.

### *முக்கியத் தரவுகள்*

- RBIயின் இருப்பு நிலையானது 13.42% என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் அதன் மொத்த வருவாயானது ரூ.1,49,672 ஆக இருந்தது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் 1,93,036 ஆக உள்ளது.


- அதன் செலவினமானது 39.72% என்ற அளவில் குறைந்துள்ளது.
- வங்கியின் வட்டி வருவாயானது 44.62% ஆக அதிகரித்துள்ளது.
- அரசுப் பங்குகளில் RBIயின் இருப்பு நிலையானது 57.19% ஆக அதிகரித்துள்ளது.
- வங்கி மோசடி வழக்குகளின் மதிப்பானது 74% ஆக அதிகரித்துள்ளது.
- வங்கி மோசடி வழக்குகளின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் 6800 ஆக அதிகரித்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 5900 ஆக இருந்தது.
- வங்கி அமைப்பின் நிகர வாராக் கடன் விகிதமானது 9.1% ஆகக் குறைந்துள்ளது. இது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 11.2% ஆக இருந்தது.
- தற்போது புழக்கத்தில் உள்ள பணமானது 17% ஆக அதிகரித்துள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் ரூ. 21.10 டிரில்லியன் ஆக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை, RBI ஆனது 618.16 மெட்ரிக் கடன் தங்கத்தை கையிருப்பில் வைத்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் 566,23 டன்களாக இருந்தது.

## "Eat out to help out" திட்டம்

- இந்தத் திட்டமானது (EOHO – Eat Out to Help Out) ஐக்கிய இராஜ்ஜியத்தில் கோவிட் – 19 நோய்த் தொற்று காரணமான பொது முடக்கத்திற்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட இருக்கும் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா சம்பந்தமான வணிக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக வேண்டி அந்நாட்டு அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட ஒரு பொருளாதார மீட்டெடுப்புத் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது கோடைக்காலப் பொருளாதாரப் பணிகள் மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- EOHO திட்டத்தின் கீழ், அந்நாட்டு அரசானது ஆகஸ்ட் மாதம் முழுவதும் அனைத்து வாரங்களிலும் திங்கள் முதல் புதன் வரை விடுதிகளில் உணவுகளுக்கு (உணவு மற்றும் மதுபானம் அல்லாத நீராகாரங்கள்) 50% மானியம் அளிக்க இருக்கின்றது.

## இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் போக்கு

- தேசியப் புள்ளி விவர அலுவலகத்தின் (National Statistical Office) தரவுகளின் படி இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2020 ஏப்ரல்-ஜூன் காலாண்டில் 23.9% (-23.9%) என்ற அளவில் சுருங்கியுள்ளது.
- இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 26.9 லட்சம் கோடியாக குறைந்துள்ளது, இது கடந்த ஆண்டு இருந்ததை விட 23.9% குறைவு.
- பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 38.08 லட்சம் கோடியாக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டு இருந்ததை விட 22.6% குறைவு.
- ஜூன் காலாண்டில் ஏற்பட்டுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சரிவானது, சுதந்திரத்திற்குப் பின்னர் இந்திய பொருளாதாரத்தின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள மிக மோசமான சரிவாகும்.
- இது சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட இந்தியாவின் நான்காவது மந்தநிலை மற்றும் தாராளமயமாக்கலுக்குப் பின்னர் ஏற்பட்ட முதல் மந்தநிலை ஆகும்.
- பொருளாதாரமானது கடைசியாக 1980 நிதியாண்டில் சுருங்கியது.
- இந்தியாவானது 1997-98 ஆம் ஆண்டிலிருந்து காலாண்டு அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சித் தரவை வெளியிடத் தொடங்கிய பின்னர் ஏற்பட்ட முதல் சரிவு இதுவாகும்.




## டிஜிட்டல் கொடுப்பனவு அறிக்கையில் மோசடி மற்றும் இடர் மேலாண்மை

- இதை தேசிய மென்பொருள் மற்றும் சேவை வழங்கு நிறுவனங்களின் சங்கம், இந்தியத் தரவுப் பாதுகாப்பு மன்றம் மற்றும் பேபால் நிறுவனம் இணைந்து உருவாக்கி உள்ளன.
- மோசடிகளின் வளர்ச்சி மற்றும் கட்டண மோசடி ஆகியவற்றின் மீது ஒரு பார்வையை இந்த அறிக்கை அளிக்கிறது.

### *முக்கிய கண்டுபிடிப்புகள்*

- மின்னணு வணிகச் சந்தையானது 50 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து (2018 இல்) 200 பில்லியன் அமெரிக்க டாலராக (2026 ஆம் ஆண்டில்) உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இணையப் பயனர்களின் எண்ணிக்கையானது 560 மில்லியனில் இருந்து (2018 ஆம் ஆண்டில்) 835 மில்லியனாக உயரும் (2023 ஆம் ஆண்டில்) என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 நிலவரப்படி, 925 மில்லியன் பற்று அட்டைகள் (டெபிட் கார்டு) மற்றும் 47 மில்லியன் கடன் அட்டைகள் (கிரெடிட் கார்டு), சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் வழங்கப் பட்டுள்ளன.

## முன்னுரிமைத் துறைக்கு கடன் வழங்கல் விதிகளின் திருத்திய விதிமுறைகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது வளர்ந்து வரும் தேசிய முன்னுரிமைகளின் வரிசையில், தொழில்முனைவுத் திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் ஆகியவற்றை இணைப்பதற்காக PSL (Priority sector lending) வழிகாட்டுதல்களைத் திருத்தியுள்ளது.
- இது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.
    - மின்சார விநியோக அமைப்பினால் இணைக்கப்பட்ட வேளாண் காற்றழுத்த விசைக் குழாய்களின் சூரிய ஒளிமயமாக்கத்திற்காக வேண்டி சூரிய ஒளி மின்னாற்றல் உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்காக விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல்.
    - அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு ஆலைகளை அமைப்பதற்காகக் கடன் வழங்குதல்.
- திருத்தப்பட்ட PSL வழிகாட்டுதல்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வழிவகை செய்கின்றது.

- கடன் வழங்குதலில் பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு சிறந்த முறையில் கடன் வழங்குதல்.
- சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் விளிம்புநிலை பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதலை அதிகரித்தல்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சுகாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துதல்.

## நிறுவன அடையாளம் – Vi

- ஒருங்கிணைந்த நிறுவன அடையாளமான Vi ஆனது வோடபோன் மற்றும் ஐடியா நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய நிறுவன அடையாளமானது "நாளைய தினத்திற்காக ஒன்றிணைதல்" என்ற எழுத்துருவைக் கொண்டுள்ளது.
- இந்த 2 நிறுவனங்கள் 2018 ஆம் ஆண்டில் இணைந்தன.
- இந்த இணைப்பானது 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 அன்று தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தினால் இறுதி செய்யப் பட்டது.


## கடன் மறுசீரமைப்பிற்காகக் கண்டறியப்பட்டுள்ள 26 துறைகள்

- புதிய வளர்ச்சி வங்கியின் முன்னாள் தலைவரான கே வி காமத் என்பவரது தலைமையின் கீழ் உள்ள 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது தனது அறிக்கையை ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பித்துள்ளது.
- இந்தக் குழுவானது கொரானா நோய்த் தொற்றுக் காலத்தில் பாதிக்கப்பட்டுள்ள கடன்களை ஒருமுறை மறுசீரமைப்பதற்காக தேவைப்படும் நிதியியல் குறிகாட்டிகள் குறித்து பரிந்துரைப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது.

## EASE 2.0 வங்கியியல் சீர்திருத்தங்கள் குறியீடு

- சமீபத்தில் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான பொதுத் துறை வங்கிகளின் செயல்பாடு (PSB - Public Sector Banks) மீதான மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் சிறப்புமிகு சேவை 2.0 (EASE - Enhanced Access and Service Excellence) வங்கியியல் சீர்திருத்தங்கள் குறியீடானது வெளியிடப் பட்டுள்ளது.
- மேலும் இந்த நிகழ்ச்சியின் போது மத்திய நிதித் துறை அமைச்சர் PSBயினால் வீட்டு வாயில்களிலேயே வழங்கப்படும் வங்கிச் சேவைகளையும் தொடங்கி வைத்தார்.
- EASE 1.0 என்ற அறிக்கையானது வாராக் கடன் சொத்துக்களுக்கான தீர்வுகளின் மீது PSBயின் செயல்பாடுகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை வெளிப்படையாகக் காட்டியது.

- EASE 2.0 ஆனது EASE 1.0-ன் அடித்தளத்தின் மீது கட்டமைக்கின்றது. இது சீர்திருத்த நடவடிக்கைகளை மாற்ற முடியாததாகவும், செயல்பாடுகள் மற்றும் நிறுவன அமைப்புகளை வலுவானதாகவும் மாற்றிட சிறந்த முடிவுகளை எடுத்துக் காட்டுவதற்காக வேண்டி 6 கருத்துருக்கள் மூலமாக புதிய சீர்திருத்த நடவடிக்கைத் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.




## Top 3 banks in each theme

**Top 3 banks for EASE 2.0 Index**
- Bank of Baroda
- State Bank of India
- Oriental Bank of Commerce

**Top 3 banks in improvement from March baseline**
- Bank of Maharashtra
- Central Bank of India
- Corporation Bank

**Theme 1: Responsible Banking**
- Bank of Baroda
- State Bank of India
- Punjab National Bank

**Theme 2: Customer Responsiveness**
- State Bank of India
- Oriental Bank of Commerce
- Bank of Baroda

**Theme 3: Credit Off-take**
- Oriental Bank of Commerce
- Union Bank of India
- State Bank of India

**Theme 4: UdyamiMitra for MSMEs**
- Oriental Bank of Commerce
- State Bank of India
- Union Bank of India

**Theme 5: Deepening FI & Digitalisation**
- Bank of Baroda
- Canara Bank
- Punjab National Bank

**Theme 6: Governance and HR**
- State Bank of India
- Bank of Baroda
- Punjab National Bank

Note: Only banks with ≥80% of total weight for a theme applicable for them are considered for ranking

## 11 புதிய தொழிற்துறைப் பெருவழிப் பாதைகள்

- தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது (DPIIT - Department for Promotion of Industry and Internal Trade) நாட்டில் 11 தொழிற்துறைப் பெருவழிப் பாதைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அறிவித்துள்ளது.
- அந்த 11 தொழிற்துறை பெருவழிப் பாதைகளில் தில்லி-நாக்பூர் தொழிற்துறை பெருவழிப் பாதையும் உள்ளடங்கும்.
- இதில் பின்வரும் 5 திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளன. அவையாவன:
  - தோலேரா சிறப்பு முதலீட்டுப் பகுதி
  - சேந்ரா பிட்கின் தொழிற்துறைப் பகுதி


- ○ பெருநகர நொய்டா ஒருங்கிணைந்த தொழிற்துறை நகரம்
- ○ விக்ரம் உத்யோக்புரி ஒருங்கிணைந்த தொழிற்துறை நகரம்.
- ○ நங்கல் சௌத்ரி ஒருங்கிணைந்த பல் முனைய தளவாட மையம்

## பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகள் குறித்த விதிகள் : (CAROTAR – 2020)

- ❖ சுங்கம் (வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகளின் விதிகள் குறித்த நிர்வாகம்) விதிகள், 2020 ஆனது (CAROTAR - 2020) 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- ❖ இது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 அன்று அறிவிக்கப்பட்டது.
- ❖ இது தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் (FTA - Free trade agreements) கீழ் இறக்குமதிகள் குறித்த முன்னுரிமை விகிதங்களை அனுமதிப்பதற்காக "உற்பத்தியாகும் நாடுகளின் விதிகளின்" அமலாக்கத்திற்கான வழிகாட்டுதல்களை நிர்ணயிக்கின்றது.
- ❖ இந்தப் புதிய விதிகள், FTA-ன் கீழ் வரிச் சலுகைகளின் தவறான பயன்பாட்டிற்கான எந்தவொரு முயற்சிகளையும் ஆய்வு செய்யும் சுங்கங்களின் திறனை வலுப்படுத்த இருக்கின்றது.

### *CAROTAR விதிகள்*

- ❖ தற்பொழுது இறக்குமதியாளர் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகளின் தரநிலைமை பூர்த்தி செய்யப் பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு முன்பு அதற்கான முறையான அனுமதியைப் பெற வேண்டும்.
- ❖ இறக்குமதியாளர் வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்சத் தகவல்கள் குறித்த ஒரு பட்டியலானது பொது வழிகாட்டுதலுடன் விதிகளில் கூறப்பட்டுள்ளது.
- ❖ இறக்குமதியாளர் தற்பொழுது உற்பத்தியாகும் நாடுகள் சான்றிதழில் உள்ளவாறு நுழைவுக் கட்டணத்தில் பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகள் குறித்த தரவைப் பூர்த்தி செய்ய வேண்டும்.



## 4வது உலக ஆயுர்வேத மாநாடு

- உலக ஆயுர்வேத மாநாட்டின் 4வது பதிப்பானது துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களால் காணொலி முறையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "கொள்ளை நோய்த் தொற்றுக் காலத்தில் ஆயுர்வேதத்திற்கான வளர்ந்து வரும் வாய்ப்புகள்" என்பதாகும்.
- இந்த மாநாட்டின் நோக்கம் ஆயுர்வேத நோய்த் தடுப்பு மாதிரியை "சுகாதாரம் என்பது ஒன்று" மற்றும் "ஆயுர்வேதத்தின் மூலம் நோய்த் தடுப்பாற்றல்" என்று பெயரிடப் பட்ட ஒரு தீர்வாக உலக அளவில் எடுத்துக் காட்டுவதாகும்.

## i-ATS – தானியங்கி இரயில் கண்காணிப்பு

- தில்லி மெட்ரோ இரயில் கழகமானது மெட்ரோவிற்காக உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட தகவல் தொடர்பு அடிப்படையிலான இரயில் கட்டுப்பாட்டு சமிக்ஞை தொழில்நுட்பமான "i-ATS" (Automatic Train Supervision) என்பதைத் தொடங்கி உள்ளது.
- i-ATS என்பது இரயில் இயக்கத்தை மேலாண்மை செய்யும் கணினி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- இந்த முறையானது சில குறிப்பிட்ட நிமிடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் மெட்ரோ சேவைகள் போன்ற அதிக அடர்வான செயல்பாடுகளுக்கான தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்குகின்றது.
- உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட i-ATS தொழில்நுட்பமானது, இது போன்ற தொழில்நுட்பத்தைக் கையாளும் அயல்நாட்டு வணிகர்கள் மீது இந்திய மெட்ரோக்கள் சார்ந்து இருப்பதை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கும்.
- இது பல்வேறு விநியோகஸ்தர்களின் சமிக்ஞை அமைப்புகள் மற்றும் இரயில் கட்டுப்பாட்டு அமைப்புடன் பணியாற்ற இருக்கின்றது.
- கூடுதலாக, இது இந்திய இரயில்வேயில் அறிமுகப்படுத்துதலுக்குப் பொருந்தும்.

## இந்தியாவிற்கு எதிரான வோடபோன் வழக்கு

- வோடபோன் நிறுவனமானது தி ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றமான நிரந்தர நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான ரூ. 20,000 கோடி நிலுவைத் தொகை வழக்கில் வெற்றி பெற்றுள்ளது.
- இந்திய அரசானது 2007 ஆம் ஆண்டில் வோடபோன் நிறுவனத்திடமிருந்து நிலுவை வரிகளையும் மூலதன இலாபத்தில் ரூ.7990 கோடி ரூபாயையும் வழங்குமாறு கோரியது.
- வோடபோன் நிறுவனம் இது குறித்து மும்பை (பம்பாய்) உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கில் வருமான வரித் துறைக்கு ஆதரவாக தீர்ப்பு வெளியானது.
- அதன்பின், இந்நிறுவனம் இது குறித்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.
- இந்திய உச்சநீதிமன்றமானது 2012 ஆம் ஆண்டில் வருமான வரிச் சட்டம், 1961 எனும் சட்டத்தின் படி வோடபோன் குழுமத்தின் இடையீடு சரி என்று தீர்ப்பு வழங்கியது.
- ஆனால் அதே ஆண்டில் மத்திய அரசானது இது போன்ற ஒப்பந்தங்களில் முன்தேதியிட்ட காலத்திற்கான வரி குறித்த அதிகாரங்களை வருமான வரித் துறைக்கு வழங்குவதற்காக நிதிச் சட்டத்தில் ஒரு திருத்தத்தை மேற்கொண்டது.

- இந்த வழக்கு அப்பொழுது "முன்தேதியிட்ட காலத்திற்கான வரி வழக்கு" (retrospective taxation case) என்று அறியப் பட்டது.



**Long and taxing**

**May 2007:** Vodafone buys Hutchison Whampoa's controlling stake in Hutchison Essar for $10.9 billion

**Sept 2007:** The I-T Department serves a notice to Vodafone International Holdings BV, citing alleged failure to deduct withholding tax from Hutchison Telecommunications International Ltd. The UK firm later moves Bombay High Court

**Sept 2010:** The Bombay High Court rules in favour of the I-T Department, stating it has jurisdiction over the deal. Vodafone challenges the ruling in the Supreme Court

**Jan 2012:** The Supreme Court rules in favour of Vodafone, saying the transaction is not taxable in India and hence the company is not responsible for deduction of withholding tax

**April 2012:** George Osborne, UK's Chancellor of the Exchequer, raises the issue with then Finance Minister, Pranab Mukherjee

**April 2014:** Vodafone Group moves the Permanent Court of Arbitration in The Hague

**Sept 25, 2020:** The arbitration tribunal rules in favour of Vodafone in ₹20,000-crore tax case


## நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான (UCB) இணையவழிப் பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப தொலைநோக்குப் பார்வை (2020-2023)

- இந்திய ரிசர்வ் வங்கியானது "UCBகளுக்கான (Urban Co-operative Banks) இணைய வழிப் பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப தொலைநோக்குப் பார்வையை" (2020-2023) செயல்படுத்த இருக்கின்றது.
- இது இணையவழித் தாக்குதல்களிலிருந்து அவ்வங்கிகளை மீட்பதற்காகவும் அவ்வாறான தாக்குதல்களைத் தடுப்பதற்காகவும் கண்டறிவதற்காகவும் எதிர்வினை ஆற்றுவதற்காகவும் வேண்டி UCBகளின் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆர்பிஐ ஆனது தனது 5 உத்திசார் அணுகுமுறையான "GUARD" என்பதைப் பயன்படுத்தி இந்த நோக்கத்தை அடையவுள்ளது.
- "GUARD" என்பது பின்வருவனவற்றைக் குறிக்கின்றது.
    - G – ஆளுகை மேற்பார்வை (Governance Oversight)
    - U – பயனுள்ள தொழில்நுட்ப முதலீடு (Utile Technology Investment)
    - A – தேவையான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை (Appropriate Regulation and Supervision)
    - R – வலுவான ஒத்துழைப்பு (Robust Collaboration)
    - D – தேவையான தகவல் தொழில்நுட்ப, இணைய வழித் திறன்களை மேம்படுத்துதல். (Developing necessary IT, cybersecurity skills set)

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## AUDFs01 விண்மீன்

- "ஆஸ்ட்ரோசாட்" என்ற இந்தியாவின் முதலாவது பல அலைநீள செயற்கைக் கோள் ஆய்வகமானது "AUDFs01" எனப்படும் விண்மீனிலிருந்து வெளிப்படும் ஒரு தீவிர புற ஊதா ஒளியைக் கண்டறிந்துள்ளது.
- இது பூமியிலிருந்து 9.3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இந்த விண்மீன் ஆனது ஹப்பிள் பிராந்தியத்தின் தீவிரமான ஆழப் பகுதியில் (Hubble Extreme Deep field) அமைந்துள்ளது.
- ஆஸ்ட்ரோசாட் ஆனது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது முதலாவது அர்ப்பணிக்கப்பட்ட அளவிலான X-கதிர், கண்ணுக்குப் புலப்படக் கூடிய மற்றும் புற ஊதா நிறமாலைப் பட்டைகளில் வானியல் தொடர்பான ஆதாரங்களை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்ட இந்திய வானியல் திட்டமாகும்.




## மிகப்பெரிய ஹைட்ரஜன் குண்டு வெடிப்பு

- ரஷ்யாவானது உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டு வெடிப்பின் 40 நிமிட காணொலியை வெளியிட்டுள்ளது.
- இந்த குண்டானது "சார் குண்டு" (Tsar Bomb) என்று அழைக்கப் படுகின்றது.
- இது ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அணு குண்டுகளான லிட்டில் பாய் மற்றும் ஃபேட் மேன் ஆகியவற்றை விட 3,333 மடங்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் திறன் கொண்டது.
- ஹைட்ரஜன் குண்டானது முதன்முறையாக ஆர்க்டிக் கடலில் உள்ள தீவுக் கூட்டமான நோவாயா ஜெம்லயாவில் பரிசோதிக்கப் பட்டது.
- வெளியிடப்பட்ட இந்தக் காணொலியானது "மிகவும் இரகசியமான 50 மெகா டன்களுடன் தூய ஹைட்ரஜன் குண்டின் சோதனை" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- பிரிட்டன், அமெரிக்கா, இரஷ்யா, பிரான்சு மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஹைட்ரஜன் குண்டு சோதனையை மேற்கொண்டுள்ளன.
- இதுவரை ஹைட்ரஜன் குண்டுகள் எந்தவொரு போரிலும் பயன்படுத்தப்பட வில்லை.




## சமிக்ஞை – GW19052

- லிகோ மற்றும் விர்கோ ஈர்ப்பு அலை ஆய்வகமானது 2019 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய 2 கருந்துளைகளின் இணைப்பை உறுதி செய்து உள்ளது.
- இந்த சமிக்ஞையானது GW19052 என்று பெயரிடப்பட்டுள்ளது. இது 2 கருந்துளைகள் (black holes) ஒன்றோடொன்று இணைந்ததைக் குறிக்கின்றது.
- இந்த 2 கருந்துளைகளின் நிறையானது சூரியனின் நிறையை விட முறையே 66 மற்றும் 85 மடங்கு என்ற அளவு பெரியதாகும்.
- இது சூரியனின் நிறையை விட 142 மடங்கு அதிகமான நிறையுடன் கருந்துளையாக இணைந்துள்ளது.
- இந்தக் கருந்துளையானது 85 சூரிய ஒளி நிறையுடன் நடுத்தர நிறை வரம்பில் (முதன்முதலில் கண்டறியப்பட்ட) அமைந்துள்ளது.
- இது கருந்துளைகள் எவ்வாறு உருவாகின என்பது குறித்து பழமையான அறிவை வரையறுக்கின்றது.
- சூரிய ஒளி நிறை என்பது சூரியனின் நிறையாகும்.
- இது 333000 பூமிகளுக்குச் சமமான 1.989 x 1030 கிலோ கிராம் நிறையைக் கொண்டு உள்ளது.
- சூரியனின் நிறையில் 100-100,000 மடங்கு உள்ள கருந்துளைகள் நடுத்தர நிறை கொண்ட கருந்துளைகள் எனப்படுகின்றன.

## குறுங்கோள் 465824

- நாசாவானது ஜிசா பிரமிடை விட இருமடங்கு பெரியதான 465824 2010 எப்ஆர் என்ற ஒரு குறுங்கோளானது செப்டம்பர் 06 அன்று பூமியின் சுற்று வட்டப் பாதையைக் கடந்துள்ளதாகக் கூறியுள்ளது.
- இது பூமிக்கு அருகில் அமைந்த ஒரு பொருள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் இது தீங்கு ஏற்படுத்தும் ஒரு குறுங்கோளாக விளங்குகின்றது.
- இந்தப் பொருட்கள் பெரும்பாலும் மாசுத் துகள்களுடன் உள்ள பனி நீரைக் கொண்டிருக்கும்.

- குறுங்கோள் 465824 2010 எப்ஆர் ஆனது 2010 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று கேட்டலினா வான் ஆய்வகத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது.
- குறுங்கோள்கள் ஆனது பூமியைப் போன்ற கோள்களை விடச் சிறியதான, சூரியனைச் சுற்றி வரும் பாறைப் பொருட்களாகும்.
- இவை சிறு கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## எடுத்துச் செல்லக்கூடிய ஒளியியல் குழி நுண்ணுயிரி நீக்க அலகு

- விஞ்ஞானிகள் கலப்பு நுண்ணுயிரி நீக்க முறை (hybrid sterilization system) எனப்படும் ஒரு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எடுத்துச் செல்லக் கூடிய நுண்ணுயிரி நீக்க அலகை மேம்படுத்தியுள்ளனர்.
- இது கோவிட் - 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தை (PPE - Personal protective equipment) கிருமி நீக்கம் செய்யும் திறன் கொண்டது. இது எளிதாக மற்றும் விரைவாக கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பலமுறை அவற்றைப் பயன்படுத்த முடியும்.
- இது PPEகளிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் திடக் கழிவு உற்பத்தியைத் தடுக்கும் திறன் கொண்டது.

## சக்கர் டிகோவ் சாதனம்

- ஐஐடி-தில்லியினால் ஆதரிக்கப்படும் சக்கர் புத்தாக்க நிறுவனம் என்ற ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனம் "சக்கர் டிகோவ்" என்ற ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இது என்95 முகக் கவசங்களில் உள்ள கிருமிகளை நீக்கும் நுண்ணுயிரி நீக்க சாதனமாகும்.
- என்95 முகக் கவசங்களில் உள்ள துளைகளைத் தூய்மைப்படுத்துவதற்காக அதிக அளவு ஓசோன் வாயுவை செலுத்தும் செயல்முறையானது பயன்படுத்தப் படுகின்றது.

## அதிவேகத் தொழில்நுட்ப செயல்முறை விளக்க வாகனம்




- டிஆர்டிஓ அமைப்பானது அதிவேகத் தொழில்நுட்ப செயல்முறை விளக்க வாகனத்தை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்துள்ளது.


- இது அதிவேக விமானங்களில் பயன்படுத்தப்படும் ஒரு ஆளில்லா வேகப்பீற்று விசை வானூர்தி செயல்முறை விளக்க விமானமாகும் (unmanned scramjet demonstration aircraft).
- அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்குப் பிறகு உலகில் இது போன்ற ஒரு சோதனையை மேற்கொண்ட நான்காவது நாடு இந்தியா ஆகும்.
- இது மீயொலி உயர் வேகம் (Hypersonic speed) எனப்படும் ஒலியின் வேகத்தைவிட 6 மடங்கு வேகத்தில் ஏவுகணைகள் பயணிக்க உதவுகின்றது.
- இந்தச் சோதனையானது மீயொலி உயர்வேக ஏவுகணையின் மேம்பாட்டிற்கு வழி வகுக்கின்றது.

***உதவும் பங்காளர்கள்***

- இஸ்ரேல் காற்று சுரங்க வழிச் சோதனையில் உதவியது.
- ரஷ்யாவானது மீயொலி உயர்வேக உந்து விசையின் ஆராய்ச்சியில் உதவி செய்தது.


## மீவுளிர் விண்முகில் LSQ14 fmgன் வெடிப்பு

- சமீபத்தில் ஒரு வழக்கமற்ற மீவுளிர் விண்முகில் வெடிப்பானது (supernova explosion) பூமியிலிருந்து நூறு மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உணரப்பட்டது.
- இந்த வெடிக்கும் நட்சத்திரமானது LSQ14fmg மீவுளிர் விண்முகில் வெடிப்பு என அழைக்கப் பட்டது.
- இது மிகவும் மெதுவாக ஒளிர்வானதாக மாறியது. இது இதற்கு முன்னர் எப்பொழுதும் நிகழ்ந்திராத வகையில் நிகழ்ந்த பிரகாசமான வெடிப்புகளில் ஒன்றாகவும் இது கருதப்படுகின்றது.
- இந்த வெடிக்கும் நட்சத்திரமானது டைப் Ia மீவுளிர் விண்முகில் எனப்படுகின்றது. அதிலும் குறிப்பாக “சூப்பர் சந்திரசேகர் குழுவின்” உறுப்பினராகவும் இது கருதப் படுகின்றது.
- டைப் Ia மீவுளிர் விண்முகிலானது இருண்ட ஆற்றல் எனப்படும் ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கான ஒன்றாக ஒரு முக்கியக் கூறாக விளங்குகின்றது.
- இருண்ட ஆற்றல் ஒரு அறியப்படாத ஆற்றலாக விளங்குகின்றது. இது தற்போதைய பிரபஞ்சத்தின் விரிவாக்கத்திற்குக் காரணமாக விளங்குகின்றது.




## இந்திய மூளை வார்ப்புருக்கள்

- ❖ தேசிய மன நலம் மற்றும் நரம்பு அறிவியல் மையத்தை (NIMHANS - National Institute of Mental Health and Neuro Sciences) சேர்ந்த நரம்பியல் வல்லுநர்களைக் கொண்ட ஆராய்ச்சிக் குழுவானது இந்திய மூளை வார்ப்புருக்கள் (IBT - Indian Brain Templates) மற்றும் மூளை வரைபடத்தை மேம்படுத்தியுள்ளது.
- ❖ இது நோய்வாய்ப்பட்ட நிலையில் மூளையின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்காக பல்வேறு மூளைப் படங்களிலிருந்துப் பெறப்படும் ஒரு ஒட்டு மொத்தப் பிரதிநிதித்துவமாகும்.
- ❖ இந்தப் புதிய மக்கள் தொகை மற்றும் வயது தொடர்பான IBT ஆனது மூளை வளர்ச்சி மற்றும் வயது ஆகியவற்றை மிகத் துல்லியமான வகையில் கண்டறிய அனுமதிக்கும்.
- ❖ இந்த வார்ப்புருக்கள் மற்றும் வரைபடமானது பக்கவாதம், மூளைக்கட்டி மற்றும் மனச்சோர்வினால் ஏற்படும் நோய் (டிமென்டியா) போன்ற நரம்பு மண்டலப் பிரச்சினைகளுடன் இருக்கும் தனிப்பட்ட நோயாளிகளின் விருப்பப் பகுதிகளுக்கான எளிதான குறிப்பு வரைபடங்களை அளிக்கவுள்ளது.




## வெள்ளிக் கிரகத்தில் பாஸ்பைன் வாயு

- ❖ சர்வதேச ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டலத்தில் பாஸ்பைன் வாயு இருப்பதைக் கண்டறிந்துள்ளது.




- பூமியில், பாஸ்பைன் வாயுவானது ஆக்ஸிஜன் அற்ற சூழலில் வாழும் பாக்டீரியாவினால் உற்பத்தி செய்யப் படுகின்றது.
- எனவே, இந்தக் கண்டுபிடிப்பானது வெள்ளியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூற்றைக் குறிக்கின்றது.
- பாஸ்பைன் வாயுவானது பல்வேறு தொழிற்துறை அமைப்புகளில் உயிரியல் தன்மையற்றதாகவும் உருவாகின்றது.
- இது முதல் உலகப் போரின் போது இரசாயன ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது.
- இது தற்போது வரை வேளாண் உமிழ்ப் பொருளாகத் தயாரிக்கப் படுகின்றது.
- இது குறைகடத்தித் தொழிற்துறையில் (semiconductor industry) பயன்படுத்தப் படுகின்றது. இது மெத் ஆய்வகங்களின் துணைப் பொருளாகவும் விளங்குகின்றது.

***வெள்ளி***

- வெள்ளி ஆனது பூமியின் மிக நெருங்கிய அண்டைக் கோளாகும்.
- இது பூமியின் இரட்டைக் கோள் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது அமைப்பில் ஒரே மாதிரியாக இருந்தாலும் பூமியை விடச் சிறியதாக உள்ளது.
- இது சூரியனிலிருந்து இரண்டாவது கோளாக உள்ளது.
- இது சூரியக் குடும்பத்தில் வெப்பமான கோளாக விளங்குகின்றது.
- பூமியின் மேற்பரப்பில் விழும் வளிமண்டல அழுத்தத்தை விட 90 மடங்கு அதிக வளிமண்டல அழுத்தத்தை இது கொண்டுள்ளது.

## சூரிய ஒளி சுழற்சி 25

- நாசா மற்றும் தேசியக் கடல்சார் மற்றும் வளிமண்டல நிர்வாகமானது (NOAA - National Oceanic and Atmospheric Administration) சூரிய ஒளி சுழற்சி 25 தொடங்கப்படுவதாக அறிவித்துள்ளது.
- சூரிய ஒளி சுழற்சி 25 என்பதற்கான குறைந்தபட்ச சூரிய ஒளியானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்தது.
- இந்த சூரிய ஒளி சுழற்சியானது அபாயம் ஏதும் இல்லாமல் கடைசியாக நிகழ்ந்த "சராசரியை விட குறைந்த அளவு கொண்ட சூரிய ஒளி சுழற்சியை" விட வலுவானதாக இருக்கும்.
- பூமியில் நிகழும் காலங்களைப் போன்று, சூரியனானது 11 ஆண்டு கால சுழற்சியைப் பின்பற்றுகின்றது. இந்தத் தருணத்தில் சூரிய ஒளி செயல்பாடுகளானது "குறைந்தபட்ச சூரிய ஒளி மற்றும் அதிகபட்ச சூரிய ஒளி" ஆகியவற்றிற்கிடையே மாறுபடுகின்றது.
- இதுவரை, வானியலாளர்கள் இது போன்ற 24 சூரியஒளி சுழற்சிகளை ஆவணப் படுத்தியுள்ளனர். கடைசியாக இந்த சூரிய ஒளி சுழற்சியானது 2019 ஆம் ஆண்டில் முடிவடைந்தது.
- சூரிய ஒளி வெடிப்புகளானது அரோரா அல்லது தாக்க ரேடியோ தகவல் தொடர்பு (impact radio communications) எனப்படும் வான்வெளியில் ஒளியினை ஏற்படுத்துகின்றது.
- மிகக் கடுமையான வெடிப்புகள் பூமியின் மின்சாரத் தொகுப்புகளைக் கூட பாதிக்கும் திறன் கொண்டது.




## உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியின் பாகங்கள் உற்பத்தி

- உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கியானது இந்தியாவின் டாடா கன்சல்டன்சி நிறுவனத்தினால் (TCS - Tata Consultancy Services) இந்தியாவில் கட்டுப்பாட்டு அமைப்புகளைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுக் கட்டமைக்கப் படுகின்றது.
- TCS தலைமையின் கீழ் செயல்படும் இந்தத் திட்டத்திற்கு முன்னணியில் உள்ள பல்வேறு இந்திய அறிவியல் நிறுவனங்கள் இணைந்து பங்காற்றுகின்றன.
- டாடா அடிப்படை ஆராய்ச்சி மையத்தின் கீழ் செயல்படும் தேசிய ரேடியோ வான் இயற்பியல் மையமானது இந்தத் திட்டத்தின் தலைமை மேலாளராகச் செயல்படுகின்றது.
- இந்தத் தொலைநோக்கியானது "சதுர கிலோமீட்டர் தொகுப்பு" (SKA - square kilometre array) என்று அழைக்கப்படுகின்றது.
- இந்தத் தொலைநோக்கியானது தென் ஆப்பிரிக்காவில் கட்டமைக்கப்பட உள்ளது.
- இதன் இதர வெளி நிலையங்கள் கானா, போட்ஸ்வானா, கென்யா, மொரீஷியஸ், மடகாஸ்கர், மொசாம்பிக், ஜாம்பியா மற்றும் நமீபியா ஆகிய இதர 8 பங்காளர் நாடுகளில் அமையவுள்ளது.
- இந்தத் தொலைநோக்கியின் குறைந்த அதிர்வெண் வரிசையானது மேற்கு ஆஸ்திரேலியாவில் கட்டமைக்கப்படவுள்ளது.



## முதலாவது மரபணு அடிப்படையிலான கோவிட் – 19 சோதனை


- சமீபத்தில் இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகமானது "பெலுடா" (FELUDA) எனப்படும் மரபணு அடிப்படையிலான கோவிட் – 19 சோதனைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சோதனைகளானது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்டதாகும்.
- இது கோவிட் – 19 வைரஸைக் கண்டறிவதற்காக வேண்டி சிறப்புமிகு CRISPR மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.
- இந்தச் சோதனையானது டாடா குழுமத்துடன் இணைந்து சிஎஸ்ஐஆர் – ஐடிஐபி-அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தச் சோதனையானது 2 மணி நேரத்திற்குள் இந்த வைரஸைக் கண்டறியும் திறன் கொண்டது.
- இந்த வைரஸைக் கண்டறிவதற்காக Cas9 புரதத்தைப் பயன்படுத்தும் உலகின் முதலாவது சோதனை இதுவாகும்.
- FELUDA என்பது FNCAS9 தொகுப்பு இணைக்கப்பட்ட ஒரே சீரான கண்டறிதல் என்பதன் சுருக்கமாகும்.
- இது ஒரு காகித பட்டைச் சோதனையாகும்.

## அபயாஸ் – HEAT சோதனை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO - Defence Research and Development Organisation) பாலசோரில் (ஒடிசா) அபயாஸ் – HEAT வகை விமானத்தை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- HEAT என்ற சொற்றொடரானது அதிவேக விரிவாக்கமடையும் வான்வழி இலக்கு (High-speed Expendable Aerial Target) என்பதைக் குறிக்கின்றது.
- இது DRDOன் வான்வெளித் தொலை அளவு வளர்ச்சி அமைப்பினால் வடிவமைக்கப் பட்டு, தயாரிக்கப்பட்டுள்ளது.

### *சிறப்பம்சங்கள்*

- இது பல்வேறு ஏவுகணை அமைப்புகளுக்கு இலக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு ஆளில்லா குட்டி விமானமாகும்.
- இது ஒரு சிறிய வாயு டர்பைன் என்ஜினால் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது நுண் – மின்பொறிமுறை அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு அடிப்படையிலான ஒரு கண்காணிப்பு அமைப்பாகும்.
- இது குறைந்த அளவு மின்சாரத்தை உட்கொள்ளும் மற்றும் குறைந்த செலவு கொண்ட இலகுரக, நம்பகத் தக்க சாதனமாகும்.
- இது முழுவதும் தானியங்கும் வகை விமானமாக நிரலாக்கப் பட்டுள்ளது.



## பிரித்திவி – II ஏவுகணை சோதனை

- இந்தியாவானது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட அணு ஆயுதத் திறன் கொண்ட, நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் பிரித்திவி – II என்ற தனது ஏவுகணையின் இரவு நேரச் சோதனையை மேற்கொண்டது.
- இது 350 கிலோ மீட்டர் தாக்கி அழிக்கும் வரம்பு கொண்டதாகவும் உள்ளது.
- இது நடமாடும் (எடுத்துச் செல்லக் கூடிய) ஏவு வாகனத்திலிருந்து ஏவு திறன் கொண்டதாகவும் உள்ளது.
- இது 500 முதல் 1000 கிலோ கிராம் ஆயுதங்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- இது திரவ உந்து விசை இரட்டை இயந்திரத்தினால் செயல்படும் திறன் கொண்டது.
- ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் டிஆர்டிஓவினால் மேம்படுத்தப்பட்ட முதலாவது ஏவுகணை இதுவாகும்.




## IoT சாதனங்களுக்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நுண் செயலி

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது இணையப் பொருட்கள் சாதனங்களுக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நுண்செயலியான "மௌசிக்" என்ற ஒன்றை வெற்றிகரமாக மேம்படுத்தியுள்ளது.
- இது டிஜிட்டல் நுண்ணறிவு மற்றும் பாதுகாப்பான வன்பொருள் கட்டமைப்பிற்கான பிரதாப் சுப்பிரமணியம் மையத்தில் கருத்தாக்கம் செய்யப்பட்டு, வடிவமைக்கப் பட்டு, மேம்படுத்தப்பட்டு உள்ளது.
- இந்த நுண்செயலி உருவாக்கத்தில் வடிவமைப்பு, கட்டுருவாக்கம் மற்றும் பிந்தைய சிலிகான் பொருத்துதல் (design, fabrication and post-silicon boot-up) ஆகிய 3 படிநிலைகள் உள்ளன.
- இந்தத் திட்டமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் நிதியளிக்கப் பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சில்லேறு நதியில் பெளி மீன் (Mahseer Fish)


- சமீபத்தில் "பெளி மீன்" எனப்படும் ஓர் அரிய வகை மீன் இனமானது சில்லேறு நதியில் காணப்பட்டுள்ளது.
- இந்த மீன் இனமானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்பு நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- பெளி மீன் ஆனது குளிர் பிராந்தியப் பகுதிகளில் பாயும் இமயமலை நதிகளில் காணப் படுகின்றது.
- இது இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், பூடான், நேபாளம் ஆகியவற்றில் காணப் படுகின்றது.
- இது ஒரு மிகப்பெரிய நன்னீர் வகை மீனாகும்.
- உலகில் 47 வகை பெளி மீன் இனங்கள் உள்ளன.
- இதில் 15 இனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.
- சமீபத்தில் 2019 ஆம் ஆண்டில், IUCN ஆனது கூன்முதுகு பெளி மீனின் நிலையை மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிட்டுள்ளது.
- இது இந்தியாவில் காவிரி நதியில் மட்டும் காணப்படுகின்றது. இது உலகில் வேறு எங்கும் காணப்படுவதில்லை.

## 1976ற்குப் பிறகு தற்பொழுது அதிகமான ஆகஸ்ட் மழைப்பொழிவு

- இந்தியாவானது 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்பொழுது இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மிக அதிகமான மழைப் பொழிவைப் பெற்றுள்ளது. இது சராசரியை விட 25% அதிகமாகும்.
- இதற்கு முன்பு 1976 ஆம் ஆண்டில், ஆகஸ்ட் மாதத்தில் சராசரியை விட 28.4% கூடுதல் மழைப் பொழிவை இந்தியா பெற்றிருந்தது.
- 1901 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மிக அதிகமான ஆகஸ்ட் மழைப் பொழிவானது 1926 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது.
- 1926 ஆம் ஆண்டில், இந்தியாவில் சராசரியை விட 33% கூடுதல் மழைப்பொழிவு பதிவாகி இருந்தது.

## புஜிவாரா விளைவு

- மேற்கு அட்லாண்டிக் கடலில் ஒரே சமயத்தில் தொடர்ந்து உருவான 2 புயல்கள் புஜிவாரா விளைவை உருவாக்கியுள்ளன.
- புஜிவாரா விளைவானது இரண்டு வெப்ப மண்டல அமைப்புகள் நெருங்கி வரும் போது அல்லது ஒன்றையொன்றுச் சுற்றி வரும் போது அல்லது ஒன்றுடன் ஒன்று இணையும் போது உருவாகின்றது.
- 2 புயல்களும் ஒவ்வொன்றுடனும் 900 மைல்களுக்குள் செல்லும் போது, அவை ஒன்றையொன்றுச் சுற்றத் தொடங்குகின்றன.
- "புஜிவாரா விளைவு" என்ற கூறானது 2 வெப்பமண்டல வானிலை அமைப்புகளுக்கு இடையிலான ஒரு தொடர்பைக் குறிக்கின்றது.




- 1921 ஆம் ஆண்டில் இந்த விளைவை முதன்முதலில் விவரித்த ஜப்பானைச் சேர்ந்த வானியல் அறிஞரான சகுஹேய் புஜிவாரா என்பவரின் நினைவாகப் இதற்கு இப்பெயரிடப் பட்டுள்ளது.

## புதிய நன்னீர் மீன் இனம்


- சிஸ்டோமஸ் கிரேசிலஸ் என்ற பெயர் கொண்ட ஒரு புதிய வகை நன்னீர் மீன் இனமானது கேரளா மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேற்கு வங்கத்தில் உள்ள கங்கை நதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த உண்ணத்தக்க மீன் இனமானது சிவப்பு-வெள்ளை நிறம், மெல்லிய மற்றும் நெருக்கமான உடலமைப்பைக் கொண்டுள்ளது.
- இதனை உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்க்க முடியும்.

## ஜம்மு காஷ்மீர் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்

- சமீபத்தில் ஜம்மு காஷ்மீர் அரசானது 10 உறுப்பினர்களைக் கொண்ட பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தை அமைத்துள்ளது.
- இது 5 பதவி வழி உறுப்பினர்கள் மற்றும் 5 அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்த ஆணையமானது உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகளின் உதவியுடன் மக்கள் பல்லுயிர்ப் பெருக்கப் பதிவேட்டைப் பராமரிக்கின்றது.
- இந்தப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையமானது பொது நிர்வாகத் துறையினால் வழங்கப் பட்டுள்ள ஆணையின்படி, தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்துடன் இணைந்து ஆலோசனை அடிப்படையில் செயல்படவுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வரும் 3 நிலைகளில் பல்லுயிர்ப் பெருக்கக் குழுக்களினால் கண்காணிக்கப் படவுள்ளன.
    - தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்
    - ஜம்மு காஷ்மீர் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்
    - பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

## காசிரங்கா தேசியப் பூங்காவின் விரிவாக்கம்

- ❖ அசாம் மாநில அரசானது 3053 ஹெக்டேர் என்ற அளவில் காசிரங்கா தேசியப் பூங்காவை விரிவாக்கம் செய்வதற்குத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- ❖ இது பிரம்மபுத்திரா நதி முழுவதும் ஓரங் மற்றும் நாமேரி தேசியப் பூங்காக்களிடையே இணைப்பை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- ❖ மேலும் இது கர்பி அங்லாங் மலைப் பகுதியிலிருந்து பூங்காவின் தெற்குப் பகுதியையும் இணைக்க இருக்கின்றது.
- ❖ இது மனித-வன விலங்கு ஆகியவற்றிற்கு இடையிலான எதிர்மறையான இடையீடுகளைக் குறைக்க இருக்கின்றது.




## 13 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதை படிவம் - மனிதக் குரங்கினம்

- ❖ 2015 ஆம் ஆண்டில் உத்தரகண்ட்டின் ராம்நகரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கடைவாய்ப் பல் புதைபடிவமானது பண்டைய நீண்டைய கைகளை உடைய முந்தைய காலக் குரங்கு வகையைச் சேர்ந்ததாகும்.
- ❖ இந்தப் புதை படிவமானது 13 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியாவிற்கு இடம்பெயர்ந்த பெரிய வகை மனிதக் குரங்குகளின் (மனிதக் குரங்குகள், ஆப்பிரிக்கக் குரங்கு வகை, ஒரங்குட்டான்கள், போனோபோன்கள், மனிதர்கள்) இடப்பெயர்வைப் புரிந்து கொள்ள ஆதாரமாக விளங்குகின்றது.




- ❖ இந்தப் புதை படிவமானது கீழ் கடைவாய்ப் பல்லின் ஒரு முழு பகுதியாகும். இது இதற்கு முன்பு அறியப்படாத பேரினம் மற்றும் உயிரினங்கள் வகையைச் சேர்ந்தது ஆகும். இது தற்பொழுது கபி ராம்நகரென்சிஸ் என்று வகைப்படுத்தப்பட்டு உள்ளது.
- ❖ ஏறத்தாழ 1 நூற்றாண்டுக்குப் பிறகு இந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது மனிதக் குரங்கினம் இதுவாகும்.

- இது குறைந்தது 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான மனிதக் குரங்கு வகைக்கு முந்தைய காலக் கட்டத்தைச் சேர்ந்தது ஆகும்.

## ஹாய்சென் சூறாவளி (Typhoon)

- ஹாய்சென் சூறாவளியானது ஜப்பானின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் கரையைக் கடந்தது. கடந்த ஒரு வாரத்திற்குள் அந்நாட்டில் கரையைக் கடக்கும் இரண்டாவது சூறாவளி இதுவாகும்.
- இந்தச் சூறாவளியானது நான்காம் வகைச் சூறாவளியாக வகைப்படுத்தப் பட்டு உள்ளது. இதன் பொருள் நன்றாகக் கட்டமைக்கப்பட்ட வீடுகளானது கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும் என்பதைக் குறிக்கின்றது.
- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1 ஆம் தேதிக்குப் பிறகு ஏற்படும் முதலாவது சூறாவளி "சூறாவளி எண் 1" எனக் குறிப்பிடப் படுவதன் காரணமாக இது ஜப்பானின் "சூறாவளி எண் 10" ஆகக் குறிப்பிடப் படுகின்றது.
- ஹாய்சென் என்ற பெயரானது சீன நாட்டினால் பரிந்துரைக்கப்பட்டதாகும். இதற்கு சீன மொழியில் "கடல் தெய்வம்" என்று பொருள்படும்.
- இவை அது ஏற்படும் இடத்தைப் பொறுத்து டைபூன்கள் அல்லது சூறாவளிகள் என்று அழைக்கப் படுகின்றன.




## நிலச்சீரழிவுக் குறைப்பு மற்றும் பவளப் பாறைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு

- இது சமீபத்தில் நிகழ்ந்த ஜி20 நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சரவைச் சந்திப்பின் போது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தச் சந்திப்பின் கருத்துருவானது, "அனைவருக்குமான 21 ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளை உணரச் செய்தல்" என்பதாகும்.

- இந்தச் சந்திப்பில், நிலச்சீரழிவைக் குறைப்பது மீதான உலகளாவிய முன்னெடுப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஜி20 உறுப்பு நாடுகளுக்குள் மற்றும் உலகளாவிய அளவில் நிலச் சீரழிவைத் தடுத்தல், நிறுத்தி வைத்தல், மீட்டெடுத்தலுக்கான தற்பொழுதுள்ள கட்டமைப்புகளின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- மேலும், இதர நீடித்த வளர்ச்சி இலக்குகளின் சாதனைகள் மீதான தாக்கங்கள் தீங்கு இழைக்காத கொள்கை முடிவுகளைப் பின்பற்றுதல் ஆகியவையும் இதில் கருத்தில் கொள்ளப் படுகின்றது.
- உலகளாவிய பவளப் பாறைகள் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி விரைவுத் தளம் என்பது பவளப் பாறைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு வேண்டி ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட புத்தாக்கச் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு முன்னெடுப்பாகும்.

*நிலச் சீரழிவு*

- நிலத்தின் உயிரியல் மற்றும் பொருளாதார உற்பத்தித் திறனின் குறைவு அல்லது இழப்பு என்பது மனித நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட நிலப் பயன்பாடு அல்லது செயல்பாடு மற்றும் கூட்டுச் செயல்பாடுகளினால் ஏற்படுகின்றது.

*பாலைவனமாதல்*

- இது முழுவதும் வறண்ட, பகுதியளவு வறண்ட மற்றும் வறண்ட துணை ஈரப்பதப் பகுதிகளில் நிலச் சீரழிவைக் குறிக்கின்றது.
- பாலைவனமாதல் ஆனது தற்பொழுதுள்ள பாலைவனங்களின் விரிவாக்கத்தைக் குறிக்காது.

## கொச்சிக்கான பல்லுயிர்ப் பெருக்கக் குறியீட்டு வரைபடம்

- கேரளாவில் உள்ள ஒரு நகரத்திற்கான முதலாவது வரைபடம் மற்றும் நாட்டின் இரண்டாவது வரைபடம் இதுவாகும்.
- இந்தக் குறியீடானது நிலையான வளர்ச்சிக்கான ஐசிஎல்இஐ – உள்ளாட்சிகளின் மூலம் பாரம்பரிய, சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மையத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் “இண்டர்ஏக்ட் – பயோ” என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது நகரத்தின் பல்லுயிர்ப் பெருக்க உயிரியல் குறியீட்டை மேம்படுத்துவதையும் நகர்ப்புறப் பகுதிகளில் பசுமையை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் ஒரு பகுதியாக “விளக்கப்பட்ட இயற்கைச் சொத்து” (Illustrative Natural Asset Map) என்ற ஒரு வரைபடமும் வெளியிடப்பட்டுள்ளது.

## இந்தியாவின் சொந்த சுற்றுச்சூழல் பெயரிடல் - BEAMS

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது (MoEFCC - Ministry of Environment, Forest and Climate Change) இந்தியாவின் சொந்த சுற்றுச்சூழல் பெயரிடல் – BEAMS என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது நீலக்கொடி கடற்கரைகள் எனச் சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட 8 கடற்கரைகளில் தொடர்ச்சியாக “#IAMSAVINGMYBEACH” என்ற மின்னணு கொடி ஏற்றப் பட்டதின் வாயிலாக தொடங்கப் பட்டுள்ளது.
- MoEFCC ஆனது “BEAMS” (கடற்கரை சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் மேலாண்மை சேவைகள்) என்ற உயரிய தலைமைத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் கடற்கரைப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சிக்கான தனது கொள்கைகளை ஊக்கப்


படுத்துகின்றது.

- ❖ BEAMS ஆனது அதன் ஒருங்கிணைந்த கடற்கரை மண்டல மோண்மைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றது.
- ❖ உலக அளவில் அங்கீகாரத்தைப் பெற முயலும் மற்றும் விரும்பத்தக்க சுற்றுசூழல் பெயரிடல் "நீலக்கொடி" சான்றிதழைப் பெற முயலும் கடற்கரைப் பகுதிகளின் நீடித்த மேம்பாட்டிற்காக இந்தியா செயல்படுகின்றது.

## காலநிலை அபாய அறிக்கையைக் கட்டாயமாக்குதல்

- ❖ நிதித் துறை நிறுவனங்கள் காலநிலை அபாயங்கள் குறித்து அறிக்கை வழங்குவதை கட்டாயமாக்கிய உலகின் முதலாவது நாடு நியூசிலாந்து ஆகும்.
- ❖ இது அந்நாட்டின் 200 மிகப்பெரிய நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தங்களது வணிகத்தில் காலநிலை நிகழ்வுகள் மற்றும் காலநிலைக் கொள்கைகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த ஒரு அறிக்கையைக் கட்டாயம் வழங்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.
- ❖ அரசினால் மேற்கொள்ளப்பட்ட இந்த மிகப்பெரியச் செயல்பாடானது காலநிலைப் பிரச்சினையைக் கையாள வழிவகை செய்கின்றது.
- ❖ இந்தப் பரிந்துரை அந்நாட்டின் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப் படுமென்றால், அந்தக் காலநிலை அறிக்கையானது 2023 ஆம் ஆண்டில் வெளியிடப் படும்.

## கடற்கரையோரத்தில் அதிக அளவிலான திமிங்கலங்கள்




- ❖ ஏறத்தாழ 380 முதன்மைத் திமிங்கலங்கள் தாஸ்மானியா கடற்கரையோரத்தில் இறந்துள்ளன.
- ❖ வல்லுநர்கள் இதை ஆஸ்திரேலியாவின் மிக அதிக அளவில் பதிவு செய்யப்பட்ட ஒரு கடற்கரையோர இறப்பாக கூறுகின்றனர்.
- ❖ ஏறத்தாழ, 500 திமிங்கலங்கள் அத்தீவு நாட்டின் மேற்குக் கடற்கரையோரத்தில் உள்ள 2 மணல் பட்டைகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் கரை ஒதுக்கியுள்ளன.
- ❖ திமிங்கலம் கரை ஒதுங்குதல் என்பது வழக்கமற்றதும் இல்லை அல்லது ஒரு சமீபத்திய நிகழ்வும் இல்லை.
- ❖ இதற்கு முன்பு, மிக அதிக அளவு கரை ஒதுங்கலானது 1935 ஆம் ஆண்டில் தாஸ்மானியாவில் நிகழ்ந்தது. அப்போது 294 திமிங்கலங்கள் கரை ஒதுங்கின.

# மாநிலச் செய்திகள்

## 6வது அட்டவணையில் இணைக்கப் படுவதற்கான தீர்மானம்

- ஆகஸ்ட் 27 அன்று அருணாச்சலப் பிரதேச மாநில சட்டசபையானது இந்திய அரசியலமைப்பின் 6வது அட்டவணையில் அந்த மாநிலம் இணைக்கப் படுவதற்குத் தேவையான தீர்மானம் ஒன்றை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது.
- 6வது அட்டவணையானது வடகிழக்கில் பழங்குடியினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பை அளிக்கின்றது.
- 6வது அட்டவணையானது பழங்குடியினச் சமூகத்தினருக்குத் தேவையான தன்னாட்சியை வழங்குவதுடன் அம்மாநிலத்தின் நிலப் பாதுகாப்பிற்கு தேவையானச் சட்டங்களை இயற்றுவதற்கு அந்த ஆணையத்திற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்குகின்றது.




## அஸ்ஸாமில் திறன் பல்கலைக்கழகம்

- அசாம் மாநில அமைச்சரவையானது அம்மாநிலத்தில் மங்கல்டோய் என்ற இடத்தில் திறன் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தப் பல்கலைக்கழகமானது ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB - Asian Development Bank) நிதியுதவியுடன் கட்டமைக்கப்பட உள்ளது.
- இது நாட்டில் அமைக்கப்படும் முதலாவது திறன் பல்கலைக்கழகமாகும்.
- ஏறத்தாழ இதில் 80% இடங்கள் அசாம் மாநில மாணவர்களுக்கு ஒதுக்கப் பட்டு உள்ளன. மீதியிருக்கும் 20 இடங்கள் வட கிழக்கு மாநில மாணவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.

## இந்தியாவின் முதலாவது சர்வதேச மகளிர் வர்த்தக மையம்

- கேரள மாநிலமானது ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் அடிப்படையில் தனது முதலாவது சர்வதேச மகளிர் வர்த்தக மையத்தை அமைக்க உள்ளது.
- இந்தியாவில் அமைக்கப்பட இருக்கும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது மையம் இதுவாகும். இது மகளிர் தொழில்முனைவுத் திறனை ஊக்கப்படுத்த உள்ளது.

- சர்வதேச மகளிர் வர்த்தக மையமானது பெண்களுக்கான இசை, நடனம், அரங்கம் போன்ற கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளை ஊக்கப்படுத்துவதற்கு பெண்களுக்கு ஒரு தளத்தை அளிக்க உள்ளது.
- இந்த மையமானது குழந்தைகளுக்கான பகல்நேரக் காப்பகம் மற்றும் குழந்தைகள் நல மையத்தைக் கொண்டிருக்கும்.

## இராடா பிரச்சாரம்

- ஜம்மு காஷ்மீரில் டோடா மாவட்டத்தின் துணை ஆணையரான டாக்டர் சாகர் டி டோய்போடு அவர்கள் தகுதியுள்ள விடுபட்டப் பயனாளிகளை சமூக நலத் திட்டங்களில் இணைப்பதற்காக "இராடா" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது மூத்தோர் ஒய்வூதியம், விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களின் கீழ் நிதியுதவிப் பயன்களைப் பெறுவதற்குச் சேர்க்கப்படாத பயனாளிகளை அத்திட்டங்களில் உள்ளடக்கவுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது சமூக நலத் திட்டங்களின் கீழ் 100% பயனாளிகளை உள்ளடக்க உள்ளது.

## வடகிழக்கின் முதலாவது திருநர் மருத்துவர்

- மணிப்பூரைச் சேர்ந்த முதலாவது திருநர் மருத்துவர் பியோன்சி லாய்ஷிராம் ஆவார்.
- இம்பாலைச் சேர்ந்த 27 வயது நிரம்பிய மருத்துவரான இவர் மணிப்பூரின் முதலாவது திருநங்கை மருத்துவர் மட்டுமில்லாமல், வட கிழக்கின் முதலாவது திருநர் மருத்துவரும் ஆவார்.
- இந்தத் தொற்றுக் காலத்தில், பியோன்சி அவர்கள் கோவிட் – 19ற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

## ஆரே ஒதுக்கப்பட்ட காடுகள்

- மகாராஷ்டிரா மாநில அரசானது சஞ்சய் காந்தி தேசியப் பூங்காவிற்கு அருகில் உள்ள ஆரே பகுதியின் 600 ஏக்கர் நிலத்தைக் காடுகளாக ஒதுக்க அறிவித்துள்ளது.
- இது உலகில் எந்தவொருப் பெருநகரங்களின் எல்லைக்குள்ளும் அமைந்துள்ள ஒரு விரிவான வனப் பரப்பின் முதலாவது நிகழ்வு என்று அம்மாநில அரசு கூறி உள்ளது.
- காப்புக் காடுகளானது அந்தக் காடுகளுக்குப் பல்வேறு வகையான பாதுகாப்பு அம்சங்கள் வழங்கப் படுதல் என்பதைக் குறிக்கின்றது.
- இந்தக் கூறானது ஆங்கிலேய ஆட்சியின் போது இந்திய வனச் சட்டம், 1927 என்ற சட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- காப்புக் காடுகளில் வேட்டையாடுதல், மேய்த்தல் போன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகள், குறிப்பிட்ட ஆணைகள் விதிக்கப் பட்டால் தவிர, மற்றபடி தடை செய்யப் பட்டுள்ளன.
- காப்புக் காடுகளானது அந்தந்த மாநில அரசுகளினால் அறிவிக்கப் படுகின்றன. ஆனால் தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகியவை மத்திய அரசினால் அறிவிக்கப்படுகின்றன.

## வங்க தேசத்திலிருந்து முதலாவது உள்நாட்டு சரக்குக் கப்பல் போக்குவரத்து

- தௌகண்டி (வங்கதேசம்) – சோனமுரா (திரிபுரா) உள்நாட்டு நீர்வழி நெறிமுறைப் பாதையானது இயக்கப்பட்டு திரிபுராவானது முதலாவது உள்நாட்டு நீர்வழி சரக்குக் கப்பலை வரவேற்றுள்ளது.
- உள்நாட்டு நீர்வழி வர்த்தக மற்றும் போக்குவரத்து இயக்க நெறிமுறையானது இந்தியா மற்றும் வங்க தேசத்திற்கிடையில் 1972 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- கும்தி நதியின் வழியே அமைந்த 93 கிலோமீட்டர் நீளமுடைய சோனமுரா-தௌகண்டி பாதையின் மீதான இந்த புதிய நீர் வழிப் பாதையானது போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தவுள்ளது.

## மாநிலத்தின் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாப்பதற்கான மசோதா

- அசாம் மாநில சட்டமன்றமானது மோரன், மோடோக் மற்றும் கம்டாபூர் ஆகிய தன்னாட்சி மன்றங்களை உள்ளடக்கியுள்ள 3 தன்னாட்சி ஆணையங்களை அமைப்பதற்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்தப் பரிந்துரைகளானது குடியுரிமைத் திருத்தச் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு அரசினால் வழங்கப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது அசாம் பிரகடனத்தின் 6 ஆம் பிரிவை செயல்படுத்துவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கையாகக் குறிப்பிடப் படுகின்றது.

***பிரிவு 6***

- அசாம் மக்களின் கலாச்சாரம், சமூகம் மற்றும் மொழியியல் அடையாளம், பாரம்பரியத்தைப் பாதுகாத்து ஊக்கப்படுத்துவதற்காக வேண்டி தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்கவும், அரசியலமைப்பு, சட்டமன்ற மற்றும் நிர்வாகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாநில அரசிற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.




## ஸ்பேரோ (SPARROW) திட்டம்

- ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநரான மனோஜ் சின்ஹா அவர்கள் ஒரு நிகழ்நேரத் தளமான "திறன்மிகு செயல்பாடு மதிப்பீடு அறிக்கைப் பதிவுகள் நிகழ்நேரத் தளம்" என்ற ஒரு தளத்தை (Smart Performance Appraisal Report Recording Online Window – SPARROW) தொடங்கி வைத்துள்ளார்.

- இது அதிக வெளிப்படைத் தன்மை, பரிமாற்றத்தின் போது மதிப்பீட்டு அறிக்கைகளின் இழப்பைத் தவிர்த்தல், சிறந்த கண்காணிப்பை உறுதி செய்தல் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆட்சிப் பணி அதிகாரிகளின் மதிப்பீட்டுச் செயல்பாடுகளைக் குறித்த காலத்திற்குள் தீர்த்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உள்கட்டமைப்பு கொண்ட எச்சரிக்கை நடைமுறைகள் மற்றும் நிகழ்நேர நிலை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் காரணமாக இந்த செயல்முறையை தடையற்ற, துரிதமான மற்றும் எளிதான முறையில் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## YSR சம்பூர்ணா போஷ்னா திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது YSR சம்பூர்ணா போஷ்ணா மற்றும் YSR சம்பூர்ணா போஷ்ணா ப்ளஸ் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மிக முக்கியமாக பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கருவுற்ற பெண்களில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் இரத்த சோகை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த உள்ளது.

## முதலாவது கஞ்சா மருத்துவத் திட்டம்

- முதலாவது கஞ்சா மருத்துவத் திட்டமானது கனடாவுடன் இணைந்து ஜம்மு காஷ்மீரில் அமைக்கப்பட உள்ளது.
- இந்த ஒன்றியப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் முதலாவது அயல்நாட்டு முதலீடு இதுவாகும்.
- இந்தத் திட்டமானது ஜம்மு காஷ்மீரில் உள்ள இந்திய ஒருங்கிணைந்த மருத்துவ மையத்தில் அமைக்கப்பட உள்ளது.
- கஞ்சா செடியிலிருந்து மருந்துகளை மேம்படுத்துவதில் நாட்டில் உள்ள முதலாவது மாநிலம்/ஒன்றியப் பிரதேசம் ஜம்மு காஷ்மீர் ஆகும்.
- போதை மருந்துகள் மீதான 1961 ஆம் ஆண்டின் ஒற்றை ஒப்பந்தமானது (சர்வதேச ஒப்பந்தம்) கஞ்சாவை ஒரு “கடுமையான மருந்தாக” வகைப்படுத்தியுள்ளது.

## டெங்கு எதிர்ப்புப் பிரச்சாரம் – தில்லி

- தில்லி அரசானது “10 ஹாப்டே 10 பஜே 10 மினிட்” என்ற பெயர் கொண்ட டெங்கு மற்றும் இதர நோய்ப் பரப்பிகளின் மூலம் பரவும் நோய்களுக்கு எதிராக ஒரு மிகப்பெரிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது தில்லி மக்கள் தங்களது கைபேசியின் மூலம், 10 உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோரை அழைத்து டெங்குவைத் தடுப்பதற்கான நடைமுறைகள் குறித்து அவர்களுக்கு அறிவுரை வழங்க வழிவகை செய்கின்றது.
- நோய்ப் பரப்பியின் மூலம் பரவும் நோய்களுக்கான தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட “இந்தியாவில் டெங்கு” என்ற ஒரு அறிக்கையின் படி, 2019 ஆம் ஆண்டில் டெங்கு பாதித்துள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

## நாட்டின் முதல் ஒருங்கிணைந்த வான்வழி மருத்துவ ஊர்திச் சேவை

- நாட்டின் முதல் ஒருங்கிணைந்த வான்வழி மருத்துவ ஊர்திச் சேவையைக் கர்நாடக முதலமைச்சரான எடியூரப்பா அவர்கள் திறந்து வைத்தார்.
- வான்வழி மருத்துவ ஊர்தி நிறுவனமான இன்டர்நேஷனல் கிரிட்டிகல் ஏர் டிரான்ஸ்ஃபர் டீம் (International Critical Air Transfer Team) இதைக் கியாதியின் (Kyathi) ஒத்துழைப்புடன் இயக்கும்.
- இந்த மருத்துவ ஊர்தியில் தீவிர கோவிட் -19 நோயாளிகளைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல அதிநவீன ஜெர்மன் தனிமைப்படுத்தும் பாட் கருவி (German Isolation Pod) பொருத்தப் பட்டுள்ளது.
- இது நீண்ட தூர அவசர மருத்துவப் போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியது, இது ஹெலிகாப்டர் மற்றும் சாலை மருத்துவ ஊர்திச் சேவைகளுடன் இணைந்து பாதிக்கப்பட்டோருக்கும் மருத்துவர்களுக்குமான இணைப்பையும் வழங்குகிறது.



## இந்தியாவில் மிகப்பெரிய பன்றித் தொழுவத் திட்டம்

- மேகாலயா மாநில அரசானது ரூ.209 கோடி மதிப்பீட்டில் இந்தியாவின் மிகப்பெரிய "பன்றித் தொழுவத் திட்டத்தை" தொடங்கியுள்ளது.
- இது மேகாலயா கால்நடைத் தொழிற்துறைகள் மேம்பாட்டுச் சமூகத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது. இது தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தினால் நிதியளிக்கப் படுகின்றது.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் அடுத்த 3 ஆண்டுகளில் பன்றி இறைச்சி உற்பத்தியில் தற்சார்பு உடையதாகவும் பன்றி இறைச்சியின் வருடாந்திர இறக்குமதியைக் குறைப்பதாகவும் உள்ளது.

## YSR ஆசாராத் திட்டம்

- ஆந்திரப் பிரதேசமானது "YSR ஆசாராத் திட்டத்தை" தொடங்கியுள்ளது. இது "நவ ரத்னாலு" என்பதைச் செயல்படுத்துதலின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வறுமையை ஒழித்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் என்ற நோக்கத்துடன் தொடங்கப் பட்டு உள்ளது.
- இந்தத் திட்டமானது பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனானது நான்கு தவணைகளில் வழங்கப் படவுள்ளது.
- "நவ ரத்னாலு" என்ற திட்டமானது ஆந்திரப் பிரதேசத்தின் 2019 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

## கரீமா (GARIMA) திட்டம் – ஒடிசா

- ஒடிசா மாநில அரசானது அம்மாநிலத்தில் உள்ள முன்கள சுகாதாரப் பணியாளர்களின் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் சமூகக் கண்ணியம் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக "GARIMA" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், சுகாதாரப் பணியாளர்களின் பணி நேரமானது ஒரு நாளைக்கு 6 மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- முன்கள சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வழக்கமான சுகாதாரப் பரிசோதனைகள், வீட்டு வசதி, கல்வியுதவி, போக்குவரத்து உதவி மற்றும் கைபேசி உதவியுடன் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப் படவுள்ளனர்.




## "எனது குடும்பம், எனது பொறுப்பு" பிரச்சாரம்

- மகாராஷ்டிரா மாநில அரசானது கொரானா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக "எனது குடும்பம், எனது பொறுப்பு" என்ற ஒரு பிரச்சாரத்தை, மாநிலம் தழுவிய அளவில் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது 2 நிலைகளில் நடத்தப்படவுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது கோவிட் – 19 நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக திறன்மிகு சுகாதார நலக் கல்வியை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## திரிபுராவில் முதலாவது சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZ)

- முதலாவது SEZற்கான (Special Economic Zone) அடிக்கல்லானது திரிபுராவின் முதல்வரான பிப்லப் குமார் தேப் அவர்களால் சப்ரூமில் நாட்டப் பட்டது.
- சப்ரூம் ஆனது வங்க தேசத்துடன் எல்லையைப் பகிரும் அம்மாநிலத்தின் ஒரு தென்பகுதி நகரமாகும்.

- இது வடகிழக்கின் ஒரு வணிகத் தலைநகரமாக உருவெடுக்க இருக்கின்றது.
- ஒரு ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியானது பயணிகள் மற்றும் சரக்குகளின் போக்குவரத்திற்காக வேண்டி இங்கு அமைக்கப்படவுள்ளது.

## சட்டப்பூர்வமாக்கப்பட்ட பாம்புப் பிடி தொழில்

- மனித ஆதிக்கம் நிறைந்த இடங்களிலிருந்துப் பாம்புகளை மீட்பதற்கும், மக்கள் வசிக்காத பகுதிகளில் அதை விடுவிப்பதற்கும் கேரள வனத்துறையானது சில வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.
- இவ்வாறு, நாட்டில் பாம்பு கையாளுதலை சட்டப் பூர்வமாக்கிய முதல் மாநிலம் கேரளாவாகும்.
- விலங்குகளுக்கு மன அழுத்தத்தை உருவாக்கி, அவற்றின் உயிருக்கும் மற்றும் பிறரின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் பாம்பு பிடிப்பவர்களின் விஞ்ஞானமற்ற அணுகுமுறைகளின் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் இது பாம்புகளைக் கையாளுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் ஒரு நடவடிக்கையாக உள்ளது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் கேரளாவில் 334 பாம்புக்கடியிலான இறப்புகளும், 1,860 பாம்புக்கடி நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன.

## தேசியப் பொது ஆவணப் பதிவு அமைப்பு

- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது தேசியப் பொது ஆவணப் பதிவு அமைப்பை (NGDRS - National Generic Document Registration System) தொடங்கியுள்ளது.
- NGDRS-ன் ஒரு பகுதியாக விளங்கும் மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களிடையே 10வது பகுதியாக ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் விளங்குகின்றது.
- NGDRS ஆனது நிலத்தை வாங்குதல் மற்றும் விற்றல் போன்ற பரிமாற்றங்களின் போது நடைபெறும் அனைத்துப் பரிமாற்றங்களும் தற்போதுள்ள நேரடியான பதிவு அமைப்பிலிருந்து ஆன்லைன் பதிவு அமைப்பிற்கு மாறுவதைக் குறிக்கின்றது.
- அஞ்சல் தாள்கள் மின்னணு-அஞ்சல் தாள்களால் மாற்றப்படுகின்றது.
- இது இந்தியப் பங்குதாரர் கழகத்தின் ஒத்துழைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
- NGDRS-ன் தொடக்கமானது தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் "ஒரே தேசம் ஒரே மென்பொருள்" ஆகியவற்றை நோக்கிய ஒரு மிகப்பெரிய முயற்சியாகும்.

## மறந்து போன மதம் சார்ந்த நிறுவனங்களை வரைபடமிடல்

- மேற்கு வங்க மாநில அரசானது பின்வரும் 2 திட்டங்களின் கீழ் தகவல் மற்றும் கலாச்சார விவகாரங்களினால் எடுக்கப்பட்ட அனைத்து மதம் சார்ந்த நிறுவனங்களையும் வரைபடமிட முடிவு செய்துள்ளது.
- அந்த 2 திட்டங்கள் பின்வருமாறு:
  - மகா தீர்த்த பூமி மற்றும்
  - மகா புண்ணிய பூமி
- இது ஆலயங்கள், மசூதிகள், குருத்துவாராக்கள், தேவாலயங்கள் போன்ற மறந்து போன அனைத்து நிறுவனங்களையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## நீலநிறத் தகடுடன் கூடிய நினைவு இல்ல கௌரவம்

- இலண்டனில் உள்ள நூர் இனாயத் கான் (நூர்-உன் நிசா இனாயத் கான் அல்லது நூரா பேக்கர்) தனது முன்னாள் குடும்ப இல்லத்தில் நீலநிறத் தகடுடன் கூடிய நினைவு இல்லத்துடன் கௌரவிக்கப் பட்ட முதலாவது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணாக உருவெடுத்து உள்ளார்.
- பிரிட்டனின் இரண்டாம் உலகப் போரின் போது, இவர் சிறப்பு நடவடிக்கைகள் படையில் ஒரு உளவாளியாகப் பணியாற்றினார்.
- பிரெஞ்சுப் படையின் எதிர்ப்பிற்கு உதவுவதற்காக நாசிப் படையினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சிற்குள் ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து அனுப்பப்பட்ட கம்பிவடமற்ற முறையில் செயல்படும் பிரிட்டனின் முதலாவது பெண் செய்தித் தொடர்பாளர் இவராவார்.
- இலண்டனின் ப்ளு பிளேக் திட்டமானது 1866 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் உலகம் முழுவதும் இதே மாதிரியாக உள்ள பல்வேறு திட்டங்களுக்கு உந்துதலாக இருந்தது.
- இலண்டனில் ப்ளு பிளேக்குடன் கௌரவிக்கப்பட்ட மற்ற இந்தியத் தலைவர்கள் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு மற்றும் பிஆர் அம்பேத்கர் ஆகியோராவர்.




## சிபிஎஸ்சி சிறந்த ஆசிரியர்கள் விருது 2019-20

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது (CBSE - Central Board of Secondary Education) 2019-20 ஆம் ஆண்டிற்கான சிபிஎஸ்சி சிறந்த ஆசிரியர்கள் விருதிற்காக 39 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- அதில் பின்வரும் 3 ஆசிரியர்கள் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
    - ஷோபா ராமன், தலைமையாசிரியர், வித்யா மந்திர், உயர் நிலைப் பள்ளி, சென்னை.
    - டாக்டர் எஸ். தீபா, அறிவியல் ஆசிரியர், G.K. ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா, அம்பத்தூர் மேற்கு.
    - V. பிந்து, ஓசூர் அரசுப் பள்ளியின் தலைமை ஆசிரியர், காரப்பள்ளி.



Shoba Raman, left, Dr. S. Deepa and Dr. V. Bindhu, right.

## இந்தியாவின் முதலாவது பெண் மற்றும் பழமையான இதய நோய் நிபுணர்


- சமீபத்தில் இந்தியாவின் முதலாவது பெண் மற்றும் பழமையான இதய நோய் நிபுணரான டாக்டர் S. பத்மாவதி காலமானார்.
- இவர் இந்தியாவில் லேடி ஹார்டின்ஜ் மருத்துவக் கல்லூரியில் முதலாவது சிறுநீர் இறங்குகுழல் ஆய்வகத்தையும் இருதய நோய் மருத்துவமனையையும் ஏற்படுத்தி உள்ளார்.
- இவர் "இருதயத்தின் ஞானமாதா" (God Mother of Cardiology) என்று சிறப்பாக அறியப் படுகின்றார்.
- இவர் பத்மபூஷண் (1967) மற்றும் பத்ம விபூஷண் (1992) விருதுகளைப் பெற்று உள்ளார்.
- இவர் ரங்கூனில் உள்ள ரங்கூன் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டத்தைப் பெற்ற முதலாவது பெண் மாணவி ஆவார்.
- இவர் இதயத் துறையில் இந்தியாவின் முதலாவது மருத்துவ முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.
- இவர் மௌலானா ஆசாத் மருத்துவக் கல்லூரி, லோக் நாயக் மருத்துவமனை மற்றும் G.B. பந்த் மருத்துவமனை ஆகிய 3 முக்கிய மருத்துவமனைகளிலும் ஒரே நேரத்தில் தலைமை நிர்வாகியாக பணியாற்றிய முதலாவது மற்றும் ஒரே நபராவார்.




## பிரணாப் முகர்ஜி மறைவு

- இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான பிரணாப் முகர்ஜி ஆகஸ்ட் 31 அன்று மறைந்தார்.
- இவர் 2012 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதி முதல் 2017 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதி வரை இந்தியாவின் 13வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார்.

- இவர் பல்வேறு சமயங்களில் பாதுகாப்புத் துறை (2004-2006), அயலுறவுத் துறை (2006-2009) மற்றும் நிதித் துறை (1982 & 2009) ஆகியவற்றின் அமைச்சராக பணியாற்றினார்.
- இவர் 1969 ஆம் ஆண்டு முதல் மாநிலங்களவைக்கு 5 முறையும் 2004 ஆம் ஆண்டு முதல் மக்களவைக்கு 2 முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டில், இவருக்கு இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதான பாரத் ரத்னா வழங்கப் பட்டுள்ளது.




## தேசிய ஆற்றல் தலைவர் விருது

- ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையமானது ஆற்றல் மேலாண்மையில் சிறப்பாகச் செயலாற்றியமைக்கான 21வது தேசிய விருது வழங்கும் விழாவில் 'தேசிய ஆற்றல் தலைவர்' 'மற்றும் சிறப்புமிகு ஆற்றல் செயல்திறன்' அலகு ஆகியவற்றிற்கான விருதுகளை வென்றுள்ளது.
- இது இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பு மற்றும் கோத்ரேஜ் பசுமை வணிக மையத்தினால் வழங்கப் பட்டது.
- ஹைதராபாத் சர்வதேச விமான நிலையமானது தொடர்ந்து 4வது ஆண்டாக சிறப்புமிகு ஆற்றல் செயல்திறன் அலகு என்ற விருதையும் தொடர்ந்து 2வது ஆண்டாக தேசிய ஆற்றல் தலைவர் என்ற விருதையும் பெற்றுள்ளது.

## கேசவானந்தா பாரதி – மறைவு

- அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு என்ற புகழ்பெற்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பின் பின்னணியில் இருந்த நபரான கேசவானந்தா பாரதி சமீபத்தில் காலமானார்.
- இவர் கேராளவின் காசர்கோடு மாவட்டத்தில் உள்ள எட்னீர் மடத்தின் தலைமைக் குரு ஆவார்.
- இவர் கேசவானந்தா பாரதி எதிர் கேரள அரசு என்ற வழக்கில் மனுதாரராக இருந்தார்.
- இவர் 1970 ஆம் ஆண்டில், 1969 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட "கேரள நிலச் சீர்த்திருத்தங்கள் சட்டம், 1963" என்ற ஒரு சட்டத்தின் மூலம் மடத்தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் கேரள அரசின் முயற்சியை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார்.
- இவர் இந்த நடவடிக்கையானது அவரது அடிப்படை மதச் சுதந்திரம் (சரத்து 25), மதம் சார்ந்த பிரிவு மீதான உரிமை (சரத்து 26) மற்றும் சொத்துரிமை (சரத்து 31) ஆகியவற்றை மீறுவதாக வாதாடினார்.
- இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாட்டை வலியுறுத்திய இந்திய உச்ச நீதிமன்றத்தின் புகழ்பெற்ற தீர்ப்பு இதுவாகும்.

- இந்த வழக்கானது சரத்து 368ன் மூலம் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்புத் திருத்தங்கள் அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை பாதித்தால் மட்டுமே அது அடிப்படை உரிமைக்கான மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று கூறியது.





## இந்திரா காந்தி அமைதிப் பரிசு

- சர் டேவிட் எட்டன்பரோஹ் என்பவருக்கு 2019 ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற இந்திரா காந்தி அமைதிப் பரிசானது வழங்கப்பட்டது.
- இவர் ஒரு ஆங்கில ஒளிப்பரப்பாளர் மற்றும் வரலாற்று அறிஞர் ஆவார்.
- இவர் பிபிசி இயற்கை வரலாற்று அலகை எழுதி, அதனைத் தொகுத்து வழங்கியதற்காகப் பிரபலமாக அறியப்படுகின்றார்.
- இவர் பூமியின் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பணியாற்றியுள்ளார்.
- இந்தப் பரிசானது அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக வழங்கப் படுகின்றது.
- இது 1986 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளையினால் வழங்கப்படுகின்றது.



## இந்திய வானொலி வானியலின் தந்தை மறைவு

- இந்திய வானொலி வானியலின் தந்தையாகக் கருதப்படும் கோவிந்த் சுவரூப் சமீபத்தில் காலமானார்.
- இவர் டாடா அடிப்படை ஆராய்ச்சி மையத்தின் தேசிய வானொலி வான் இயற்பியல் மையத்தின் நிறுவன இயக்குநராகப் பணியாற்றினார்.
- இவர் ஊட்டி வானொலித் தொலைநோக்கி மற்றும் புனேவில் உள்ள மிகப்பெரிய மீட்டர் அலை வானொலி தொலைநோக்கித் தொடர் ஆகியவற்றை அமைத்து உள்ளார்.
- இவருக்குப் பின்வரும் விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
  - இவரதுப் பங்களிப்புகளுக்காக 1973 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ விருது.
  - 1972 ஆம் ஆண்டில் சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது.
  - 1999 ஆம் ஆண்டில் குவாரிஸ்மி சர்வதேச விருது.
  - 2007 ஆம் ஆண்டில் குரோட் ரெபர் விருது.




## அமெரிக்க விண்கலத்திற்குக் கல்பனா சாவ்லாவின் பெயர்

- அமெரிக்காவின் உலகளாவிய விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்நுட்ப நிறுவனமான நார்த்ரோப் க்ரம்மன், அதன் அடுத்த சிக்னஸ் காப்ஸ்யூலுக்கு (விண்கலம்) "எஸ்.எஸ். கல்பனா சாவ்லா" என்று பெயரிடுவதாகக் கூறியுள்ளது.
- 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், சாவ்லா அவர்கள் எஸ்.டி.எஸ்-87' என்ற ஒரு குழுவில் கொலம்பியா விண்கலத்தில் (Space Shuttle Columbia) ஒரு திட்ட நிபுணராக நியமிக்கப் பட்டார்.
- இது விண்வெளியில் பறக்கும் முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை இவருக்குச் சேர்த்தது.
- அவரது இரண்டாவது விண்வெளிப் பயணம் 2001 ஆம் ஆண்டில் எஸ்.டி.எஸ்-107 குழுவினருக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது நிகழ்ந்தது.
- 2003 ஆம் ஆண்டில் பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்த போது அவர் பயணித்த விண்கலம் வெடித்ததால் அவர் தனது உயிரினை இழந்தார்.




## WSIS விருது 2020

- மேற்கு வங்காள மாநில அரசானது தனது சம்பூஜ் சாதி என்ற திட்டத்திற்காக WSIS விருது 2020 என்பதை (World Summit on the Information Society - தகவல் சமூகம் மீதான உலக மாநாடு) வென்றுள்ளது.
- கன்யா ஸ்ரீ திட்டத்திற்குப் பிறகு, மற்றொரு மேற்கு வங்காள மாநில அரசுத் திட்டமானது மின் ஆளுகை வகையின் கீழ் ஓர் உலகளாவிய பரிசை வென்று உள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ஒன்பதாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு ஆகியவற்றில் பயிலுகின்ற அரசால் நிர்வகிக்கப் படும், அரசால் ஆதரவளிக்கப்படும், நிதியுதவி அளிக்கப்படும் பள்ளி மாணவர்கள் மற்றும் மதராசா பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.
- இது பள்ளி இடைநிற்றல் பிரச்சினையை, அதிலும் குறிப்பாக வங்காள மாநிலத்தின் கிராமப்புற மாணவர்களின் இடைநிற்றல் பிரச்சினையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இது குறைந்தது பன்னிரண்டாம் வகுப்பு வரை அவர்கள் பள்ளி கல்வியைத் தொடரச் செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் இலக்காகக் கொண்ட நிபந்தனையுடன் கூடிய பணப் பரிமாற்றத் திட்டமான கன்யாஸ்ரீ பிரகல்பா திட்டமானது ஐக்கிய நாடுகளின் விருதைப் பெற்றுள்ளது.

## MGNREGA மனிதர் மறைவு


- ரகுவன்ஷ் பிரசாத் சிங் அவர்கள் 15வது மக்களவையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.
- இவர் 11வது, 12வது, 13வது, 14வது மக்களவையிலும் பணியாற்றினார்.
- இவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். அதன் பிறகு அவர் பீகாரின் ஆற்றல் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.
- இவர் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய நலத் திட்டமான, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கட்டமைப்பாளராக அறியப் படுகின்றார்.

## SDGக்கான 2020 ஆண்டின் இளம் தலைவர்களின் மீதான ஐ.நா.வின் பட்டியல்

- நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான 2020 ஆம் ஆண்டின் இளம் தலைவர்களின் பட்டியலில் ஐக்கிய நாடுகள் சபையானது 18 அகவை நிரம்பிய ஒரு இந்திய இளைஞரின் பெயரை வெளியிட்டுள்ளது.
- டெல்லியைச் சேர்ந்த இந்த இளைஞர் கிளாஸ்2சாண்டின் என்ற நிறுவனத்தின் (Glass2Sand) நிறுவனர் ஆவார்.
- இது கண்ணாடியை மணலாக மாற்றும் வகையில் கழிவுகளற்ற ஒரு சுற்றுச்சூழல் அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது தேசிய தலைநகரத்தில் மிகப்பெரிய அளவில் அதிகரித்து வரும் கண்ணாடி குறித்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்கிறது.
- இவரின் முன்னெடுப்பானது வெற்றுக் கண்ணாடி பாட்டில்கள் நிலப்பரப்பில் குவிக்கப் படுவதைத் தடுத்துள்ளது.

### *நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான இளம் தலைவர்கள்*

- நிலையான வளர்ச்சி இலக்கு மீதான முன்முயற்சிக்கான இளம் தலைவர்கள் இரண்டாண்டிற்கொரு முறை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- உலகின் மிக முக்கியமான பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பும் மற்றும் அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை எடுக்கும் இளைஞர்களுக்கு இது ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தின் மிக உயர்ந்த அங்கீகாரம் கொண்ட ஒரு வாய்ப்பாக கருதப் படுகிறது.




## டாக்டர் கபிலா வாத்ஸ்யாயன் காலமானார்

- இவர் இந்தியப் பாரம்பரிய நடனம், கலை, கட்டிடக் கலை மற்றும் கலை வரலாற்றின் சிறந்த அறிஞராக விளங்கினார்.
- இவர் நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினராகவும் பணியாற்றினார்.
- இந்திரா காந்தி தேசியக் கலைகள் மையத்தின் நிறுவன இயக்குநர் இவராவார்.
- இவர் 1970 ஆம் ஆண்டில் சங்கீத நாடக அகாடமி தோழமை விருதினைப் பெற்றார்.
- இவர் 1955 ஆம் ஆண்டில் நுண் கலைகளில் மிக உயரியதாகக் கருதப்படும் லலித் கலா அகாடமி தோழமைப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- இவர் 2000 ஆம் ஆண்டில் ராஜிவ் காந்தி தேசிய சத்பாவனா விருதைப் பெற்று உள்ளார்.
- 2011 ஆம் ஆண்டில் இவருக்கு இந்திய அரசினால் பத்ம விபூசன் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

- இவர் பின்வரும் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ளார். அவையாவன:
  - 1997 ஆம் ஆண்டில் இந்தியக் கலையின் சதுரம் மற்றும் வட்டம்
  - பரதம் : நாட்டிய சாஸ்திரம் (1996 ஆம் ஆண்டில்)
  - 1988 ஆம் ஆண்டில் மாட்ர லக்சனம்

## 72வது பிரைம்டைம் எம்மி விருதுகள்

- இந்த விருதானது தொலைக்காட்சி மற்றும் வளர்ந்து வரும் ஊடகத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கின்றது.
- புகழ்பெற்ற சிட்காம் சிச்சட்ஸ்ஸின் கிரீக் (sitcom Schitt's Creek) என்ற தொடரானது நகைச்சுவைத் தொடருக்காக ஒரே தொடரில் மிக அதிகமான விருதுகளை வென்று உள்ளது.
- இவர் நகைச்சுவைப் பிரிவில் 7 பிரைம்டைம் விருதுகளையும் 9 எம்மிஸ் விருதுகளையும் வென்றுள்ளார்.
- யூபோரியாவில் சென்டாயா என்பவர் நாடகத் தொடர் பிரிவில் சிறந்த முன்னிலை நடிகைக்கான இளம் வயது விருது பெறுபவராக உருவெடுத்துள்ளார்.

### *இதர வெற்றியாளர்கள்*

- சிறந்த நடிகர் – நாடகம் – ஜெரிமீ ஸ்டராங் (Succession)
- சிறந்த நடிகை – நாடகம் – சென்டாயா (Euphoria)
- சிறந்த நடிகர் – நகைச்சுவை – யூஜூன் லெவி (Schitt's Creek)
- சிறந்த நடிகை – நகைச்சுவை – மேத்தரீன் ஓ ஹாரா (Schitt's Creek)
- சிறந்த நடிகர் – குறைந்தபட்சத் தொடர் அல்லது திரைப்படம் – மார்க் ரூபாலோ (I Know This Much Is True)
- சிறந்த நடிகை – குறைந்தபட்சத் தொடர் அல்லது திரைப்படம் – ரெஜினா சிங் (Watchmen)

## ஜஜி நோபல் பரிசு 2020

- நரேந்திர மோடி அவர்களுக்கு மருத்துவக் கல்விக்கான 2020 ஆம் ஆண்டின் ஜஜி நோபல் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்களை விட அரசியல் தலைவர்களே இறப்பு மற்றும் வாழ்க்கை மீதான உடனடித் தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் காண்பிப்பதற்காக இந்தப் புகழ்பெற்ற விருதினை அவர் பெற்றுள்ளார்.
- பிரதமர் மோடி அவர்கள் பிரேசிலின் ஜெயிர் போல்சனரோ, ஐக்கிய இராஜ்ஜியத்தின் போரிஸ் ஜான்சன், மெக்சிகோவின் ஆண்டிரிஸ் மானுவேல் லோப்பெஸ் ஒப்ரடோர், பெலாரஸின் அலெக்சாந்தர் லூகாசென்கோ, அமெரிக்காவின் டொனால்டு டிரம்ப், துருக்கியின் ரெசப் தயீப் எர்டோகன், ரஷ்யாவின் விளாடிமிர் புடின் மற்றும் துர்க்மெனிஸ்தானின் குர்பாங்குலி பெர்டிமுகாமெடோ ஆகியோருடன் விருதைப் பகிர்ந்துள்ளார்.
- இதனைத் தவிர, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் கூட்டாக 2020 ஆம் ஆண்டின் ஜஜி நோபல் அமைதிப் பரிசை வென்றுள்ளன.

- இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட 2வது இந்தியப் பிரதமர் மோடி ஆவார்.
- இதற்கு முன் இந்த விருதானது 1998 ஆம் ஆண்டில் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இது பாகிஸ்தானின் அப்போதைய பிரதமரான நவாஸ் செரிப்புடன் பகிர்ந்து கொள்ளப் பட்டது.

## 2020 ஆம் ஆண்டில் டைம்ஸின் 100 மிகவும் சக்திமிக்க மனிதர்களின் பட்டியல்

- டைம் பத்திரிக்கையானது இந்த ஆண்டில் மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்திய 100 முன்னோடிகள், தலைவர்கள், முன்னிலையாளர்கள், கலைஞர்கள் மற்றும் பெருந்தலைவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலானது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சாஹீன் பாஹ் போராட்டத்தில் மக்கள் முகமாக உருவெடுத்த பில்கிஸ், நடிகர் ஆயுஷ்மான் குர்ரானா ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற இந்தியாவைச் சேர்ந்த ஒரே நடிகர் ஆயுஷ்மான் குர்ரானா ஆவார்.
- கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பபெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான சுந்தர் பிச்சை மற்றும் மருத்துவ நுண் உயிரியல் பேராசிரியரான ரவீந்திர குப்தா ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.



## பனிச் சிறுத்தை அங் ரிட்டா ஷெர்பா காலமானார்

- "பனிச் சிறுத்தை" என்று வெகுவாக அறியப்படும் அங் ரிட்டா ஷெர்பா அவர்கள் வெற்றிகரமான மலையேறுபவராக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.
- இவர் ஆல்பைன் இமயமலைப் பகுதிகளின் பாதுகாப்பு குறித்து இமயமலைப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு திட்டங்களில் பணியாற்றியுள்ளார்.



- இவர் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும் இமயமலைச் சூழலமைப்பின் பாதுகாப்பு குறித்த தனது முயற்சிகளுக்காக 2011 ஆம் ஆண்டில் சர் எட்மண்ட் ஹிலாரி மலைப் பிரதேச விருதை வென்றுள்ளார்.
- இவர் செயற்கை ஆக்ஸிஜன் வாயுவின் துணை இல்லாமல் அதிக முறை இமயமலை ஏறியதற்காக கின்னஸ் உலக சாதனைச் சான்றிதழை வென்றுள்ளார்.

## உலகக் கட்டிடக் கலை விருது

- புவனேஸ்வரில் உள்ள குருஷி பவன் கட்டிடமானது 2020 ஆம் ஆண்டின் ஏஇசட் விருதுகளில் சிறந்த சமூகப் பிரிவில் "மக்களின் விருப்பம் பெற்ற வெற்றி இடமாக" தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற விருதுக்காக இந்தியாவிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே திட்டம் குருஷி பவன் ஆகும்.
- "டீஸின்" (Dezeen) என்ற புகழ்பெற்ற சர்வதேசக் கட்டிடக் கலைப் பத்திரிக்கையில் இடம் பெற்ற இந்தியாவின் முதலாவது அரசுக் கட்டிடம் மற்றும் ஒடிசாவின் முதலாவது கட்டிடம் இதுவாகும்.
- இந்தத் திட்டமானது சம்பல்புரி சேலை மற்றும் அதன் வடிவமைப்புகளை வெளிக் காட்டுகின்றது.



## எஸ்.பி.பி. காலமானார்

- புகழ்பெற்ற பின்னணிப் பாடகரான எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சமீபத்தில் காலமானார்.
- இவர் 1966 ஆம் ஆண்டில் தெலுங்குத் திரைப்படமான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மரியாதை ராமண்ணா என்ற படத்தில் முதன்முறையாகப் பாடினார்.
- இவர் தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி உள்ளிட்ட 16 மொழிகளில் 40,000 பாடல்களைப் பாடியுள்ளார்.



- இவர் 6 தேசிய விருதுகளையும் 2001 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ விருதையும் 2011 ஆம் ஆண்டில் பத்ம விபூஷண் விருதையும் வென்றுள்ளார்.

## தொற்றா நோய்களின் கட்டுப்பாடு குறித்த UNIATF விருது

- கேரள மாநிலமானது நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG - Sustainable development goals) தொடர்பான தொற்றா நோய்கள் (NCD : Non-communicable diseases) குறித்த தனது "தலைசிறந்த பங்களிப்பை" ஆற்றியதற்காக ஐக்கிய நாடுகள் விருதினை வென்று உள்ளது.
- இந்த விருதானது NCD-ன் கட்டுப்பாடு மற்றும் அவற்றைத் தடுத்தல், மனநலம் மற்றும் மிகப் பரவலான NCD தொடர்பான SDG ஆகியவற்றில் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்துறை செயல்பாடுகளை அங்கீகரிக்கின்றது.
- ஐக்கிய நாடுகளினால் (United Nations Interagency Task Force on the Prevention and Control of Non-communicable Diseases - UNIATF) இந்த வருடாந்திர விருதிற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது மாநிலம் கேரளா ஆகும்.
- உலகில் சுகாதாரம் குறித்த 7 சிறந்த அமைச்சகங்களிடையே கேரளாவும் ஒன்று ஆகும்.




## ஞானபீட விருது

- கடந்த ஆண்டு நவம்பரில் அறிவிக்கப்பட்ட ஞான பீட விருதானது கவிஞர் அக்கிதம் அச்சுதன் நம்பூதிரிக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இவரது படைப்பான பாலதர்சனம் 1972-73 ஆண்டுகளில் மாநில விருது மற்றும் மத்திய அரசின் சாகித்ய அகாதமி விருது ஆகியவற்றை வென்றுள்ளது.

### *ஞானபீட விருது*

- ஞானபீடம் ஆனது அரசியலமைப்பின் அட்டவணையில் உள்ள 22 மொழிகளில் ஏதேனும் ஒன்றில் சிறந்த இலக்கியப் புத்தகங்களை எழுதும் எழுத்தாளர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் இந்தியாவின் உயரிய இலக்கிய விருதாகும்.
- இந்த விருதானது 1961 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- முதலாவது ஞானபீட விருதானது 1965 ஆம் ஆண்டில் கவிஞர் G. சங்கரா குருப் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## அமெரிக்கா ஓபன் 2020

- 2020 ஆம் ஆண்டின் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியானது அமெரிக்கா ஓபன் டென்னிஸ் போட்டியின் 140வது பதிப்பு மற்றும் இந்த ஆண்டின் 2வது கிராண்ட் ஸ்லாம் நிகழ்வாகும்.
- ஆஸ்திரியாவின் டொமினிக் தெய்ம் என்பவர் ஜெர்மனியின் அலெக்சாந்தர் செவ்ரெவ் என்பவரை வீழ்த்தி ஆண்களின் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.
- இது தெய்ம்மின் முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- ஜப்பானின் நோமி ஒசாகா அவர்கள் பெலாரசின் விக்டோரியா அசாரேன்கா என்பவரை வீழ்த்தி பெண்களின் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.
- இது ஒசாகாவின் மூன்றாவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.



# முக்கிய தினங்கள்

## தேசிய ஊட்டச்சத்து வாரம் – செப்டம்பர் 01/07

- இந்தியாவானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் (செப்டம்பர் 01 முதல் 07 வரை) முதலாவது வாரத்தில் தேசிய ஊட்டச்சத்து வாரத்தை அனுசரிக்கின்றது.
- இந்த நிகழ்வானது 1982 ஆம் ஆண்டில் மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.



- இது நமது உடலிற்கான ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் தேசிய ஊட்டச்சத்து வாரத்தின் கருத்துரு, "சரியான உணவு உட்கொள், நன்றாக மென்று சாப்பிடு" என்பதாகும்.

## உலகத் தேங்காய் தினம் – செப்டம்பர் 02

- இதன் முக்கிய நோக்கம் தேங்காய் மற்றும் அவற்றின் பயன்களின் முக்கியத்துவம் குறித்து உலகம் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- இந்தத் தினமானது ஆசியா மற்றும் பசிபிக் தேங்காய் சமூகத்தினால் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் அனுசரிக்கப் படுகின்றது.
- 2009 ஆம் ஆண்டில் முதன்முறையாக உலகத் தேங்காய் தினமானது அனுசரிக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான உலகத் தேங்காய் தினத்தின் கருத்துரு, "உலகைக் காப்பதற்காக வேண்டி தேங்காயில் முதலீடு செய்தல்" என்பதாகும்.




## சர்வதேச கருணை தினம் – செப்டம்பர் 05

- இது அன்னை தெரசாவின் இறந்த தினத்தை அனுசரிக்கின்றது. மேலும் இது கருணையின் முக்கியத்துவம் குறித்து மக்கள் அறிந்து கொள்வதற்காக வேண்டி அனுசரிக்கப் படுகின்றது.
- சர்வதேச கருணை தினமானது அதிகாரப்பூர்வமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2012 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டில், அன்னை தெரசா இந்தியாவில் கருணை சமயப் பரப்பு அமைப்பைத் தொடங்கினார்.



## ஆசிரியர் தினம் – செப்டம்பர் 05

- ❖ இது டாக்டர் சர்வப் பள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.
- ❖ இவர் 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி தமிழ்நாட்டின் திருத்தணியில் பிறந்தார்.
- ❖ இவர் ஒரு புகழ்பெற்ற அறிஞர், பாரத ரத்னா (1954) விருது பெற்றவர், சுதந்திர இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவர் மற்றும் இரண்டாவது குடியரசுத் தலைவர் ஆவார்.
- ❖ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவியைக் கொண்ட முதல் இந்தியர் இவர் ஆவார் (1936-1952).
- ❖ இவர் 1948 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் நிர்வாகக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- ❖ தேசிய ஆசிரியர் விருதுகள் இந்திய ஜனாதிபதியால் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு வழங்கப் படுகின்றன.




## நீல வான்வெளிக்கான தூய்மைக் காற்றின் சர்வதேச தினம் – செப்டம்பர் 07

- ❖ நீல வான்வெளிக்கான தூய்மைக் காற்றின் முதலாவது சர்வதேச தினமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 அன்று அனுசரிக்கப்பட்டது.
- ❖ இந்தத் தினமானது சுகாதாரம், உற்பத்தித் திறன் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு தூய்மைக் காற்றின் முக்கியத்துவம் குறித்து தனிநபர், சமூகம், பெருநிறுவனம் மற்றும் அரசாங்கம் என அனைத்து நிலைகளிலும் ஒரு பொது விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
- ❖ ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் அன்று நீல வான்வெளிக்கான தூய்மைக் காற்றின் சர்வதேச தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- ❖ உலக சுகாதார நிறுவனமானது இந்தத் தினத்திற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக பீரித்-லைப் (BreatheLife) என்ற ஒரு நிறுவனப் பங்காளருடன் இணைந்து பணியாற்றுகின்றது.




## சர்வதேச கல்வியறிவு தினம் – செப்டம்பர் 08

- இது உலக அளவிலும் நமது சொந்த உள்ளூர் சமூகத்திற்குள்ளும் இருக்கும் கல்வியறிவுப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டானது "கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பிரச்சினையில் கல்வியறிவுக் கற்பித்தல் மற்றும் கற்றல்" என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தத் தினமானது 1966 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் பறைசாட்டப் பட்டது.




## தாக்குதல்களிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 09

- பறைசாட்டப்பட்ட தாக்குதல்களிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினமானது முதன்முறையாக 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒருமித்த முடிவினால் ஏற்படுத்தப் பட்டதாகும். இது பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் வாழும் லட்சக் கணக்கான குழந்தைகளின் அவலநிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யுனெஸ்கோ மற்றும் யுனிசெப் ஆகியவற்றுடன் இணைகின்றது.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதி கொண்டாட்டத்தின் போது 'அனைத்திற்கும் மேலானது கல்வி' என்ற அமைப்பானது "#Unite To Protect" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்குகின்றது.
- இது அதன் பங்காளர்களான யுனிசெப், யுனெஸ்கோ மற்றும் 'நமது எதிர்காலத்தைப் பாதுகாப்போம் என்ற பிரச்சாரம்' ஆகியவற்றுடன் இணைந்து தாக்குதல்களிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான ஓர் உலகளாவிய பிரச்சாரமாகும்.




## உலக தற்கொலைத் தடுப்பு தினம் – செப்டம்பர் 10

- இது தற்கொலையைத் தடுப்பதற்காக உலகம் முழுவதும் அதற்கான நடவடிக்கையை ஊக்கப்படுத்துவதையும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச தற்கொலைத் தடுப்புக் கூட்டமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்தை அனுசரிக்கின்றது.




- இது உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக மனநலக் கூட்டமைப்பு ஆகியவற்றினால் இணைந்து ஆதரவளிக்கப் படுகின்றது.
- இது தற்கொலைகளைத் தடுப்பதற்காக வேண்டி உலகம் முழுவதும் அதற்கான உறுதிப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தற்கொலையைத் தடுப்பதற்காக ஒன்றிணைந்து செயல்படுவோம்" என்பதாகும்.

## தெற்கு-தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐக்கிய நாடுகள் தினம் – செப்டம்பர் 12

- தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு தினமானது 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 அன்று ஐக்கிய நாடுகளினால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தத் தினமானது வளரும் நாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பைச் செயல்படுத்துவதற்காகவும் ஊக்கப்படுத்துவதற்காகவும் 1978 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒரு செயல் திட்டத்தை ஏற்றுக் கொண்ட தினத்தை அனுசரிக்கின்றது.
- இது நீடித்த வளர்ச்சிக்கான செயல்திட்டம் 2030 என்பது உள்ளிட்ட சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்ட வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதை நோக்கிப் பணியாற்றுகின்றது.




## இமயமலை திவாஸ் – செப்டம்பர் 09

- இமயமலை திவாஸ் அல்லது இமயமலை தினமானது இமயமலை சூழலமைப்பின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அதைப் பரப்பும் வகையில் உத்தரகண்டில் அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர அனுசரிப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்திருவிழாவின் கருத்துரு, "இமயமலை மற்றும் இயற்கை" என்பதாகும்.
- 2014 ஆம் ஆண்டில் உத்தரகண்ட்டின் முதல்வரான ஹரீஷ் ராவத் அவர்கள் இது குறித்த ஒரு பரிந்துரையை ஏற்று, செப்டம்பர் 09 என்ற தினத்தை அறிவித்தார்.
- இத்தினமானது 2015 ஆம் ஆண்டு முதல் உத்தரகண்ட் அரசினால் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப் படுகின்றது.

## உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 12

- உலக முதலுதவி தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.
- முதலுதவி தினமானது ஒவ்வொரு நாளிலும் மற்றும் நெருக்கடிக் காலங்களிலும் முதலுதவி என்பது எவ்வாறு உயிர்களைக் காப்பாற்றுகின்றது என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- சர்வதேச செஞ்சிலுவைக் கூட்டமைப்பு மற்றும் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியன இணைந்து 2000 ஆம் ஆண்டில் இத்தினத்தை அறிமுகப்படுத்தியது.



## இந்தி திவாஸ் – செப்டம்பர் 14

- இது இந்தியாவின் அலுவல் மொழிகளில் ஒன்றாக இந்தி ஏற்றுக் கொள்ளப் பட்டதை அனுசரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 343 என்பதின் கீழ், தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப்பட்ட இந்தியானது (120 மொழிகளினால் பயன்படுத்தப்படும் எழுத்து வடிவம்) அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த முடிவானது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## தேசிய பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15

- இந்தத் தினமானது இந்தியாவின் சிறந்த பொறியாளரான மோக்சகுந்தம் விஸ்வேஸ்வரய்யா அல்லது M. விஸ்வேஸ்வரய்யா அவர்களின் பிறந்த நாள் நினைவாகவும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- இவர் இந்தியாவின் சிறந்த பொறியாளர், அணை கட்டமைப்பாளர், பொருளாதார வல்லுநர், சிறந்த தலைவர் ஆவார். மேலும் இவர் கடந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தேசக் கட்டமைப்பாளர்களில் ஒருவராகவும் மதிப்பிடப் படுகின்றார்.
- மேலும் இவர் 1912 முதல் 1918 வரை மைசூரின் திவானாகவும் விளங்கினார்.
- இவர் மைசூரில் உள்ள கிருஷ்ணா ராஜ சாகர் அணையின் கட்டுமானத்திற்குப் பொறுப்பு வகித்த தலைமைப் பொறியாளராக விளங்கினார்.
- மேலும் இவர் ஹைதராபாத் நகரத்திற்கான வெள்ளப் பாதுகாப்பு அமைப்பின் தலைமை வடிவமைப்பாளராகவும் விளங்கினார்.
- இவர் 1903 ஆம் ஆண்டில் புனேவில் உள்ள கடக்வாஸ்லா நீர்த்தேக்கத்தில் முதன்முதலில் அமைக்கப்பட்ட ஒரு தானியங்கி வெள்ளத் தடுப்பு வாயில்களை வடிவமைத்து அதற்கான காப்புரிமையைப் பெற்றார்.
- மேலும் இவர் மைசூர் மாகாணத்தை அப்போதைய ஒரு “மாதிரி மாகாணமாக” மாற்றினார்.
- சமூகத்திற்கு இவருடைய தலைசிறந்த பங்களிப்பின் காரணமாக, இந்திய அரசு இவருக்கு 1955 ஆம் ஆண்டில் “பாரத் ரத்னா” விருதினை வழங்கியது.
- மேலும் இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் அரசரினால் பிரிட்டீஷ் நைட்வுட் பட்டமும் வழங்கப் பட்டது.




## சர்வதேச மக்களாட்சி தினம் – செப்டம்பர் 15

- இந்தத் தினமானது உலகில் மக்களாட்சியின் நிலையைக் கொண்டாடுவதற்கான, ஊக்குவிப்பதற்கான மற்றும் ஆய்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கோவிட் – 19 : மக்களாட்சி மீது தனிக் கவனம்" என்பதாகும்.
- 2008 ஆம் ஆண்டில், சர்வதேச மக்களாட்சி தினமானது முதன்முறையாக அனுசரிக்கப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2008 ஆம் ஆண்டை அங்கீகரித்து, புதிய அல்லது மீட்டெடுக்கப் பட்ட மக்களாட்சிகளின் மீதான முதலாவது சர்வதேசக் கருத்தரங்கின் 20வது நினைவு ஆண்டைக் குறிக்கின்றது.

## ஓசோன் அடுக்குப் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 16


- இது ஓசோன் அடுக்கின் சிதைவு குறித்தும் அதைப் பாதுகாப்பதற்கான தகுந்த தீர்வுகளை ஆராய்வது குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது செப்டம்பர் 16 ஆம் தினத்தை ஓசோன் அடுக்குப் பாதுகாப்பிற்கான சர்வதேச தினமாகப் பறை சாட்டியது.
- இது 1987 ஆம் ஆண்டில் ஓசோன் அடுக்கைச் சிதைவுறச் செய்யும் பொருட்கள் குறித்த மாண்டரீயல் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட தினத்தைக் குறிக்கின்றது.
- "வாழ்க்கைக்கான ஓசோன்" என்பது 2020 ஆம் ஆண்டிற்கான உலக ஓசோன் தினத்தின் முழக்கமாகும்.
- ஓசோன் அடுக்கு என்பது அதிக அளவில் ஓசோன் செறிவுகளைக் கொண்டிருக்கும் வளிமண்டலத்தின் ஒரு பகுதியாகும்.
- ஓசோன் என்பது 3 ஆக்ஸிஜன் அணுக்களைக் ($O_3$) கொண்ட ஒரு வாயுவாகும்.




## தேசிய வனத் தியாகிகள் தினம் – செப்டம்பர் 11

- இது நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் இருக்கும் காடுகள் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக தங்களது உயிரைத் தியாகம் செய்தவர்களை நினைவு கூறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது 1730 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று நிகழ்ந்த கெஜ்ரலி படுகொலையை நினைவுபடுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தப் படுகொலையின் போது, ராஜஸ்தானின் மகாராஜாவான அடல் சிங் அவர்கள் இராஜஸ்தானின் கெஜ்ரலி கிராமத்தில் இருக்கும் பிஷ்னோய் சமூகத்தின் புனித மரமாகக் கருதப்படும் கெஜ்ரலி மரங்களை வெட்டத் தொடங்கினார்.
- அமிர்தா தேவி என்று பெயர் கொண்ட பெண்மணி இதனைத் தடுத்து, இந்த மரங்களுக்குப் பதிலாக தனது தலையை வெட்டிக் கொள்ளுமாறு கூறினார்.
- அபய் சிங்கின் படையினர் இதனைத் தடுத்த அமிர்தா தேவி மற்றும் அவரது 3 மகள்களின் தலையைத் துண்டித்தனர். மேலும் அச்சமூகத்திலிருந்து 359 நபர்களும் கொல்லப் பட்டுள்ளனர்.
- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமானது இத்தினத்தை அனுசரிப்பதற்காக வேண்டி 2013 ஆம் ஆண்டில் பிரகடனம் ஒன்றை அறிவித்தது.





## உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17

- உலக நோயாளிப் பாதுகாப்புத் தினமானது 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் 72வது உலக சுகாதார சபைக் கூட்டத்தினால் ஏற்படுத்தப் பட்டது.
- இந்தத் தினத்தின் முக்கிய நோக்கம் நோயாளியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பை அதிகரித்தல், உலகளாவிய புரிதலை மேம்படுத்துதல், உலகளாவிய ஒற்றுமை மற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்தச் செய்தல் ஆகியனவாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சுகாதாரப் பணியாளர் பாதுகாப்பு : நோயாளிப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை" என்பதாகும்.



## சர்வதேச சம ஊதிய தினம் – செப்டம்பர் 18

- இந்தத் தினமானது சம வேலைக்கு சம ஊதியத்தை அடைவதற்கான நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது நவம்பர் 18 ஆம் தேதியை சர்வதேச சம ஊதிய தினமாக அறிவிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.




## உலக நீர்க் கண்காணிப்புத் தினம் – செப்டம்பர் 18

- இத்தினமானது அமெரிக்காவின் தூய்மை நீர் அமைப்பினால் 2003 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்தத் தினமானது மக்கள் தங்களது உள்ளூர் நீர்நிலையை அடிப்படை நிலையில் சோதனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## உலக மூங்கில் தினம் (WBD – World Bomboo Day) – செப்டம்பர் 18

- இந்தத் தினமானது மூங்கிலின் பயன்பாடுகள் குறித்தும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் பொருட்களில் மூங்கிலின் பயன்பாட்டை ஊக்குவிப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2009 ஆம் ஆண்டில் பாங்காக்கில் நடைபெற்ற 8வது உலக மூங்கில் காங்கிரஸின் போது உலக மூங்கில் அமைப்பினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டது.
- WBD – 2020ன் 11வது பதிப்பிற்கான கருத்துரு, "தற்பொழுது மூங்கில்" என்பதாகும்.




## சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு நாள் - செப்டம்பர் 20

- பல்கலைக்கழகங்களில் விளையாட்டின் முக்கியத்துவத்தையும், குடிமக்களின் சேவையில் தரமான உடல் மற்றும் விளையாட்டுக் கல்வியை ஒருங்கிணைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பொறுப்பான அமைப்பாக சமூகத்தில் பல்கலைக்கழகங்களின் பங்கை உறுதிப்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதைப் பன்னாட்டுப் பல்கலைக்கழக விளையாட்டுக் கூட்டமைப்பு முன்மொழிந்தது மேலும் யுனெஸ்கோவால் அதிகாரப்பூர்வமாக இதற்கு 2015 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப் பட்டது.




## சர்வதேசக் கடற்கரை தூய்மையாக்கல் தினம் – செப்டம்பர் 19

- சர்வதேசக் கடற்கரை தூய்மையாக்கல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் 3வது சனிக்கிழமையன்று நிகழ்கின்றது.
- இது உலகில் அனுசரிக்கப்படும் மிகப்பெரிய ஒற்றை நாள் தன்னார்வ நிகழ்வுகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- இது 1986 ஆம் ஆண்டில் லிண்டா மாரானிஸ் என்பவர் கடல் பாதுகாப்பிற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கத்தே ஓ ஹாரா என்பவரைச் சந்தித்த போது தொடங்கப் பட்டது.
- ஓ ஹாரா "கடலில் நெகிழிகள் : கழிவுப் பிரச்சினையை விட அதிகமானது" என்ற ஒரு அறிக்கையை சமீபத்தில் முடித்து வெளியிட்டுள்ளார்.
- இந்த இருவரும் மற்ற கடல் அறிஞர்களுடன் இணைந்து கடல் பாதுகாப்பிற்கான தூய்மையாக்கல் பணியை ஒருங்கிணைத்துள்ளனர்.

## சர்வதேச அமைதி தினம் – செப்டம்பர் 21


- ஐக்கிய நாடுகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இத்தினமானது 1981 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இத்தினத்தன்று, உலக அமைப்பானது "24 மணி நேர வன்முறையற்ற தினத்தை" கடைபிடிப்பதன் மூலம் இத்தினத்தை உலக நாடுகள் அனுசரிக்க ஊக்குவிக்கின்றது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அமைதியை ஒருங்கிணைந்து ஏற்படுத்துதல்" (Shaping Peace Together) என்பதாகும்.




## உலக அல்சைமர் (மறதி நோய்) நோய் தினம், செப்டம்பர் – 21

- இந்தத் தினமானது நரம்பியல் நிலை, அதன் தாக்கங்கள், அறிகுறிகள் மற்றும் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- அல்சைமர் நோய் என்பது நினைவாற்றல், சிந்திக்கும் திறன் மற்றும் நடத்தை ஆகிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் நரம்பியல் பிரச்சினையாகும்.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "டிமென்ஷியா குறித்துப் பேசுதல்" என்பதாகும்.
- இது 9வது உலக அல்சைமர் நோய் தினமாகும்.
- இது 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.




## சுழிய உமிழ்வுகள் தினம் – செப்டம்பர் 21

- இந்தத் தினமானது உலகமானது புதைபடிவ எரிபொருட்களுக்கு விடை கொடுக்கவும் கார்பன் உமிழ்வுகளினால் ஏற்படும் தீங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தத் தினமானது 2008 ஆம் ஆண்டில் கனடாவின் நோவா ஸ்கோட்டியாவில் தொடங்கப் பட்டுள்ளது.




## உலக ரோஜா தினம் – செப்டம்பர் 22

- ❖ உலக ரோஜா தினமானது 12 வயது நிரம்பிய மெலிண்டா ரோஸின் நினைவாக அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ கனடா நாட்டுப் பெண்மணிக்கு அரிய வகை இரத்தப் புற்று நோயான அஸ்கின் கட்டியானது ஏற்பட்டது.
- ❖ இந்தத் தினமானது அவருக்காகவும் இந்தத் தினத்தை எதிர்த்துப் போராடும் அவரைப் போன்ற பிற நோயாளிகளுக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தத் தினமானது புற்று நோய்களின் பல்வேறு வகைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், ஆரம்பத்திலேயே கண்டறிதல் என்பது எவ்வாறு அவற்றை குணப்படுத்தும் என்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான உலகப் புற்று நோய் தினத்தின் கருத்துரு, "வரலாறு மற்றும் முக்கியக் குறிப்புகள்" என்பதாகும்.




## உலக மகிழுந்துப் பயன்பாடற்ற தினம் – செப்டம்பர் 22

- ❖ சுற்றுச்சூழல் போக்குவரத்துக் கூட்டமைப்பானது, பசுமைப் போக்குவரத்து வாரத்தின் (ஜூன் 17) முதலாவது செவ்வாயன்று வருடாந்திர மகிழுந்துப் பயன்பாடற்ற தினத்தை அனுசரித்தது.
- ❖ பின்னர் இது 2000 ஆம் ஆண்டில் ஐரோப்பா முழுவதுமான முன்னெடுப்பாக ஐரோப்பிய ஆணையத்தினால் ஏற்படுத்தப் பட்டது.
- ❖ இந்தத் தினமானது உலகம் முழுவதும் உள்ள குடிமக்கள் மகிழுந்து பயன்படுத்தாமல் இருப்பதை ஊக்குவிக்கின்றது.

## சர்வதேச சிவப்புப் பாண்டாக் கரடி தினம் – செப்டம்பர் 19

- இது சிவப்புப் பாண்டாக் கரடிகளின் பாதுகாப்பு விவகாரங்களுக்கு உதவுவதற்காகவும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது 2010 ஆம் ஆண்டில் சிவப்புப் பாண்டா அமைப்பினால் தொடங்கப் பட்டது.
- முதலாவது சர்வதேச சிவப்புப் பாண்டாக் கரடி தினமானது 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 அன்று அனுசரிக்கப்பட்டது.
- சிவப்புப் பாண்டாவின் 2 தனித்துவ இனங்கள் பின்வருமாறு
    - அய்லுரஸ் புல்ஜென்ஸ் – பொதுவாக இமயமலை சிவப்புப் பாண்டா எனப்படும்.
    - அய்லுரஸ் புல்ஜென்ஸ் ஸ்தியானி – பொதுவாக சீன சிவப்புப் பாண்டா எனப்படும்.




## காண்டாமிருக தினம் – செப்டம்பர் 22

- இது கடந்த 10 ஆண்டுகளாக வேட்டையாடுபவர்களின் இலக்காக உள்ள காண்டாமிருகங்களைப் பாதுகாப்பது குறித்துப் பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- அசாமில் காணப்படும் இந்திய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் வாழ்விடமாக இந்தியாவானது திகழ்கின்றது. இது நேபாளம் மற்றும் பூடானிலும் காணப் படுகின்றது.
- இது இமயமலை மலையடிவாரத்தில் உள்ள காடுகள் மற்றும் உயர் புல்வெளிகளில் காணப்படுகின்றது.
- இந்திய ஒன்றைக் கொம்பு காண்டாமிருகத்தைத் தவிர, அதன் 4 இதர இனங்களும் புகழ் பெற்றவையாக உள்ளன.
- 5 காண்டாமிருகங்களின் ஐயூசிஎன் பாதுகாப்பு நிலை.

| காண்டமிருகம் | பாதுகாப்பு நிலை |
|---|---|
| **ஜாவன் காண்டாமிருகம்** | மிகவும் அருகி வரும் இனம் |
| **சுமத்ரா காண்டாமிருகம்** | மிகவும் அருகி வரும் இனம் |
| **கறுப்பு காண்டாமிருகம்** | மிகவும் அருகி வரும் இனம் |
| **வெள்ளை காண்டாமிருகம்** | அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை |
| **ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் (இந்தியக் காண்டாமிருகம் )** | பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை |




## சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23

- இந்தத் தினமானது உலகக் காது கேளாதோர் கூட்டமைப்பு (World Federation of the Deaf) உருவாக்கப்பட்டதைக் குறிக்கின்றது.
- உலகக் காது கேளாதோர் கூட்டமைப்பானது சர்வதேச சைகை மொழிகள் தின அனுசரிப்பு என்ற கருத்தாக்கத்தைக் கொண்டு வந்தது.
- முதலாவது சர்வதேச சைகை மொழிகள் தினமானது சர்வதேச காது கேளாதோர் வாரத்துடன் இணைந்து 2018 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த வாரமானது முதன்முதலில் 1958 ஆம் ஆண்டில் உலகக் காது கேளாதோர் கூட்டமைப்பினால் அனுசரிக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "எல்லோருக்கும் சைகை மொழிகள்" என்பதாகும்.




## உலகக் கடல்சார் போக்குவரத்து தினம் – செப்டம்பர் 24

- இது கப்பல் போக்குவரத்துப் பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, கடல்சார் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- முதன்முதலில் இத்தினமானது 1958 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த ஐஎம்ஓ (IMO) ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட தேதியைக் குறிப்பதற்காக 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அனுசரிக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு நீடித்த கிரகத்திற்காக நீடித்த கப்பல் போக்குவரத்து" என்பதாகும்.
- இந்தியாவில் தேசியக் கடல்சார் போக்குவரத்து தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 05 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டில் இந்தியாவானது தேசியக் கடல்சார் போக்குவரத்து தினத்தின் 57வது பதிப்பைக் கொண்டாடியது.




## நாட்டு நலப் பனித் திட்ட தினம் – செப்டம்பர் 24

- நாட்டு நலப் பணித் திட்டம் (NSS - National Service Scheme) என்பது மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பொது சேவைத் திட்டமாகும்.
- இது சமுதாயச் சேவை வழங்குதலில் இளம் மாணவர்களுக்கு தனது அனுபவங்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாட்டு நலப் பணித் திட்டமானது மகாத்மா காந்தியின் நூற்றாண்டு நினைவு தினத்தன்று, 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- NSS என்பது இந்திய அரசின் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் ஒரு மத்தியத் துணைத் திட்டமாகும்.




## உலக மருந்து தயாரிப்பாளர் தினம் - செப்டம்பர் 25

- ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மருந்து தயாரிப்போரின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- இந்த நாள் 2009 ஆம் ஆண்டில் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலக மருந்தியல் மற்றும் மருந்து அறிவியல் மாநாட்டில் சர்வதேச மருந்து கூட்டமைப்புக் குழுவால் உருவாக்கப் பட்டது.

- 2020 ஆம் ஆண்டிற்கான உலக மருந்து தயாரிப்பாளர் தினத்தின் கருப்பொருள் "உலக ஆரோக்கியத்தை உருமாற்றுதல்" என்பதாகும்.




## அணு ஆயுதங்களை முற்றிலுமாக அகற்றுவதற்கான பன்னாட்டு நாள் - செப்டம்பர் 26

- அணு ஆயுதங்களால் மனிதகுலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்த பொதுவான விழிப்புணர்வை அதிகரிக்க இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் இந்நாளை அறிவித்தது,
- இது 2014 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் உள்ள ஐ.சி.ஏ.என் (ICAN - International Campaign to Abolish Nuclear Weapons) பிரச்சாரகர்களால் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.
- ஐ.சி.ஏ.என் என்பது அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான ஒரு பன்னாட்டுப் பிரச்சாரம் ஆகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றது.




## உலக கருத்தடை நாள் - செப்டம்பர் 26

- கருத்தடை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான ஒரு வருடாந்திர உலகளாவியப் பிரச்சாரம் இதுவாகும்.
- இந்தப் பிரச்சாரம் ஒரு பெண் மற்றும் அவரது இணை ஆகிய இருவருக்கும் கிடைக்கக் கூடிய பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவர்களின் கர்ப்பகால ஆரோக்கியம் குறித்த தகவல்களை அறிந்து அவர்கள் முடிவு எடுக்கவும் உதவுகிறது.


- கருத்தடை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி உலகக் கருத்தடை தினமானது முதன்முதலில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று பத்து பன்னாட்டுக் குடும்பக் கட்டுப்பாடு அமைப்புகளால் அனுசரிக்கப்பட்டது.

## சி.எஸ்.ஐ.ஆர் நிறுவப்பட்ட நாள் - செப்டம்பர் 26

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுவானது (சி.எஸ்.ஐ.ஆர்) 1942 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.
- சி.எஸ்.ஐ.ஆர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் நிதியளிக்கப் படுகிறது.
- மேலும் இது 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் மூலம் ஒரு தன்னாட்சி அமைப்பாக செயல்படுகிறது.
- இது 38 தேசிய ஆய்வகங்கள், 39 தொடர்பு மையங்கள், 3 புத்தாக்க வளாகங்கள் மற்றும் 5 அலகுகளைக் கொண்ட ஒரு வளர்ந்து வரும் அமைப்பாக உள்ளது.

## உலகச் சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26

- உலகச் சுற்றுச்சூழல் சுகாதார நாளைப் பன்னாட்டுச் சுற்றுச்சூழல் சுகாதார கூட்டமைப்புக் குழு ((International Federation of Environmental Health) அறிமுகப்படுத்தியது.
- இதன் அனுசரிப்பானது இந்தோனேசியாவில் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் "சுற்றுச்சூழல் ஆரோக்கியம் என்பது உலகளாவிய தொற்றுநோயைத் தடுப்பதற்கான ஒரு முக்கிய பொது சுகாதார தலையீடு" என்பதாகும்.




## உலக சுற்றுலா தினம் – செப்டம்பர் 27

- இந்தத் தினமானது சர்வதேச சமூகத்தினரிடையே சமூக, அரசியல், கலாச்சார மற்றும் பொருளாதார விழுமியங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமாது 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட உலக சுற்றுலா அமைப்பின் பிரகடனத்தைக் குறிக்கின்றது.
- சுற்றுலாவானது நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் 8, 12, 14 போன்றவற்றுக்கு முக்கியமான பங்களிப்பாளராக உள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சுற்றுலா மற்றும் ஊரக மேம்பாடு" என்பதாகும்.





## உலக நதிகள் தினம் – செப்டம்பர் 27

- உலக நதிகள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிறன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இது உலகம் முழுவதும் உள்ள அனைத்து நீர்வழிகள் மற்றும் நதிகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ஐக்கிய நாடுகள் 2005 ஆம் ஆண்டில் "பத்தாண்டு வாழ்க்கைக்கான நீர்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- முதலாவது உலக நீர் தினமானது 2005 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## உலக வெறிநாய்க்கடி நோய் தினம் – செப்டம்பர் 28


- இது வைரஸ் நோயான வெறிநாய்க்கடி நோய் குறித்தும் அதனைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதலாவது வெறிநாய்க்கடி நோய் மருந்தை மேம்படுத்தியவரான லூயிஸ் பாஸ்டியர் என்பவரது இறந்த தின நினைவைக் குறிக்கின்றது.



- இது அமெரிக்காவில் உள்ள உலகளாவியக் கூட்டிணைவு உலக வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பினால் அனுசரிக்கப்படுகின்றது.
- முதலாவது உலக வெறி நாய்க்கடி நோய் தினப் பிரச்சாரமானது 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அனுசரிக்கப்பட்டது.

## உலகளாவிய அளவிலான தகவல் அணுகலுக்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 28

- இந்த ஆண்டு இத்தினமானது நெருக்கடிக் காலங்களில் தகவல் பெறும் உரிமையின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இது 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் அறிவிக்கப்பட்டது.
- யுனெஸ்கோ 2002 ஆம் ஆண்டு முதல் இதனை வேறு ஒரு பெயரில் ஏற்றுக் கொள்ளும் வரை இந்தத் தினமானது சர்வதேச தகவல் அறியும் உரிமை தினமாக அனுசரிக்கப் பட்டது.




## உணவு இழப்பு மற்றும் வீண் செய்தல் குறித்த விழிப்புணர்வின் சர்வதேச தினம் – செப்டம்பர் 29

- இந்த வருடமே இந்த சர்வதேச தினத்தின் முதன்முறையான அனுசரிப்பு ஆகும்.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது செப்டம்பர் 29 தினத்தை உணவு இழப்பு மற்றும் வீண் செய்தல் குறித்த விழிப்புணர்வின் சர்வதேச தினமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் ஊட்டச்சத்து அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் ஆகியவை இத்தின அனுசரிப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.



## உலக இதய தினம் – செப்டம்பர் 29

- ❖ இது இதய நோய் குறித்தும் அதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது உலக இதயக் கூட்டமைப்பினால் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ முதலாவது உலக இதய தினமானது 2000 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டின் கருத்துரு, “துடிப்பின் பயன்” என்பதாகும்.




## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் – செப்டம்பர் 30


- ❖ இது மொழிபெயர்ப்பு தொழில்முறை குறித்தும் மொழிபெயர்ப்பு வல்லுநர்களின் பணிக்கு மரியாதை செலுத்துவது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது நமது மாறி வரும் உலகில் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் பரஸ்பர மரியாதையை ஊக்குவிப்பதற்கு உதவுகின்றது.
- ❖ செப்டம்பர் 30 ஆனது விவிலிய மொழிபெயர்ப்பாளரான செயிண்ட் ஜெரோமை அனுசரிக்கின்றது. இவர் மொழி பெயர்ப்பாளர்களின் புரவலர் என்று அறியப் படுகின்றார்.
- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “நெருக்கடிக் காலத்தில் உலகிற்கான சொற்களைக் கண்டுபிடித்தல்” என்பதாகும்.

## இறை நிந்தனை தினம் – செப்டம்பர் 30

- ❖ இது இறை நிந்தனைச் சட்டங்கள், பேச்சுரிமை அதிலும் குறிப்பாக பல்வேறு நாடுகளில் குற்றமாகக் கருதப்படும் மதம் சார்ந்த திறந்தவெளி விமர்சனத்தைப் பாதுகாத்தல் குறித்து தனி நபர்கள் மற்றும் குழுக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தத் தினமானது உலகளாவிய அனுசரிப்பாக 2009 ஆம் ஆண்டில் விசாரணை மையத்தினால் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ❖ இறை நிந்தனை என்பது இறைவனையோ, புனிதப் பொருட்களையோ, புனிதம் என்று கருதப்படும் எந்தவொரு பொருளையோ அவமதிக்கும் அல்லது மரியாதைக் குறைவாக கருதும் ஒரு செயலாகும்.

# இதரச் செய்திகள்

## பள்ளிக் குழந்தைகள் மீதான யுனிசெப் அறிக்கை




- ❖ யுனிசெப் அமைப்பானது "கோவிட் – 19 : பள்ளிகள் மூடப்பட்ட போது குழந்தைகள் கற்கும் திறனைத் தொடர்ந்து மேற்கொள்பவர்களாக உள்ளனரா?" என்ற தலைப்பு கொண்ட ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, உலகில் உள்ள பள்ளிக் குழந்தைகளில் (463 மில்லியன் குழந்தைகள் உலக அளவில்) குறைந்தது மூன்றில் 1 பகுதியினர் கொரானா காலத்தில் தங்களது பள்ளிகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் தொலைதூரக் கல்வி கற்றலை அணுக முடியாதவர்களாக உள்ளனர்.
- ❖ உலக அளவில் தொலைதூரக் கல்வி கற்றல் வாய்ப்புகளைப் பெறாத 4 மாணவர்களில் 3 மாணவர்கள் ஊரகப் பகுதிகள்/ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.
- ❖ ஏறத்தாழ அனைத்து நாடுகளும் டிஜிட்டல் மற்றும் ஒளிபரப்பு தொலைதூரக் கல்வி கற்றல் கொள்கைகளைச் செயல்படுத்தியுள்ளன. ஆனால் அவற்றில் 60% மட்டுமே தொடக்கக் கல்விக்கு முந்தைய நிலையில் அவற்றைச் செயல்படுத்தியுள்ளன.
- ❖ இந்த அறிக்கையானது பிராந்தியங்களுக்கிடையே உள்ள சமத்துவமின்மையை எடுத்துக் காட்டுகின்றது.
- ❖ ஆப்பிரிக்காவின் துணை சகாராப் பகுதிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகள் மிகவும் பாதிக்கப் பட்டவர்களாக உள்ளனர். அதில் பாதியளவு மாணவர்கள் தொலைதூரக் கல்வி கற்றலை எட்ட முடியாத நிலையில் உள்ளனர்.


## உலகளாவிய முதல் 20 பால் நிறுவனம் – ரபோபாங்கின் வருடாந்திரப் பட்டியல்

- ❖ உலகளாவிய முதல் 20 பால் நிறுவனங்கள் என்ற ரபோபாங்கின் வருடாந்திரப் பட்டியலில் நுழைந்த முதலாவது இந்தியப் பால் நிறுவனம் குஜராத் கூட்டுறவு பால் சந்தைக் கூட்டமைப்பான அமுல் நிறுவனம் ஆகும்.
- ❖ இதில் அமுல் 16வது இடத்திலும் சுவிட்சர்லாந்தில் நெஸ்லே முதலிடத்திலும் பிரான்சின் லக்டாலிஸ் 2வது இடத்திலும் உள்ளன.

- அமுல் ஆனது குஜராத்தின் ஆனந்த்தில் உள்ளது.
- இதன் இலட்சினை விளக்கம் "இந்தியாவின் சுவை" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் படி, உலகளாவியப் பால் உற்பத்தியில் 22% கொண்ட உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.

## உலகளாவிய புத்தாக்கக் குறியீடு

- 2020 ஆம் ஆண்டின் உலகளாவிய புத்தாக்கக் குறியீடானது உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு, கார்னெல் பல்கலைக்கழகம் மற்றும் INSEAD வணிகப் பள்ளி ஆகியவற்றினால் கூட்டாக வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தப் புத்தாக்கத் தரவரிசையில் சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன.
- இந்தியா 48வது இடத்தைப் பிடித்து முதன்முறையாக முதல் 50 நாடுகளைக் கொண்ட குழுவில் இணைந்துள்ளது.
- மேலும் இது உலகில் குறைந்த நடுத்தர-வருமானம் கொண்ட பொருளாதார நாடுகள் பிரிவில் மூன்றாவது சிறந்தப் புத்தாக்க நாடாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவானது தகவல் தொழில்நுட்பத் துறை சேவைகள் ஏற்றுமதி, அரசின் நிகழ்நேரச் சேவைகள், அறிவியல் மற்றும் பொறியியல் பட்டதாரிகள், தீவிர ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கொண்ட உலகளாவிய நிறுவனங்கள் போன்ற 15 குறிகாட்டிகளில் முதலிடத்தில் உள்ளது.




## ரெனாட்டி சோழர் காலத்துக் கல்வெட்டு

- ரெனாட்டி சோழர் காலத்தைச் சேர்ந்த ஓர் அரிய வகைக் கல்வெட்டு ஆந்திராவின் கடப்பா மாவட்டத்தின் ஒரு கிராமத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டானது ஒரு உடைந்த தூணின் பகுதியாக டாலமைட் பலகை மற்றும் ஷேல் பாறை (களிமண் பாறை போன்றது) ஆகியவற்றில் பொறிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு பழமையான தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது.

- இது கி.பி 8 ஆம் நூற்றாண்டில் இப்பிராந்தியத்தினை ஆண்ட ரெனாட்டி சோழ மகாராஜாவின் ஆட்சிக்கு உட்பட்டது.
- ஆறு மார்ட்டஸ் (ஓர் அளவீட்டு அலகு) நிலத்தை ஒரு பிராமண பூசாரிக்குப் பரிசாக அளித்ததை இந்தக் கல்வெட்டு வெளிக்காட்டுகிறது.
- இதிலுள்ள சில வரிகள் அந்த நாட்களில் ஒழுக்கத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமையைக் குறிக்கின்றன.

### *ரெனாட்டி சோழர்*

- ரெனாட்டின் தெலுங்கு சோழர்கள் (ரெனாட்டிச் சோழர்கள் என்றும் அழைக்கப் படுகிறார்கள்) ரெனாட்டுப் பிராந்தியத்தை (இன்றைய கடப்பா மாவட்டம்) ஆட்சி செய்தனர்.
- இந்தக் குடும்பத்தின் மூத்த மன்னர் நந்திவர்மன் ஆவார் (கி.பி 500).
- இந்த மன்னர்கள் தாங்கள் கரிகால சோழர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டனர்.
- சமஸ்கிருதத்திற்குப் பதிலாக நிர்வாகத்திலும் கல்வெட்டுகளிலும் தெலுங்கைப் பயன்படுத்திய முதல் ஆட்சி இவர்களது ஆட்சி என்று கூறப்படுகிறது.



## உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2021

INDIAN INSTITUTES IN THE'S
WORLD UNIVERSITY RANKINGS 2021


| Institute | 2020 | 2021 |
|---|---|---|
| IISc | 301-350 | 301-350 |
| IIT Ropar | 301-350 | 351-400 |
| IIT Indore | 351-400 | 401-500 |
| Banaras Hindu University | 601-800 | 601-800 |
| ICT, Mumbai | 501-600 | 601-800 |

- டைம்ஸ் உயர் கல்வி நிறுவனமானது உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை, 2021 என்பதின் முடிவுகளை அறிவித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டுத் தரவரிசையில், இந்தியாவானது 2021 ஆம் ஆண்டின் டைம்ஸ் உயர் கல்வி உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் தகுதி பெறுவதற்கு அதிக எண்ணிக்கையிலான பல்கலைக் கழகங்களைப் பதிவு செய்துள்ளது.
- எனினும், இதில் எந்தவொரு இந்தியப் பல்கலைக்கழகமும் முதல் 300 இடங்களுக்குள் இடம் பெறவில்லை.

- ஏறத்தாழ இந்தியாவிலிருந்து 63 பல்கலைக்கழகங்கள் இந்தத் தரவரிசைக்குத் தகுதி பெற்றுள்ளன.
- பெங்களுருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் ஒட்டுமொத்த உலகத் தரவரிசையில் 301-350 என்ற பிரிவில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- ஐஐடி-ரோப்பர் மற்றும் ஐஐடி-இந்தூர் ஆகியவை இந்தத் தரவரிசையில் முதல் 500 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன.
- பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் விஐடி பல்கலைக்கழகம் ஆகியவை 801-1000 பிரிவுகளில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டுத் தரவரிசையுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் மேலும் 14 பல்கலைக்கழகங்கள் தரவரிசைக்குத் தகுதி பெற்றுள்ளன.
- தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் எந்தவொரு நாட்டினாலும் அடைய முடியாத உயர்வு இதுவாகும்.
- இதில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் முதலிடத்திலும் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம், ஹார்வர்டு பல்கலைக்கழகம், கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- அமெரிக்காவானது முதல் 200 இடங்களில் 59 கல்வி நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளது.
- இதற்கு அடுத்து ஐக்கிய இராஜ்ஜியம் 29 கல்வி நிறுவனங்களையும் ஜெர்மனி 21 கல்வி நிறுவனங்களையும் பதிவு செய்துள்ளன.
- சீனாவின் ஷின்ஹா பல்கலைக்கழகமானது முதல் 20 இடத்தில் இடம் பெற்ற முதலாவது ஆசியப் பல்கலைக்கழகமாகும்.

## உணவு முறைகளுக்காக வேண்டி தேசிய அளவிலான நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDC) மேம்படுத்துதல் அறிக்கை

- இது உலகளாவிய நிதியம் (WWF - World Wide Fund), ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP - United Nations Environment Programme), மற்றும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான EAT & think tank Climate Focus ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.



- இது உணவு முறைத் தீர்வுகள் மற்றும் மிக அதிக முதன்மையான இலக்குகளை கொள்கை வகுப்பாளர்கள் நிர்ணயிப்பதையும் பசுமை இல்ல வாயுக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் அதன்மூலம் உயிரிப் பன்முகத்தன்மை, உணவுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உணவு முறையின் உற்பத்தி, செயல்பாடு, பகிர்தல், தயார் நிலை மற்றும் உணவின் நுகர்வு ஆகியவை 37% என்ற அளவில் பசுமை இல்ல வாயு உமிழ்வு நிகழ்விற்குப் பொறுப்பாக உள்ளது.
- 2015 ஆம் ஆண்டு பாரீஸ் ஒப்பந்தத்தின் படி, நாடுகள் அவர்களது NDCக்களை (Nationally Determined Contribution) ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## பார்வைக் கண்ணோட்டத்திலிருந்து நடவடிக்கைகள் : கோவிட் – 19 தொற்றின் மத்தியில் பாலின சமநிலை குறித்த அறிக்கை

- இது ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (UNDP – United Nations Development Programme) ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப் பட்டுள்ளது.
- இது கோவிட்-19 ஆனது பெண்கள் மீது எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் பெண்களின் வறுமை விகிதத்தை உயர்த்தி இருப்பதாகவும் வறுமையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான இடைவெளியை அதிகரித்திருப்பதாகவும் கூறியுள்ளது.
- தெற்கு ஆசியாவில் நோய்த் தொற்றிற்கு முந்தைய பெண்ணிய வறுமையானது 2021 ஆம் ஆண்டில் 10% என்று கணிக்கப் பட்டது. இது தற்பொழுது 13% ஆகக் கணிக்கப் பட்டுள்ளது.
- இந்த நோய்த் தொற்றானது இந்தப் பத்தாண்டின் முடிவில் வறுமையை ஒழிப்பதற்கானச் செயல்பாடுகளை தலைகீழாக மாற்றியுள்ளது. இது 2021 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 96 மில்லியன் மக்களை வறுமைக்குள் தள்ளவுள்ளது. இதில் 47 மில்லியன் மக்கள் பெண்கள் மற்றும் சிறுமியர் ஆவர்.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பானது 2020 ஆம் ஆண்டு ஜீன் மாதம் வாக்கில், கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக ஏறத்தாழ 72% வீட்டுத் தெழிலாளர்கள் வேலை இழப்பார்கள் என்று கணித்துள்ளது.


## 2017 – 18 ஆம் ஆண்டிற்கான NSO ஆய்வு

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது (NSO - National Statistical Office) தேசிய மாதிரி ஆய்வின் 75வது சுற்றின் ஒரு பகுதியாக "குடும்ப சமூக நுகர்வு : இந்தியாவில் கல்வி" என்பது குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்வானது 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையிலான காலகட்டத்தில் கல்வியறிவின் மாநில வாரியான தகவல்களை அளிக்கின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- கேரள மாநிலமானது நாட்டில் உயரிய கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது.
- ஏறத்தாழ 96.2% அளவிலான அம்மாநில மக்கள் கல்வியறிவு கொண்டவர்களாக உள்ளனர்.

- ❖ தில்லியானது 88.7% என்ற அளவுடன் 2வது சிறந்த கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து உத்தரகாண்ட் 87.6% கல்வியறிவு விகிதத்தையும் இமாச்சலப் பிரதேசம் 86.6% கல்வியறிவு விகிதத்தையும் அசாம் 85.9% கல்வியறிவு விகிதத்தையும் கொண்டுள்ளன.
- ❖ இதில் ஆந்திரப் பிரதேச மாநிலமானது 66.4% என்ற அளவில் கடைசி இடத்திலும் பீகார் 70.9% என்ற அளவில் அதற்கு முந்தைய இடத்திலும் தெலுங்கானா 72.8% என்ற அளவில் அதற்கு முந்தைய இடத்திலும் உள்ளன.
- ❖ இந்தியாவில் உள்ள மக்களின் ஒட்டு மொத்தக் கல்வியறிவு விகிதம் 77.7% ஆகும்.
- ❖ ஊரகப் பகுதியில் கல்வியறிவு விகிதமானது 73.5% ஆக உள்ளது.
- ❖ நகர்ப்புறப் பகுதியில் கல்வியறிவு விகிதமானது 87.7% ஆக உள்ளது.
- ❖ அனைத்து மாநிலங்களிலும் ஆண்களின் கல்வியறிவு விகிதமானது பெண்களின் கல்வியறிவு விகிதங்களை விட அதிகமாக உள்ளது.
- ❖ இராஜஸ்தானில் ஆண்களின் கல்வியறிவு விகிதமானது 80.8% ஆகவும் பெண்களின் கல்வியறிவு விகிதமானது 57.6% ஆகவும் உள்ளது.




## குழந்தை இறப்பு நிலைகள் மற்றும் போக்குகள் அறிக்கை 2020

- ❖ ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் புதிய அறிக்கையின் படி, இந்தியாவில் 1990 ஆம் ஆண்டில் 126 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதமானது 2019 ஆம் ஆண்டில் 34 ஆக குறைந்துள்ளது.
- ❖ 1990-2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஐந்து வயதுக்குட்பட்டோர் வருடாந்திர இறப்பு விகிதத்தில் இந்தியாவானது 4.5 சதவீதத்தைக் குறைத்துள்ளது.
- ❖ நைஜீரியாவுடன் இணைந்து இந்தியாவானது 2019 ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்புகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கைக் கொண்டிருந்தன.
- ❖ இந்தியாவில் 1990 ஆம் ஆண்டில் 89 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதமானது 2019 ஆம் ஆண்டில் 28 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதமும் 1990 முதல் 2019 வரையிலான ஆண்டுகளுக்கிடையில் 57 என்ற எண்ணிக்கையில் இருந்து 22 ஆகக் குறைந்துள்ளது.


### *மற்ற நாடுகளில்*

- ❖ உலகளவில் 1990 ஆண்டில் 12.5 மில்லியனாக இருந்த ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்புகள் எண்ணிக்கையானது 2019 ஆண்டில் மிகக் குறைந்த அளவாக, 5.2 மில்லியனாக பதிவாகியுள்ளது.

- மத்திய மற்றும் தெற்கு ஆசியா, ஓசியானியா (நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவைத் தவிர) ஆகிய பகுதிகள் 2000-2009 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2010-2019 ஆண்டுகளில் ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்பு விகிதத்தில் வேகமான சரிவைக் கண்டுள்ளன.
- இந்த அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்புகளில் சுமார் 53% ஆப்பிரிக்காவில் துணை-சஹாராப் பிராந்தியத்தில் நிகழ்ந்தவையாகும்.
- 2019 ஆம் ஆண்டில் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் ஐந்து வயதை எட்டுவதற்கு முன்பு சுமார் 1.5 மில்லியன் குழந்தைகள் இறந்துள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டில், ஐந்து வயதுக்குட்பட்டோர் இறப்புகளில் 49 சதவீதமானது வெறும் ஐந்து நாடுகளில் நிகழ்ந்துள்ளது. அவை: இந்தியா, நைஜீரியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் எத்தியோப்பியா ஆகியனவாகும்.

## டிஜிட்டல் பிளவு பற்றிய NSOவின் அறிக்கை

- தேசியப் புள்ளி விவரங்கள் நிறுவனமானது (NSO - National Statistical Organisation) சமீபத்தில் 'வீட்டுச் சமூக நுகர்வு' குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இது 2017-2018 ஆம் ஆண்டிற்கு இடையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் 75வது சுற்று ஆகும்.
- இது மாநிலங்கள், நகரங்கள் மற்றும் கிராமங்கள் மற்றும் வருமானக் குழுக்கள் முழுவதும் டிஜிட்டல் பிளவானது எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது.




### *சிறப்பம்சங்கள்*


- 70%க்கும் மேற்பட்ட வீடுகளை உள்ளடக்கி இமாச்சலப் பிரதேசமானது அதிக அளவிலான இணைய ஊடுருவலை (Internet penetration) பெற்றுள்ளது.
- டெல்லியானது 55% குடும்பங்களை உள்ளடக்கி அதிக இணைய அணுகலைப் பெற்றுள்ளது.
- கர்நாடகா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் 20%க்கும் குறைவான இணைய ஊடுருவலே உள்ளது.
- நாடு முழுவதும் பத்தில் ஒரு வீடு கணினி அணுகலைக் கொண்டுள்ளது.
- எல்லா வீடுகளிலும் நான்கில் ஒருவரிடம் இணைய இணைப்பு உள்ளது.
- நகரங்களில் 42% என்ற அளவில் இணையம் இணைக்கப்பட்ட வீடுகள் உள்ளன. அதே சமயம் இந்தியாவில் கிராமப்புறங்களில் 15% வீடுகளில் இணைய இணைப்பு உள்ளது.
- 5 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்களில் 20% பேர் அடிப்படை டிஜிட்டல் அறிவைக் கொண்டுள்ளனர்.

## 2023 ஆம் ஆண்டிற்கான இறங்குமுகக் கணிப்பு : உலகளாவிய மாறுபக்க கொழுப்புப் பொருள் ஒழிப்பு – 2020 மீதான உலக சுகாதார நிறுவன அறிக்கை

- 58 நாடுகள் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருளிலிருந்து 3.2 பில்லியன் மக்களைப் பாதுகாப்பதற்கானச் சட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆனால் இன்னும் 100ற்கும் மேற்பட்ட நாடுகள் தங்களது உணவு விநியோகத்திலிருந்து இந்தத் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- 15 நாடுகள் மாறுபக்க கொழுப்பை உட்கொள்வதின் காரணமாக உலகளாவிய இறப்பில் மூன்றில் இரண்டு மடங்கிற்குக் காரணமாக உள்ளன.
- இந்த 15 நாடுகளில், கனடா, லாட்வியா, ஸ்லோவேனியா மற்றும் அமெரிக்கா ஆகியவை 2017 ஆண்டு முதல் WHO (World Health Organisation) பரிந்துரைத்த சிறந்த நடைமுறைக் கொள்கைகளைச் செயல்படுத்தியுள்ளன.
- மீதமுள்ள 11 நாடுகளான அசர்பைஜான், வங்க தேசம், பூடான், ஈகுவேடர், எகிப்து, இந்தியா, ஈரான், மெக்சிகோ, நேபாளம், பாகிஸ்தான், கொரியக் குடியரசு ஆகியவை விரைவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### *இந்தியாவின் நடவடிக்கை*

- 2011 ஆம் ஆண்டில் இந்தியாவானது எண்ணெய் மற்றும் கொழுப்பில் 10% என்ற அளவிற்கு TFA (Trans fatty acids) வரம்பை நிர்ணயித்தது. மேலும் இது 2015 ஆண்டில் 5% ஆகக் குறைக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI - Food Safety and Standards Authority of India) இந்த வரம்பை 2% ஆகக் குறைத்தது. மேலும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மாறுபக்க கொழுப்பை உலகளாவிய இலக்கிற்கு 1 ஆண்டிற்கு முன்னதாகவே, அதாவது 2022 ஆம் ஆண்டில் உணவுச் சங்கிலியிலிருந்து ஒழிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், FSSAI ஆனது உலகளாவிய சிறந்த நடைமுறையுடன் இந்தியாவில் ஒழுங்குமுறை ஒன்றிப் பொருந்தும் வகையில் பரிந்துரைத்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் அனைத்து உணவுப் பொருட்களுக்கும் 2% TFA என்ற வரம்பு பொருந்தும் வகையில் பொதுக் கருத்து வரைவு ஒழுங்குமுறையை வெளியிட்டுள்ளது.



## உலகளாவிய பொருளாதார சுதந்திரக் குறியீடு 2020


- இந்தியாவானது கனடாவின் பிரேசர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "உலகளாவிய பொருளாதார சுதந்திரக் குறியீடு – 2020 என்பதற்கான வருடாந்திர அறிக்கையில்" 105வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இது புதுதில்லியில் உள்ள ஒரு கொள்கை வகுக்கும் குழுவான சிவில் சமூக மையத்துடன் இணைந்து இந்தியாவில் வெளியிடப் பட்டுள்ளது.
- இது உலகின் பொருளாதார சுதந்திரக் குறியீட்டின் 24வது பதிப்பாகும்.
- இதில் முன்னிலையில் உள்ள 5 நாடுகள் : ஹாங்காங், சிங்கப்பூர், நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் அமெரிக்கா.
- இதில் கீழ் நிலையில் உள்ள 5 நாடுகள் : ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, ஜிம்பாவே, அல்ஜீரியா.

## வாழும் கோள் அறிக்கை 2020

- இது உலக வனவிலங்கு நிதியம் (WWF - World Wildlife Fund) மற்றும் இலண்டனின் விலங்கியல் சமூகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 1970 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் உலக வனவிலங்கு எண்ணிக்கையில் 68% குறைந்துள்ளதாக இது கண்டுபிடித்து உள்ளது.

### *முக்கிய அம்சங்கள்*

- பூமியின் பனியற்ற நிலப்பரப்பில் 75% நிலப்பரப்பானது ஏற்கெனவே மாற்றம் அடைந்துள்ளது. பெரும்பாலான பெருங்கடல்கள் மாசுபாடு அடைந்துள்ளன.
- இந்தக் காலகட்டத்தின் போது 85%ற்கும் மேற்பட்ட ஈரநிலங்கள் அழிக்கப் பட்டு உள்ளன.
- 'உலக அளவில் நிலப் பயன்பாட்டின் காரணமாக அதிகமான பல்லுயிர்ப் பெருக்க இழப்பானது ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் 57.9% என்ற அளவிலும் வட அமெரிக்காவில் 52.5% என்ற அளவிலும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் 51.2% என்ற அளவிலும் ஆப்பிரிக்காவில் 45.9% என்ற அளவிலும் ஆசியாவில் 43% என்ற அளவிலும் காணப்படுகின்றது.
- மிக அதிக வனவிலங்கு எண்ணிக்கை அழிப்பானது 94% என்ற அளவில் இலத்தீன் அமெரிக்காவில் நிகழ்ந்துள்ளது.



- உலகின் மொத்த நிலப்பரப்பில் 2.4% என்ற அளவுடன் 45,000 உயிரின வகைகளுடன் மிகப்பெரிய பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாடான இந்தியாவானது ஏற்கெனவே 6 தாவர இனங்களை இழந்துள்ளது.
- இந்தியா கடந்த 50 ஆண்டுகளில் 12% வனப்பாலூட்டிகளையும் 19% ஈரிட வாழ்விகளையும் 3% பறவை இனங்களையும் இழந்துள்ளது.
- இந்தியாவில் முதுகெலும்புள்ள உயிரினங்களின் எண்ணிக்கையானது 60% என்ற அளவில் குறைந்து வருகின்றது.

## அறிவியலில் ஒன்றிணைதல் – 2020 ஆம் ஆண்டு அறிக்கை

- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் உலக வானிலை ஆய்வு அமைப்பினால் தொகுக்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு உமிழ்வுகளுக்கான இறுதி அளவானது 2019 ஆம் ஆண்டை விட 4–7% குறைவாக இருக்கும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- 2100 ஆம் ஆண்டுவாக்கில் உயர்ந்து வரும் உலக வெப்பத்தை தொழில் துறை வளர்ச்சிக்கு முந்தைய அளவில் 2° செல்ஷியஸ் என்ற அளவிற்குக் குறைப்பதற்காக பசுமை இல்ல உமிழ்வுகளானது ஒவ்வொரு ஆண்டும் 5% என்ற அளவில் குறைய வேண்டும்.




- 2020 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில், உலக வெப்ப நிலையானது பல்வேறு மாதங்களில் உச்சபட்ச வெப்பநிலையான 1.5° செல்ஷியஸைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- முக்கியமான பசுமை இல்ல வாயுக்களான கார்பன் டை ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு ஆகியவை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் அதிகரித்து வருகின்றன.
- 2019 ஆம் ஆண்டில் மனித நடவடிக்கைகளினால் ஏற்பட்ட $CO_2$ உமிழ்வுகள் மட்டும் 42 பில்லியன் டன்களாகும்.

- ஒட்டு மொத்தமாக, 2020 ஆம் ஆண்டு உமிழ்வுகளானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப் படும் போது 4% - 7% என்ற அளவிற்குக் குறையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- உலக புதைபுடிவ $CO_2$ உமிழ்வுகளானது 2019 ஆம் ஆண்டில் மிக உயரிய அளவாக 36.7 ஜிகா டன்களாக பதிவாகியுள்ளது. இது 1990 ஆம் ஆண்டை விட 62% அதிகமாகும்.
- 2016-2020 என்ற 5 ஆண்டு காலக் கட்டமானது தொழில்துறை வளர்ச்சிக்கு முன்பு இருந்த வெப்பநிலையை விட அதிகமாக, $1.1^{\circ}$ செல்ஷியஸ் என்ற சராசரி உலக வெப்பநிலையுடன் மிக வெப்பமானதாக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக வெப்பநிலையைத் தொழில்துறை வளர்ச்சிக்கு முன்பு இருந்ததை விட $2^{\circ}$ செல்ஷியஸ் என்ற அளவிற்குக் குறைப்பதற்காக வேண்டி 2030 ஆம் ஆண்டில் உமிழ்வுகள் இடைவெளியானது 12-15 $CO_2$ ஜிகா டன்களாக இருக்கப் பட வேண்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

## சூழலியல் அச்சுறுத்தல் பதிவேடு

- இது வருடாந்திர தீவிரவாத மற்றும் அமைதிக் குறியீடுகளை வெளியிடும் ஒரு கொள்கை வகுக்கும் அமைப்பான பொருளாதார மற்றும் அமைதி மையத்தினால் (IEP - Institute for Economics and Peace) தொகுக்கப் பட்டுள்ளது.

### *முக்கிய அம்சங்கள்*

- அடுத்த 30 ஆண்டுகளில், அதாவது 2050 ஆம் ஆண்டுவாக்கில் 141 நாடுகள் குறைந்தது 1 சூழலியல் அச்சுறுத்தலையாவது எதிர்கொள்ளும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக், சாட், இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட அதிக எண்ணிக்கையிலான சூழலியல் அச்சுறுத்தல்களைக் கொண்ட 19 நாடுகள் உலகில் குறைந்த அமைதியுள்ள 40 நாடுகளில் உள்ளடங்கும்.
- ஆப்பிரிக்காவின் துணை சகாராப் பகுதி, தெற்கு ஆசியா, மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா ஆகியவை அதிக எண்ணிக்கையிலான சூழலியல் அச்சுறுத்தல்களை எதிர் கொள்கின்றன.




- 2040 ஆம் ஆண்டுவாக்கில், மொத்தம் 5.4 பில்லியன் மக்கள் (உலகின் கணிக்கப் பட்ட மக்கள் தொகையில் பாதிக்கும் மேல்) அதிக மற்றும் தீவிரமான நீர்ப் பிரச்சினையுள்ள இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட 59 நாடுகளில் வசிக்க உள்ளனர்.

- 3.5 பில்லியன் மக்கள் 2050 ஆம் ஆண்டுவாக்கில் உணவுப் பாதுகாப்பு நிச்சயமற்றத் தன்மையினால் பாதிக்கப்படவுள்ளனர்.
- ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா போன்ற அதிக இடர்களைத் தாங்கும் தன்மையுள்ள பகுதிகள் சூழலியல் அச்சுறுத்தல்களின் அதிகப்படியான தாக்குதல்களிலிருந்து விடுபடாமல் இருக்கும்.
- சுவீடன், நார்வே, அயர்லாந்து, ஐஸ்லாந்து போன்ற வளர்ந்த நாடுகள் எந்தவொரு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளாது.
- ஒட்டு மொத்தமாக 16 நாடுகள் எந்தவொரு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளாது.

## மனித மூலதனக் குறியீடு

- உலக வங்கியானது மனித மூலதனக் குறியீடு 2020 திருத்திய பதிப்பு : கோவிட் – 19 நோய்த் தொற்றுக் காலத்தில் "மனித மூலதனம்" என்ற பெயர் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது நாடுகளிடையே மனித மூலதனத்தின் முக்கியக் கூறுகளை எடுத்துக் காட்டுகின்றது.
- இந்தியாவானது 2020 ஆம் ஆண்டில் 116வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டு உள்ளது.
- கடந்த ஆண்டில் இந்தியாவானது 157 நாடுகளிடையே 115வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டு இருந்தது.
- இந்த ஆண்டில் இந்தியாவானது 174 நாடுகளிடையே 116வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- எனினும் இந்தியாவின் மதிப்பெண் ஆனது 2018 ஆம் ஆண்டில் 0.44லிருந்து 2020 ஆம் ஆண்டில் 0.49 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்திலும் ஹாங்காங், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் அதற்கடுத்தடுத்த இடங்களிலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

### *மனித மூலதனம்*

- இது சமூகத்தின் திறன் மிக்க உறுப்பினர்களாக தங்களது திறன்களை உணரச் செய்வதற்காக வேண்டி தங்களது வாழ்நாளில் மக்கள் அடைந்த அறிவு, திறன்கள் மற்றும் ஆரோக்கியத்தைக் கொண்டுள்ளது.



## உலகப் பொலிவுறு நகரக் குறியீடு

- தொழில்நுட்பம் மற்றும் வடிவத்திற்கான சிங்கப்பூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேலாண்மை வளர்ச்சி மையம் என்ற நிறுவனமானது 2020 ஆம் ஆண்டின் உலகப் பொலிவுறு நகரக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டில் ஹெல்சிங்கி மற்றும் ஜுரிச் ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- ஹைதராபாத் ஆனது 85வது இடத்தைப் பிடித்த (2019 ஆம் ஆண்டில் 67வது இடம்) முன்னிலையில் உள்ள ஒரு இந்திய நகரமாகும்.
- இதர 3 இந்திய நகரங்களான புது தில்லி (68லிருந்து 86வது இடம்), மும்பை (78லிருந்து 93வது இடம்), பெங்களூரு (79லிருந்து 95வது இடம்) ஆகியவை இந்தத் தரவரிசையில் குறிப்பிடத்தக்க அளவில் பின்தங்கியுள்ளன.

**Top 10 Smart Cities 2020**


| Rank | City |
|---|---|
| 1 | Singapore |
| 2 | Helsinki, Finland |
| 3 | Zurich, Switzerland |
| 4 | Auckland, New Zealand |
| 5 | Oslo, Norway |
| 6 | Copenhagen, Denmark |
| 7 | Geneva, Switzerland |
| 8 | Taipei, Taiwan |
| 9 | Amsterdam, Netherlands |
| 10 | New York, United States |

**INDIAN CITIES**

| City | Rank | Chg in rank |
|---|---|---|
| Hyderabad | 85 | -18 |
| New Delhi | 86 | -18 |
| Mumbai | 93 | -15 |
| Bengaluru | 95 | -16 |

## நாசாவின் தலைமையில் தாழ் வெப்ப மண்டலம் குறித்த ஆய்வு

- ஒரு அறிக்கையின்படி, பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் வெளியிடப் படுவது தொடர்ந்தால், கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிகாவின் பனித்தட்டுகள் 2100 ஆம் ஆண்டில் உலகளாவிய கடல் மட்ட உயர்வான 38 செ.மீ. என்ற அளவினை விட அதிகமாக அடைந்திட இந்த இரண்டும் பங்களிக்கும்.
- குறைந்த உமிழ்வுகள் நிலையில், பனித் தட்டின் இழப்பானது உலக கடல் மட்ட உயர்வை 1.3 அங்குலம் அதிகரிக்கச் செய்யவிருக்கின்றது (3 செ.மீ).
- இந்தக் கண்டுபிடிப்புகள் கடல்கள் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் குறித்த காலநிலை மாற்றம் மீதான அரசாங்கங்களுக்கிடையேயான குழுவின் 2019 ஆம் ஆண்டு சிறப்பு அறிக்கையுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் உள்ளது. இந்த சிறப்பு அறிக்கை புவியின் மேற்பரப்புப் பகுதியில் உள்ள நீர் திட நிலையில் உள்ளதாகக் கூறுகின்றது.



## நீடித்த மீட்பு குறித்த சிறப்பு அறிக்கை

- கோவிட் – 19 நோய்த் தொற்றுக் காலத்தில் சர்வதேச ஆற்றல் முகமையானது (IEA - International Energy Agency) நிதி ஆயோக்குடன் இணைந்து "நீடித்த மீட்பு குறித்த ஒரு சிறப்பு அறிக்கையை" வெளியிட்டுள்ளது.
- இது IEA-ன் முதன்மைத் தொடரான உலக ஆற்றல் கண்ணோட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.
- இது ஆற்றல் அமைப்புகளை தூய்மையானதாகவும் தாங்கும் திறனுள்ளதாகவும் ஏற்படுத்தும் அதே வேளையில் அடுத்த 3 ஆண்டுகளில் பொருளாதாரத்தைப் புத்துயிர் பெறச் செய்வதற்காகவும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காகவும் அதிக எண்ணிக்கையிலான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கின்றது.
- சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்த, வேலைவாய்ப்பை ஏற்படுத்த, உமிழ்வுகளைக் குறைக்க உதவும் ஆற்றல் தொடர்பான முதலீடுகள் மற்றும் கொள்கைகள் குறித்து விவரிக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★